Registered as a News Paper in Sri Lanka

පිටු 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්

ஆக. 03 - 09, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TA... முரசு 673

# வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம்!

ஒரு முத்தம் 25லட்சம்!

போவோம்! ரசிப்போம்!

நெருப்பு



## பயங்கரவாதத்திடம் தோற்றுப்போகும் ஐரோப்பிய ஒன்றியம்!

சிம்பு நல்லவனுமில்லை; வல்லவனுமில்லை! ரீமா சென்

## நயன்தாராவுக்குத் தடை!

## இஸ்ரேல் நடத்துவது அடாவடித்தனம்!

# ஆன்மீகம்

## முகம் பொலி கருணை போற்றி!

கருணை என்னும் தெய்வத்தன்மை இல்லாதவர் எத்தனை முறை கருணை வேண்டிப் பிரார்த்தனை செய்த போதிலும், இறைவனது கருணை கிட்டுமென்றோ, கிட்டவேண்டுமென்றோ எண்ணுவதில் எவ்விதப் பயனையும் அடைய முடியாது என்பதனை ஏற்கனவே ஞானிகளும் மெய்யடியார்களும் கூறிவிட்டார்கள். மேலும், அதற்குச் சான்று பகர்வது போல் தற்காலக் கவிஞர்களும் சில கருத்துக்களைச் சொல்லாமலில்லை. அதற்கு உதாரணமாக, "கருணை பொங்கும் உள்ளம் அது கடவுள் வாழும் இல்லம்" என்னும் வரிகள் நல்லதோர் எடுத்துக்காட்டாகவுள்ளது. ஆதலின் மனித முகங்களில் தோன்றும் கருணையானது இதயத்தில் தோன்ற, கண்கள் வழியாகப் பிரகாசிப்பதால், முகத்துக்கே பொலிவைக் கொடுக்கின்றது என்பது தெளிவாகிறது.

'மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொலி கருணை போற்றி!"

-என். எஸ். ராஜா, தம்பலகமம்.



## பலமளிக்கும் தேவன்!

"உனக்குப் பலமளிப்பவரான என் மூலமாக நீ அனைத்தையும் செய்ய முடியும்" - (பிலிப் - 4:13).

ஆம், சகோதர, சகோதரிகளே! கர்த்தர் சகல வல்லமையும் கொண்டவராக இருக்கிறார். அவர்தான் அகிலத்தையே உருவாக்கிய சிருஷ்டிகர். இந்த உலகமே அவரால் தான் இயங்குகிறது. இதை நம்மில் புரிந்து கொண்டவர்கள் எத்தனை பேர்? கர்த்தரை முழு மனதுடன் விசுவாசித்து அவர் வழி நடப்பவர்களிடம் தேவன் கூடவே இருப்பார். அவர் மகிமை அளப்பரியது.

நம்மால் செய்ய முடியாத எத்தனையோ காரியங்களில் கூட நமக்குப் பலமளித்து உதவ கர்த்தர் எப்போதும் சித்தமாயிருக்கிறார். எனக்குப் பலம் இல்லையே என்று ஏங்குவதை விடுத்து, என் தேவன் என்னோடிருக்கிறார் என்று இதய சுத்தியுடன் நினைப்பவர்களுக்கு, தேவனின் மூலமாகப் பலம் வந்தடையும். அவர் நமக்குப் பலமளித்து நமது தேவைகளை நிறைவேற்றுவார். கர்த்தரைத் துதிப்பவர்கள் அவர் கருணையை நிச்சயம் பெறுவார்கள்.

-வி. எஸ். பிரான்சிஸ், ஹெந்தளை.

## கை நீளமானவரே முதலில் என்னைச் சேர்வார்!

நபி (ஸல்) அவர்களின் மனைவியரில் ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் "உங்களது மரணத்திற்குப் பின் எங்களில் யார் முதலில் வந்து உங்களைச் சேர்வார்?" எனக் கேட்டார். அதற்கு, "உங்களுள் கை நீளமானவரே" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். உடனே அவர்கள் ஒரு குச்சியை எடுத்துத் தங்களின் கைகளை அளந்து பார்த்தபோது ஸவ்தா (ரலி) யின் கைகளே மிகவும் நீளமானவையாக இருந்தன. ஸைனப் (ரலி) இறந்த பிறகுதான் கை நீளமானவர் என்பது அதிகம் தர்மம் செய்பவரைக் குறிக்கிறது என்பதை நாங்கள் அறிந்தோம். ஸைனப் அவ்வாறு அதிகம் தர்மம் செய்பவராக இருந்ததால்தான் நபி (ஸல்) அவர்களை முதலில் அடைந்தார். மேலும் அவர் தர்மம் செய்வதை மிகவும் விரும்பக் கூடியவராகவும் இருந்தார்.

**அறிவிப்பு** : ஆயிஷா (ரலி)
புகாரி. 1420.

-மனாப் மனாஸிர், புதிய காத்தான்குடி

## கவிதைப் போட்டி இல.670




### பரிசுக்குரிய கவிதை

### நிலை...

நாலாப் பக்கமும் யுத்தம்
பலிக் களத்தில் நாம்
பாசாங்கு புரியும்
மிதவாதிகள்
பார்வையிடும் அயல்
நாடுகள்
இதுதான் எங்கள் நிலை...

-எம்.எஸ்.றமீன் பாஸி,
வாழைச்சேனை - 04.

## கவிதைப் போட்டி இல.673



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 08.08.2006.

கவிதைப் போட்டி இல.673
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### இரை

பசியில் வாடும்
எனக்கு இரையளிக்க
வக்கில்லாதவர்கள்
என்னையே இரையாக்க
வாங்கி வந்த
யுத்த டாங்கியிது.

-அ.சந்தியாகோ,
கண்டி.




### காக்கலாம்! அழிக்கலாம்!

தீபத்தின் ஒளியால்
திருக்குறளும் படிக்கலாம்;
தெருக் குடிசையையும்
எரிக்கலாம்!
நவீன ஆயுதங்களால்
நாட்டையும் காக்கலாம்;
நாட்டையும் அழிக்கலாம்!

-நா.ஜெயபாலன்,
பிபிலை.

### உணர்வு

கர்ப்பத்தில் பத்து மாதம்
சுமந்து வெளி உலகைப்
பார்க்க வைத்தாள்
உன் அன்னை!
அவளை மறந்து எப்படி
உன்னால் ஆயுதம் தூக்க
முடிந்தது?

-மு.சிவராதினி,
அக்கரைப்பற்று.

### துப்பாக்கி...

எத்தனையோ ஆயிரம்
உயிர்களைப்
பலி எடுத்திருக்கும்
இயந்திரமே!
உன்னால் ஒரு உயிரைத்
தரமுடியுமா சொல்?
முடியாது உன்னால்,
ஏனென்றால் -
இருதயமே இரும்பான
மனிதர்கள் மத்தியில்
இருதயமேயில்லாத இரும்பு நீ?

-ஏ.எஸ்.எம்.ரவூப்,
கொழும்பு - 15.

### ஆயுதம்

அநியாய ஆக்கிரமிப்புக்கு
எதிராகப் பயன்படுத்தும்
வரை - நாகரிகம்,
அநியாய ஆக்கிரமிப்புக்காக
பயன்படுத்தப்படும்
போது - அநாகரிகம்.

-பை.யூசுப்,
கிராண்ட்பாஸ்.

### அழிவுப் பெருக்கி

அயல் நாடுகளிலும்
வறிய நாடுகளிலும்
கை வரிசையைக்
காட்டும்
வல்லரசுகளின் வாரிசு
சீறிவிட்டால்
இருப்பிடமெல்லாம்
சிதிலம்
உயிர்கள் பலியாகும்
ஏராளம்
ஆதலால் -
தம்பி கொஞ்சம்
தள்ளியிரு! இது -
அழிவுகளின் மூலம்!!

-ஏ.ஆர்.எம்.நதார்,
ஜின்னாநகர்.

### யுத்தம் வேண்டாம்!

உரிமைக்காய் போராடி
உயிரை, பொருளை
அனைத்தையும் இழந்தோம்
ஆயுதம் ஏந்தியதால்தான்.
சமாதானம் கிடைக்கணும்
அதற்காய் போராடணும்
ஆயுதங்களை கைவிட்டு
அகிம்சை வழிகளில்.

-அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் - 01.

### பின்னணியில்...

ஆயுதக் கலாசாரத்தின்
பின்னணியில்...!
சின்னஞ்சிறார்களின்
கரங்கள்தான்
ஓங்கியிருப்பது
மறுக்கமுடியாத
உண்மை!!

-மீராமுகைதீன் - ஹாலீத்,
ஏறாவூர் - 03ஏ.

# உங்கள் பக்கம்

## இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் கடந்த வருடம் புத்தளம் - ஆலங்குடா 'பி' முகாம் என்பவற்றிற்கு தனது போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டது. அதனால் ஆலங்குடா முகாமில் வசிக்கும் பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் உரிய வேளையில் தமது கருமங்களை நிறைவேற்றினர். 6 மாதங்களின் பின் திடீரென எவ்வித முன் அறிவித்தலுமின்றி பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்களும், மாணவர்களும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர். மாணவர்கள் உரிய நேரத்தில் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் இருப்பதாகவும், வேலைக்குச் செல்வோர் உரிய நேரத்தில் செல்லமுடியாமல் அவதிப்படுவதாகவும், கூறுகின்றனர். ஆலங்குடா முகாமில் இருந்து பிரதான வீதிக்குச் செல்ல வேண்டுமாக இருந்தால் ஆட்டோவுக்கு அதிக பணத்தைக் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது எனவும் கூறுகின்றனர்.

பொருளாதாரக் குறைவும் வறுமைநிலையிலுள்ள ஆலங்குடா மக்கள், ஆலங்குடாவில் இருந்து பிரதான வீதிக்குக் கால்நடையாகவே வருவதாகத் தெரிவிக்கின்றார்கள். ஆட்டோ சாரதிகள் கேட்கும் பணத்தைக் கொடுத்து பிரயாணம் செய்வதற்கு தம்மிடம் போதியளவு பணம் இல்லையெனவும் காரணம் கூறுகின்றனர்.

எனவே, அன்றாடக் கருமங்களை உரிய வேளையில் செய்வதற்கும், இலகுவான முறையில் குறைந்த கட்டணத்தில் பயணம் செய்வதற்கும் நிறுத்தப்பட்டுள்ள பஸ் சேவையை மீண்டும் தொடர்வதற்கு ஆவன செய்யுமாறு இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகளை ஆலங்குடா 'பி' முகாம் மக்கள் வேண்டுகின்றனர்.

- முல்லை றஸீஹா,
முந்தல்

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

### தடைகளை படிக்கல்லாக்கிடு!

அன்றிலிருந்து இன்றுவரை
தினமுரசு
பல சவால்களையும்,
தடைகளையும்
எதிர்கொண்டுள்ளதை நான்
நன்கறிவேன். துப்பாக்கிகளுக்கு
தலைவணங்கி உண்மைகளை
பலி
கொடுக்கும் ஊடகங்களுக்கு
மத்தியில் உண்மைகளை
உறுதியுடனும்
துணிவுடனும் வெளிப்படுத்தி
நீ என்றும் ஜொலிக்க வேண்டும்.

-தி.நிர்மன்,
மருதமுனை.

### உனக்காக நான்...!

ஒவ்வொரு வியாழனும் விடியும்
போது உன் நினைவுகளுடன்தான்
கண்விழிப்பேன். எனது ஆக்கங்கள்
பலவற்றை உனக்கு அனுப்பி விட்டு
அதில் ஏதாவதொன்றை சுமந்து
வருவாய்
என்ற ஆதங்கம் என்னை
மிகவும் கஷ்டப்படுத்தும். சில
வேளைகளில்
நீ என்னை ஏமாற்றினாலும் பல
நாள்
என்னைச்
சந்தோஷப்படுத்தியிருக்கிறாய்.
உன் வளர்ச்சிக்காக என்றும் நான்
வாழ்த்திக் கொண்டிருப்பேன்.

-எஸ்.தீசன்,
நெல்லியடி.

### தினமுரசே!

நீள ஆள வேண்டும்
கொட்டும் முரசோ
ஒலிர்த்திடும் ஓசை
சிறிது தூரமே!
ஆனால் நீயோ
உலகெங்கும்
ஓங்கி ஒலிப்பதுதான்
உனது தனித்துவம்.

-வி.தேவன்,
சுவிஸ்.

தினமுரசு வாரமலரில்
அனைத்து
விடயங்களையும்
அறிந்து கொள்ள
முடிகிறது.
குறிப்பாக லேடிஸ்
ஸ்பெசல், தகவல்பெட்டி,
சினிமா போன்றவை
என்னை
மிகவும் கவர்ந்துள்ளது.
தேன்கிண்ணம் பகுதி
வளர்ந்து
வரும் கவிஞர்களுக்கு ஒரு
வரப்பிரசாதமாக உள்ளது.
உனது பணி தொடர
எனது வாழ்த்து.

-புவீந்திரன்,
வெள்ளவத்தை.

# மாவிலாறு நீர்த் தடையால் புலி இயக்க எதிர்ப்பில் புதிய அலை!

## திருமலை தன்னார்வத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் கருத்து

மாவிலாறு கால்வாய் அணைக்கட்டைத் திறந்துவிடுவதற்காகப் படையினரும், மூடப்பட்ட அணைக்கட்டைத் திறக்காமல் தடுப்பதற்காகப் புலிகளும் பெரும் ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதல்களில் ஈடுபட்டிருக்கும் இத் தருணத்தில், இருபத்தி ஐயாயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாமல் பெரும் அல்லற்படுவதாகத் திருமலை மாவட்டத் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள ஈச்சிலம்பற்றுக்கு அண்மையிலுள்ள மாவிலாறு அணைக்கட்டைக் கடந்த இருபதாம் திகதியளவில் புலிகள் மூடிவிட்டதால் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள சுமார் பதினொரு கிராமங்கள் தண்ணீரின்றி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கிளிவெட்டி, தங்கநகர், பாரதிபுரம் போன்ற தமிழ் விவசாயக் கிராமங்கள் உட்பட பள்ளிக்குடியிருப்பு, கங்குவெளி, தோப்பூர் போன்ற முஸ்லிம் கிராமங்களும் தண்ணீரின்றி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தேவபுர, நீளப்பொல தெஹிவத்த, ஸ்ரீலங்காபுர போன்ற சிங்களக் கிராமங்களும் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் முப்பதாயிரம் ஏக்கர் விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி தடுக்கப்பட்டதால் பயிர்கள் வாடிக் கருகியிருப்பதாகத் தன்னார்வத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.



மாவிலாறு அணைக்கட்டுப் பகுதி.

இந்த அணைக்கட்டுத் தடையால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள சுமார் பதினையாயிரத்திற்கும் மேற் பட்ட மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். குடி தண்ணீருக்குக் கூட வசதியில்லாத இம் மக்களுக்கு, நான்கைந்து நாட்களுக்குப் பின்னரே பௌசர்கள் மூலம் தண்ணீர் விநியோகிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை மாவிலாறு அணைக்கட்டுப் பகுதியைச் சுற்றி வாழும் தமிழ் விவசாயிகள் யுத்தம் மூளலாமென்ற அச்சம் காரணமாக ஆயிரக்கணக்கில் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். பிந்திக் கிடைத்த தகவல்களின்படி ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களுக்கு நிவாரண வசதிகளோ அடிப்படை வசதிகளோ இல்லையென்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

மாவிலாறு தொடர்பான மோதலில் படையினரே அதிக இழப்புகளைச் சந்தித்திருப்பதாகப் புலிகளும், புலிகளே அதிக இழப்புகளைச் சந்தித்திருப்பதாக படையினரும் வெறும் வாய்ப்பந்தல்களைப் போட்டாலும் உண்மை அதுவல்ல. இரு தரப்பினரும் மக்களை ஏமாற்றுவதற்காக வெறும் பிரசார யுத்தத்தில் ஈடுபடுகிறார்களென்றே அப்பிராந்தியத்தில் பணிபுரியும் தன்னார்வத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் கூறுகின்றனர். அப்பாவி மக்கள் மீதும் படையினர் மீதும் தாக்குதல்களைத் தொடுத்து வந்த புலிகள் மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீரைப் பயன்படுத்தி ஆரம்பித்திருக்கும் யுத்தம் அரசாங்கத்தின் மீதல்ல, அப்பாவி மக்கள் மீதே நடத்தப்படுகிறதென்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். ஓர் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினையில் புலிகள் மனிதாபிமானமின்றி நடந்து கொள்கிறார்களென்று சர்வதேச சமூகம் கருதுவதால் நீர் விநியோகம் தொடர்பான இந்த நிழல் யுத்தத்தில் அரசாங்கத்திற்கே கருத்தியல் ரீதியான வெற்றி கிடைத்துள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

# கண்ணிவெடித் தாக்குதல்களே தமிழ் மாணவர்களின் கல்விக்குக் குந்தகம்

## யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்

யாழ்.காங்கேசன்துறை வீதியில் யாழ்.இந்துக்கல்லூரி உப அதிபர் கிருஷ்ணகுமார் கடந்த 27ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதைக் கண்டித்து யாழ்.தமிழ் மாணவர் ஒன்றியம் என்று கூறப்படும் அமைப்பு, யாழ்.மாணவர்களின் பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத்தமை தமிழ் கல்விச் சமூகத்தைப் பாதிக்கும் செயலென்று தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத மேற்படி கல்லூரியின் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். புலிகள் நடத்திய கிளைமோர் குண்டு தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டதையடுத்தே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலைமைக்குப் படையினர் தள்ளப்பட்டனர். அப்போது தான் உப அதிபர் கிருஷ்ணகுமாரும் மேலும் இரண்டு குடிமக்களும் காயமுற்றிருக்கின்றனர். இராணுவத்தினர் வேண்டுமென்றே உப அதிபர் கிருஷ்ணகுமாரை இலக்கு வைத்துச் சுட்டிருந்தால் யாழ்.கல்வி சமூகத்தின் பகிஷ்கரிப்பு நடவடிக்கையை நியாயப்படுத்த முடியும். மக்கள் நடமாடும் பகுதிகளில் இவ்வாறான கிளைமோர் குண்டுத் தாக்குதல்களைப் புலிகள் நடத்தியிருக்காவிட்டால், உப அதிபர் கிருஷ்ணகுமார் காயமடைய வேண்டியத் தேவையேற்பட்டிருக்காது. அப்பாவி மக்களையும் வயது குறைந்த சிறுவர்களையும் மனநோயாளர்களையும் படையினர் மீது குண்டுகளை வீசித் தாக்குமாறு தூண்டி விடும் புலிகள், அவற்றை நிறுத்தினால் அப்பாவி மக்களின் உயிரிழப்புகளைத் தடுத்து நிறுத்த முடியுமென்று அந்த ஆசிரியர் சொன்னார். யாழ்.சத்திரத்துச் சந்தியில் கடந்த முதலாம் திகதி படையினர் மீது கைக்குண்டு வீசுமாறு தூண்டி விடப்பட்ட மனநோயாளி ஒருவர் படையினரின் பதில் துப்பாக்கிப் பிரயோகத்துக்கிலக்காகி உயிரிழந்தமையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இதேபோன்று கடந்த வாரம் உரும்பிராய் சந்தியிலுள்ள இராணுவக் காவலரண் மீது மோட்டார் சைக்கிளில் வந்து கைக்குண்டு வீசிய இளைஞரொருவரும் சிறுவனொருவனும் வேலிக்குப் பின்னால் பதுங்கியிருந்த படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி உயிரிழந்தமையும் இதற்கு உதாரணமென்றும் அந்த ஆசிரியர் சொன்னார்.

# தமிழ் பகுதிகளில் யுத்தச் சிகிச்சை முகாம்கள்

யுத்தகளத்தில் காயமடைபவர்களுக்கு சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சைகள் அளிப்பது தொடர்பான செயலமர்வுகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி கடந்த மாதம் நடத்தியுள்ளது. இலங்கையின் ஏனைய பாகங்களில் நடத்திய கருத்தரங்குகளின் தொடர்ச்சியாகவே இச்செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது. யாழ். போதனா ஆஸ்பத்திரி, மட்டக்களப்பு போதனா ஆஸ்பத்திரி, கிளிநொச்சி மருத்துவ சங்க நிலையம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட செயலமர்வுகளில் எண்பதுக்கு மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் பங்குபற்றினர். ஜெனிவாவைச் சேர்ந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியின் மருத்துவ நிபுணர் ஒருவர் இச் செயலமர்வுகளை நடத்தினர்.

# லெபனானில் சிக்கியுள்ள 95 ஆயிரம் இலங்கையர்களும் எங்கே?

லெபனான் மீதான இஸ்ரேலின் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அங்கு நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களின் நிலையென்னவென்று தெரியாமல் இங்குள்ள உற்றார், உறவினர்கள் அங்கலாய்க்கிறார்கள். சுமார் 96 ஆயிரம் இலங்கையர்கள் லெபனானில் பணிபுரிவதாகவும் இவர்களில் பெரும்பாலானோர் பணிப்பெண்களென்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இதுவரை சுமார் இரண்டாயிரம் பேரே நாடு திரும்பியுள்ளனர். "எனது மகள் லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் பணிப்பெண்ணாகக் கடந்த ஒன்றரை வருடங்களாகப் பணியாற்றி வருகிறார். இஸ்ரேல் தாக்குதல் ஆரம்பித்ததும் எனது மகளின் நிலைமையை அறிவதற்காகக் கொழும்புக்கு வந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடனும் வெளிவிவகார அமைச்சுடனும் தொடர்பு கொண்டு விசாரித்த போது சகலருமே தமக்கு எமது மகள் பற்றிய விபரங்கள் எதுவும் தெரியாதெனக் கையை விரித்து விட்டனர். தனியார் வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றினூடாகச் சென்றதால் அவர்களிடம் சென்று விசாரிக்குமாறு அதிகாரிகள் தெரிவித்தனர். மகள் பணிபுரிந்து வந்த வீட்டின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முயன்றும் எவ்வித பயனுமில்லை" என்கிறார் மட்டக்களப்பு வந்தாறுமூலையைச் சேர்ந்த யோகேஸ்வரி என்ற இளம்பெண்ணின் தகப்பனாரான சிங்காரவேல் என்பவர். இஸ்ரேலின் மிலேச்சத்தனமான தாக்குதல்களால் தென் லெபனான் மட்டுமல்ல, தலைநகர் பெய்ரூட் சிரிய நாட்டின் எல்லையோரம் அமைந்துள்ள பாதைகள், பாலங்கள் யாவுமே குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டுள்ளன. லெபனானில் வாழும் இலங்கையர்கள் அனைவரும் பெய்ரூட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வந்து சேர யுத்தச் சூழ்நிலைகள் அனுமதிக்காது என்பது உண்மைதான். ஆனாலும் ஏனைய நாடுகளின் மனிதாபிமான உதவிகள், தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் ஒத்தாசைகள் ஆகியவற்றைப் பெறுவதற்கு இலங்கை அதிகாரிகள் துரிதமாகச் செயற்பட வேண்டுமென்கிறார் பாதிக்கப்பட்டு நாடு திரும்பிய கொலன்னாவையைச் சேர்ந்த நிமால் குணவர்த்தன என்ற இளைஞர்.

# தற்கொலைத் தாக்குதலா? தகுந்த பதிலடியா?

கருணா தரப்புப் புலிகள், தற்கொலைத் தாக்குதல்களுக்குத் தயாராகி வருவதாகவும் இதற்கெனப் பலரைப் பயிற்றுவித்து வருவதாகவும் வெளிவந்த தகவல்கள் தவறானவையென்று அக் குழுவின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். பிரபாகரனின் புலிகள் இயக்க அராஜக நடவடிக்கைகளை எதிர்த்தே நாம் பிரிந்து போனோம். எம்மை அமைதியாகச் செயற்படவிடாமல், எம்மீது தாக்குதல்களைப் பிரபாகரனின் புலிகள் தொடுப்பார்களேயானால் தகுந்த பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோமென்றும் அவர் சொன்னார்.

# கண்காணிப்புக் குழுவிலிருந்து சுவீடன் வெளியேறக் காரணம் இதுதான்!

"புலிகள் இயக்கத்தின் நிபந்தனையை ஏற்று நாம் எமது நாட்டுக் கண்காணிப்பாளர்களை விலக்கிக் கொள்ளவில்லை. எமது யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பைக் கருதியே படிப்படியாக செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் எமது நாட்டவர்களை இலங்கையிலிருந்து திருப்பி அழைக்க உள்ளோம் என்று சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சின் பெண் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். புலிகள் இயக்கத்தின் வன்செயல் நடவடிக்கைகள் அதிகரித்தமையடுத்து ஐரோப்பிய ஒன்றியம் அந்த இயக்கத்தின் மீது முற்றுமுழுதான தடையை விதித்தது. இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் சுவீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகிய மூன்று நாடுகளும் கண்காணிப்புக் குழுவிலிருந்து விலக வேண்டுமென்று புலிகள் இயக்கம் விடுத்த காலக்கெடு தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார். இந்த மூன்று நோர்டிக் நாடுகளும் கண்காணிப்புக் குழுவிலிருந்து விலகிவிட்டால் இப்போது நோர்வேயும் ஐஸ்லாந்தும் மட்டுமே இதில் அங்கம் வகிக்கின்றன." புலிகள் இயக்கம் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்காக எம்மாலான அனைத்து

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# இலங்கை வங்கிக் கிளைகளில் லங்காபெல் கட்டணம் செலுத்த வசதி

லங்கா பெல்லின் கட்டணங்களை நாடு முழுவதுமுள்ள இலங்கை வங்கியின் 302 கிளைகளில் செலுத்தக்கூடிய ஒப்பந்தமொன்றில் லங்கா பெல் நிறுவனமும் இலங்கை வங்கியும் கைச்சாத்திட்டன. கணக்கு வைத்திருப்பவர்களும், கணக்கு வைத்திருக்காதவர்களும் இந்தக் கட்டண செலுத்தல் வசதியை உபயோகிக்க முடியும். இலங்கை வங்கியின் 302 கிளைகளில் 203 கிளைகள் ஒன்லைன் மூலம் இணைக்கப்பட்டு இருப்பதனால், இந்தக் கிளைகளில் கட்டணங்களைச் செலுத்தும் லங்கா பெல் வாடிக்கையாளர்களின் லங்கா பெல் கணக்கு உடனடியாகப் பதிவு செய்யப்படும். ஒன்லைன் மூலம் இணைக்கப்படாத கிளைகளில் கட்டணத்தை செலுத்தினால், அடுத்த நாளில் லங்கா பெல் கணக்கில் வரவு வைக்கப்படும். இலங்கையில் சிடி. எம்.ஏ. தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்திய முதலாவது தனியார் நிலையான தொலைபேசி அமைப்பான லங்காபெல், விசேடமாக வெளிப்பிரதேசங்களில், 200,000 இற்கும் அதிகமான அத்தகைய இணைப்புக்களை வழங்கியுள்ளது. கிராமங்களை இணைக்கும் பிரதான நோக்கத்திலேயே கடந்த வருடம் சிடி.எம்.ஏ. தொலைபேசியை அது அறிமுகப்படுத்தியது. தொலைபேசித் துறையில் இலங்கையருக்கு முழுமையாக சொந்தமான ஒரே நிறுவனம் என்ற வகையில், நாடு முழுவதும் வேகமாக அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களின் சௌகரியத்துக்காக இது போன்ற கட்டண செலுத்தல் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.




# யாழ்.ஆயரின் சமாதானப் பணி தொடர அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து

வன்முறையும் வன்முறையில் விளைந்த வடுக்களும் எமது மக்களின் தோள்களில் துயரச் சிலுவைகளைத் தொடர்ந்தும் ஏற்றி வருகிறது. சிலுவைகளை இறக்கி வைத்து, சுதந்திரமான விருப்பை நோக்கி எமது மக்கள் நடப்பதற்கு எதிர்காலத்திலும் நீங்கள் தொடர்ந்தும் பணிபுரிவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எமது தேசத்தில் சமாதானம் வளர்ந்து செழிக்க வேண்டுமானால், மக்களின் மனங்களில் அந்த சமாதானம் முதலில் பிறக்க வேண்டும் என்று யாழ்.ஆயர் மேதகு ஆண்டகை தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரின் வெள்ளி விழாவை முன்னிட்டு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் சமூக சேவை, சமூக நலத்துறை அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

உலகம் சமாதான யுகத்தில் கண்விழித்து தெழுவதற்கு மதங்களின் பங்களிப்பும் அவசியம்! அவசியம் உணர்ந்து ஆற்ற வேண்டிய பணிகள் இன்னமும் எங்கும் விரிந்து கிடக்கின்றன. இருபத்தைந்து ஆண்டுகளாக நீங்கள் அயராது ஆற்றிய பணி தொடர்ந்து இன்று வெள்ளி விழா காணும் உங்களை எமது மக்களின் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றேன். எமது தேசத்தில் சமாதானம் மலர்ந்து செழிக்க வேண்டுமேயானால் மக்களின் மனங்களில் அந்த சமாதானம் முதலில் பிறக்க வேண்டும். சமாதானம் குறித்த எண்ணங்களை எமது மக்களிடையே ஆண்டகையாக இருந்து நீங்களும் போதித்து வருகின்றீர்கள்! வன்முறையால் வருத்தப்பட்டு துயரங்களை சுமக்கும் எமது மக்களின் மனங்களில் சமாதான விருப்பங்கள் தோன்றியிருந்தாலும் அதற்கு செயல் வடிவம் கொடுப்பதில் இன்று எழுந்திருக்கும் தடைகளை அகற்ற வேண்டிய புனிதப்பணி இன்னும் உங்கள் தோள்களிலும் இன்று சுமத்தப்பட்டிருக்கின்றது.

இந்த வன்முறையின் இருட்டில் இருந்து எமது மக்களை மீட்டெடுத்து ஒளி வீசும் சமாதானத்தை நோக்கி நகர்த்தி செல்வதற்கு நீங்களும் பங்களிப்பீர்கள் என நான் நம்புகின்றேன். ஆரோக்கியத்துடனும் உடல் வலுவோடும் உள்ளத்தென்போடும் உங்கள் பணி தொடர எமது மக்களுடன் இணைந்து ஈ.பி.டி.பி.யும் உங்களை வாழ்த்தி மகிழ்கின்றது.

-இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# உலகத் தமிழர் இயக்கச் செயற்பாடுகள் பற்றி அமெரிக்காவில் விசாரணை

நியூயோர்க்கின் ஜமெய்கா உயர்நிலைப் பாடசாலையில் கடந்த 29ஆம் திகதி நடத்தப்பட்ட தமிழ்ப் பிள்ளைகளுக்கான விளையாட்டுப் போட்டியில், அமெரிக்க தேசியக் கொடியோடு புலிகள் இயக்கத்தின் இலச்சினை பொறித்த கொடியும் ஏற்றப்பட்டதாகப் புலிகளின் இணையத்தளத்தில் வெளிவந்த செய்தி அமெரிக்காவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள ஸ்ரன், புரொன்க்ஸ், நியூஜேர்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஞாயிறுக்கிழமைப் பாடசாலைகளில் கல்வி கற்கும் தமிழ் சிறுவர், சிறுமியர்கள் இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகளின்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# நான்காவது ஈழ யுத்தத்துக்கு முஸ்தீபு

திருகோணமலைக் கடற்படைத் தளத்துக்கு அண்மையிலுள்ள கடற்பரப்பில் வைத்து கடற்படைக் கப்பலொன்றினைத் தாக்கப் புலிகளின் தற்கொலைப் படகுகள் எடுத்த முயற்சி வெற்றிபெற்றிருந்தால், நான்காவது ஈழயுத்தம் நிச்சயமாக திருகோணமலையிலேயே வெடித்திருக்கும். வடக்கிலிருந்து 854 சிப்பாய்களுடன் பயணித்துக்கொண்டிருந்த கப்பல் மீது தாக்குதல் நடத்தப் புலிகள் எடுத்த முயற்சியை கடற்படையினர் முறியடித்தனர். 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி மூன்றாவது ஈழயுத்தம் திருகோணமலையில் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. சந்திரிகா குமாரதுங்க அரசு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போது திருமலையில் இரு கடற்படைக் கப்பல்களை தாக்கியதன் மூலம் இந்த யுத்தத்திற்கு வித்திடப்பட்டது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாட்டு!

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**கண்காணிப்புக் குழுவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் விலகிக்கொள்ள முடிவு செய்துள்ளதானது, புலிகளுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும், சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகள் தமது உறுப்பினர்களை திருப்பி அழைக்கவுள்ளன. செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக இந்த நாடுகளின் பிரதிநிதிகள் சென்று விட வேண்டுமென புலிகள் கூறியிருந்தனர். இதற்குப் பதில் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியே தெரிவிக்கப்பட்டதானது இவ்விவகாரம் மீதான எதிர்பார்ப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.**

**மொத்தமாக இருக்கும் 57 பேரில் 37 பேர் இவ்வாறு விலகவுள்ளதால் எஞ்சியிருக்கும் 20 பேரின் செயற்பாடுகள் எந்த அளவில் கண்காணிப்புப் பணியைச் செய்ய உதவப் போகிறது என்பதையும், புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதில் எதிர்காலத்தில் என்ன விதமான நெருக்கடிகள் இருக்கப்போகின்றன என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஒருவேளை, கண்காணிப்புக் குழுவுக்கு இலங்கையில் வேலை இல்லாமலும் போகக்கூடும்.**

**மாவிலாற்றில் தண்ணீரை புலிகள் தடுத்து வைத்திருப்பதும், தண்ணீரை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காக அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதும் பாரிய யுத்தமொன்றுக்கான பாதையை இலகுபடுத்தியுள்ளது. புலிகள் மனிதாபிமானமாகச் சிந்தித்திருந்தால் இந்த நிலையைத் தவிர்த்திருக்கலாம் என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன.**

**இரண்டு தரப்புகளுக்குமிடையில் நம்பிக்கைகள் வலுவாகக் குறைந்து, சிறு பொறி பட்டாலே பெரும் சுவாலையோடு தீப்பற்றிக்கொள்ளக் கூடிய நிலைமையில் தான் மாவிலாறு விவகாரத்தைப் புலிகள் ஆரம்பித்தனர் என்ற நியாயங்கள் தற்போது சுட்டிக்காட்டப்படுகின்றன. நிலைமை மோசமடையும் வரை வன்முறைகளையும், படுகொலைகளையும் தூண்டிவிடும் சக்திகளாக இருந்தவர்கள், இப்போது நியாயம் பேசுவது கண்டிக்கப்பட வேண்டியதாகும். மாவிலாறு விவகாரத்தில் விட்டுக்கொடுப்புகளுக்கு வாய்ப்பு இருந்தபோதே அதை உதாசீனம் செய்து, இன்று ஒரு ஆயுத மோதலாக அப்பிரச்சினையை மாற்றியிருக்கும் புலிகள், இனப்பிரச்சினையில் இணக்கப்பாடுகளையும், விட்டுக்கொடுப்புகளையும் செய்து இலங்கையில் நிரந்தர சமாதானம் மலர அர்ப்பணிப்போடு உழைப்பார்கள் என்று நம்ப முடியாது.**

**அதுபோல இலங்கை அரசாங்கம், மாவிலாறு மக்களுக்குத் தண்ணீரைப் பெற்றுக் கொடுக்க அரை மைல் தூரம்தான் இருப்பதாக நான்கு நாட்களாகக் கூறிக் கொண்டு தன் பலவீனத்தை மறைக்க முற்படும்போது, எப்படி நாளைக்குப் பாரிய யுத்தத்தை நடத்தி இலங்கை மண்ணில் சமாதானத்தை நிலைநாட்டப் போகிறது என்ற யதார்த்தமான கேள்வியும் எழாமல் இல்லை.**

**ஆகவே ஆயுத மோதல்கள் என்பது சமாதானத்தைக் கொண்டு வரப் போவதில்லை. அது வெறும் உயிர், உடைமை, அழிவுகளுக்கு மாத்திரமே வழிவகுக்கும். அரசும் - புலிகளும் இப்படிப் புரிந்துணர்வு ஒப்பந்தமெனும் போர்வைக்குள் தாக்குதல்களை நடத்தமுடியும் என்றால் சர்வதேசத் தலையீடு, கண்காணிப்பு என்பதெல்லாம் இலங்கையின் சமரச முயற்சிகளைப் பொறுத்தவரை அடிமுட்டாள்தனம்தான். இந்த முட்டாள்தனம் தொடர்வதா? இல்லையா? மாவிலாறு விவகாரத்தின் விளைவு தெளிவுபடுத்தும்.**

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம்!

**இந்த** நாட்டில் இனப் பிரச்சினையென்றவொன்றில்லையென்றும் எனவே தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கத் தேவையில்லையென்றும் சிங்களத் தேசியவாதக் கட்சியான ஜே.வி.பி.யும் கடும்போக்குச் சிங்கள பௌத்த கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் கூறுகின்றன. 1971ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து வசனம் பேசிய ஜே.வி.பி., இவ்வாறு கீழ்நிலைக்குத் தாழ்ந்திருப்பது வேதனைக்குரியது. ஜே.வி.பி. இனவாதக் கட்சியல்லவென்ற உண்மையை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அக் கட்சி முன்வைக்கும் யோசனைகளும், தமிழ் மக்களையும் புலிகளின் இயக்கத்தின் பயங்கரவாத நடவடிக்கைகளையும் பிரித்துப் பார்க்க முடியாமல் திண்டாடும் அக்கட்சியின் நிலைப்பாடுமே தமிழ் மக்களைப் பயமுறுத்துகிறது.

இலங்கையைச் சிங்கள பௌத்த மக்கள் மட்டுமே வாழும் நாடென்று கருதும் மஞ்சள் காவியுடைக் கட்சியின் கொள்கையைச் சிங்கள மக்களே கருத்தில் கொள்ளவில்லையென்பதை நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இலங்கையின் மூன்றாவது பெரிய கட்சியென மார்தட்டிக் கொள்ளும் ஜே.வி.பி., அறுபது வருடங்களுக்கு மேலாக நீண்டு வளர்ந்திருக்கும் இனப் பிரச்சினையை வெறுமனே பயங்கரவாதப் பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது. புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகளுக் கும் தமிழ் மக்களின் அவலங்களுக்குமிடையிலான வித்தியாசங்களை ஜே.வி.பி. போன்ற போராட்ட முதிர்ச்சிபெற்ற அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் மீது, குறிப்பாக தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த இன ஒடுக்குமுறைகளும், அடாவடித்தனங்களும், தாக்குதல்களுமே தமிழ் இளைஞர்களை நியாயம் கோரி ஆயுதமேந்த வைத்தன என்பதே உண்மையாகும். தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் அரசாங்கத்தின் அனுசரணையோடு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், 1956இல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம், அரசாங்க வேலைவாய்ப்பிலும் கல்வியிலும் தமிழ் மக்கள் ஓரங்கட்டப்பட்டமை போன்ற பாகுபாடுகள், 1983இல் தமிழ் மக்கள் மீது அரசின் அனுசரணையோடு திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல்கள் போன்றவை பரிணாம வளர்ச்சி பெற்றதையடுத்தே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் வெடித்தது. இனப் பிரச்சினைக்கான காரணங்களையறிந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் சிங்கள அரசுகள் ஈடுபடத் தவறியமை பிரச்சினையின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டிருக்க முடியும். ஆனால் பிரேமதாசா அரசாங்கமும் புலிகள் இயக்கமும் கையாண்ட தவறான அணுகுமுறைகளாலேயே இனப்பிரச்சினை மோசமாக வெடித்ததென்பதையும் மறுப்பதற்கில்லை. புலிகள் இயக்கம், தீர்வுக்கு வரவிரும்பாமல், தனிநாட்டுக் கனவோடு இன்றுவரை பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறதென்பதையும் மறுக்க முடியாது. ஆனால் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்களான வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், தமிழ் பேசும் மக்களை ஒடுக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியென்பதை யாரும் மறுக்க முடியாது. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்களின் நிலத் தொடர்புகளைத் துண்டிப்பதற்காகவும் அவர்களின் மண்ணிலேயே அவர்களைச் சிறுபான்மையினராக மாற்றுவதற்காகவுமே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்ற உடனேயே மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை, பிரஜாவுரிமை ஆகியவை பறிக்கப்பட்டன. இதேபோன்று கிழக்கில் 1948இலேயே அரசின் அனுசரணையோடு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இதைப்போன்றே சுதந்திரத்துக்குப் பின்னர் மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை, முல்லைத்தீவு, வவுனியா உட்பட பல்வேறு பூர்வீகத் தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. மணலாறு எனப்படும் தமிழர்களின் பூர்வீகக் கிராமத்தில் அநுராதபுரத்திலிருந்து சிங்கள சிறைக் கைதிகளை குடியேற்றி அதனை வெலிஓயா என்ற சிங்களக் கிராமமாக மாற்றினார்கள்.

கென்ற், டொலர் பாம்களில் குடியேற்றப்பட்ட இந்தச் சிங்களக் கிராமவாசிகள் மீது 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புலிகள் இயக்கம் தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. கிம்புலாகல தேரர் என்றழைக்கப்படும் பௌத்த பிக்கு இந்த சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் பலவற்றின் பின்புலமாகத் திகழ்ந்திருக்கிறார். தீகவாபி போன்ற முஸ்லிம் கிராமங்களிலும் முஸ்லிம் விவசாயிகளின் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

1983ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரம் உச்சம் பெற்றிருந்த வேளையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்த எல்லே குணவன்ச தேரர், கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். இதன் தொடர்ச்சியாகவே அமைச்சர்கள் காமினி திஸாநாயக்கா, சிறில் மத்தியூ போன்றோரின் உதவிகள், ஒத்தாசையோடு வடமுனை போன்ற இடங்களில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் ஆலோசகராக விளங்கிய அவரது மகனான ரவி ஜெயவர்த்தனா, எஸ்.ஏ.எஸ்.என்றழைக்கப்படும் பிரிட்டிஷ் கைக்கூலிப் படைகளின் உதவியைப் பெற்று அதிரடிப் படையை உருவாக்கி, இக்கிராமங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருந்தார். திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பதற்காகவே ஊர்க் காவல் படையையும் ரவி ஜெயவர்த்தனா உருவாக்கினாரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடங்களான வடக்கையும் கிழக்கையும் இணைத்துப் பாதுகாப்பதற்கான சந்தர்ப்பம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்பட்டது. புலிகள் இயக்கத்தின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் 1988ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகாண சபை ஏற்படுத்தப்பட்டது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து வந்த ரணசிங்க பிரேமதாசாவோடு இணைந்து புலிகள் இயக்கம், வடக்கு - கிழக்கு மாகாண சபையைச் சிதறடித்தது. பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் தலைநகரமாக திருகோணமலை ஏற்படுத்தப்பட்டது. அன்று வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டிருக்கா விட்டால் திருமலை, மாகாண சபையின் கைகளிலேயே இருந்திருக்கும். திருமலை சிங்களப் பேரினவாதிகளின் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு இலக்காகாமல் மேலும் தடுக்கப்பட்டிருக்கும், ஜனாதிபதி பிரேமதாசா கூட்டிய சர்வகட்சி மாநாடு தோல்வியடைந்த பின்னர், 1990ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர் மங்கள முனசிங்கா தலைமையில் கூட்டப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் கமிட்டி, வடக்கும் - கிழக்கும் பிரிக்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்தது. நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து, நியாயமான போராட்டங்களைக் கொச்சைப்படுத்தி வந்தமை, சிங்கள இனவாதிகளின் நடைமுறையாக மட்டுமல்ல, புலிகள் இயக்கத்தின் பாணியாகவும் இருந்து வருகிறது. வரலாற்றுத் தவறுகளிலிருந்து தமிழ் பேசும் மக்கள் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## திருமலை பறிபோன கதை!

**இலங்கை** சுதந்திரம் பெற்ற போது திருகோணமலையில் சிங்கள மக்கள் ஐந்து சதவீதத்தினரே வாழ்ந்தார்கள். இன்று 55 வருடங்கள் தாண்டிவிட்ட நிலையில் திருகோணமலையில் சிங்கள மக்களின் எண்ணிக்கை நாற்பது சதவீதத்துக்கும் அதிகமானதாகும். கிட்டத்தட்ட 95 சதவீதம் வாழ்ந்த தமிழ் பேசும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சுமார் ஐம்பது சதவீதத்துக்கும் குறைவாக வாழும் அளவுக்கு சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டுச் செயற்பட்டிருக்கிறது. திருகோணமலையிலுள்ள பார்வதி கிராமம் என்ற தமிழ் கிராமத்தில் தேசபிதா என்று கூறப்படும் டி.எஸ்.சேனநாயக்கா, 1320 சிங்களக் குடும்பங்களை 1948ஆம் ஆண்டிலேயே குடியேற்றியதோடு அதன் பெயரைப் பதவியா என்றும் மாற்றியமைத்தார். அடுத்த வருடம் மேலும் 1112 சிங்களக் குடும்பங்கள் பதவியா என்றழைக்கப்படும் பார்வதி கிராமத்தில் குடியேற்றப்பட்டன. 1950ஆம் ஆண்டு அல்லை என்றழைக்கப்பட்ட விவசாயத் தமிழ் கிராமத்தில் 847 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. 1953ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி, திருகோணமலையில் சிங்கள மக்களின் சனத்தொகை 18 சதவீதமாக உயர்ந்தது. அதாவது, அரசாங்கம் மேற்கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஐந்து வருடங்களில் சிங்கள மக்களின் சனத்தொகை 13 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, தமிழ் மக்களின் சனத்தொகை 43 சதவீதமாகவும் முஸ்லிம் மக்களின் சனத்தொகை 34 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. 1953ஆம் ஆண்டுக்குப் பின்னரும் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் திட்டமிட்ட வகையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. முதலிக்குளமென்ற தமிழ் கிராமத்தில் 1957ஆம் ஆண்டு 612 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. முதலிக்குளம், மொரவேவா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திருமலை நகருக்கு அண்மையில் அபேபுர என்ற சிங்களக் குடியேற்றத் திட்டம் 1960ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. உப்புவெளி என்ற மீனவர்கள் வாழும் தமிழ் கிராமத்தில் 1961ஆம் ஆண்டு 133 சிங்கள மீனவக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு ஸ்ரீமாபுர என்ற தனிச் சிங்களக் கிராமம் உருவாக்கப்பட்டது. 1962ஆம் ஆண்டு திரியாய் என்றழைக்கப்படும் தமிழ் கிராமத்திற்கு அண்மையில் பௌத்த விகாரையொன்று நிர்மாணிக்கப்பட்டதோடு 72 சிங்களக் குடும்பங்களும் அங்கு குடியேற்றப்பட்டன. மிகுந்துபுர, ஜயந்திபுர ஆகிய சிங்களக் கிராமங்கள் 1963ஆம் ஆண்டு அரசாங்கத்தின் அனுசரணையோடு திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. இங்கு 121 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. சீனன்குடாவுக்கண்மையில் பௌத்த விகாரையொன்றும் சிங்களப் பாடசாலையொன்றும் 1964ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டன. இதனால் இங்கு சிங்கள மக்களின் குடியேற்றங்கள் ஆரம்பமாயின. 1966ஆம் ஆண்டு பாலம்பட்டாறு என்ற தமிழ் கிராமத்தில் 30 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. 1968ஆம் ஆண்டு பெரியகுளம் என்ற தமிழ் கிராமத்தில் 92 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டதோடு, பெரியகுளம் நாமல்வத்த என்றும் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. 1971ஆம் ஆண்டு கிளிவெட்டி என்ற தமிழ் கிராமம் தெஹிவத்த என்ற சிங்களக் கிராமமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இங்கு 92 சிங்களக் குடும்பங்கள் அரசாங்கத்தினால் குடியேற்றப்பட்டன. இந்தத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் காரணமாக 1971ஆம் ஆண்டு திருகோணமலையில் சிங்கள மக்களின் சனத்தொகை 31 சதவீதமாக உயர்ந்தது. அதாவது 23 வருடங்களுக்குள் அங்கு சிங்கள மக்களின் எண்ணிக்கை 26 சதவீதத்தால் வளர்ச்சி பெற்றது. இதேவேளை தமிழ் மக்களின் சனத்தொகை 37 சதவீதமாகவும் முஸ்லிம்களின் சனத்தொகை 29 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. 1970களிலும் திருமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1981ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி திருகோணமலையில் 93,510 தமிழர்களும் 86,341 சிங்களவர்களும் 74,403 முஸ்லிம்களும் வாழ்ந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது சிங்கள மக்களின் சனத்தொகை 34 சதவீதமாக உயர்ந்தது. இது தமிழ் மக்களின் சனத் தொகையைவிட 2 சதவீதமே குறைவானதாகும். இதேவேளை முஸ்லிம்களின் சனத்தொகை 28 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. திருமலையில் சேருநுவர என்ற சிங்களத் தொகுதியும் உருவாக்கப்பட்டது.

ந
ர
ன்

# ஊரிலிருந்து....



**யுத்த** நடவடிக்கைகளில் பராயமடையதோரை அதாவது சிறுவர்களை ஈடுபடுத்துவது என்பது ஐ.நா சபையால் உத்தியோகபூர்வமாகத் தடைசெய்யப்பட்ட ஒரு விடயமாகும். இலங்கையின் கடந்த கால வரலாற்றில் தற்கொலைத் தாக்குதல்கள் உட்பட பல ராணுவ நடவடிக்கைகளில் புலிகளினால் சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டமை உலகறிந்த பகிரங்கப்படுத்தப்பட்ட விடயம். பல உலக நாடுகள் புலிகளை தடை செய்தமைக்குக் கூறப்பட்ட காரணங்களில் சிறுவர்களை படை அணியில் இணைப்பதும் ஒரு காரணமாக காட்டப்பட்டது.

ஆனால் இவை யாவற்றினையும் தூக்கிச் சாப்பிடும் விடயம் ஒன்று தற்போது நடைபெறுவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது. அதாவது மனநிலை பாதிக்கப்பட்டோரை, சித்த சுவாதீனமற்றோரை தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தும் செய்திகள் வெளியாகி உள்ளன.

இதனை யார் தட்டிக் கேட்பது? அல்லது எந்த ஐநா அமைப்பு கண்காணிப்பது? பரவலாக மக்களினால் எழுப்பப்படும் மிக முக்கிய கேள்வி இதுவாகும்.

## தம்மைத் தாமே ஆளும் உரிமை தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டும்

**இ**வ்வாரத் தினமுரசின் முகப்புப் பக்கத்தில் காணப்படும் வடக்கு - கிழக்குத் தாயகம் தொடர்பான வரைபடம் புலிகள் இயக்கத்தால் முன்வைக்கப்பட்ட தவறான வரைபடமாகும். வடக்கு - கிழக்குக்கு வெளியேயுள்ள புத்தளம் போன்ற பகுதிகளையும் உள்ளடக்கித் தமிழ் மக்களின் வடக்குக் - கிழக்குத் தாயக பூமியாகக் காட்டுவது தவறானது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியது மட்டுமல்லாமல் இவற்றுக்கு வெளியேயுள்ள மலையகம், புத்தளம் போன்ற பகுதிகளையும் உள்ளடக்கிப் புலிகள் இயக்கம், ஈரோஸ் போன்றவை தமிழீழக் கோரிக்கையை 1980களின் முற்கூற்றில் முன்வைத்தன. புலிகள் இயக்கம் ஒருபடி மேலாகச் சென்று இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்கள், இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் தெற்காசியாவிலுள்ள ஏனைய தமிழ் மக்கள் வாழும் பகுதிகளையும் உள்ளடக்கிப் பரந்த தமிழ் இராஜ்யம் என்ற அசட்டுத்தனமான கோரிக்கையை முன்வைத்ததால், இந்தியாவின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிய நிலையேற்பட்டது. முதன் முதலான வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பை வலியுறுத்தியவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் எம்.பி. பண்டிதர் கா.பொ.இரத்தினம் என்று கூறப்படுகிறது. பின்னர் தமிழ் மாணவர் பேரவை மலையகத்தைத் தவிர்த்து, வடக்கு - கிழக்கை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தது. 1987ஆம் ஆண்டு ஜூலையில் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கு - கிழக்கின் தற்காலிக இணைப்புக்கு வழிவகுத்ததோடு, தமிழீழக் கோஷத்தைக் காலாவதியாக்கவும் செய்தது. வடக்கும் - கிழக்கும் தமிழ் பேசும் தமிழ் - முஸ்லிம் மக்களின் பாரம்பரிய வாழ்விடம். வரலாற்று ரீதியான பூர்வீக பூமி. இது நிரந்தரமாக இணைக்கப்பட்டு, மொழிவாரி மாநிலமாக அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டும். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, என்றும் பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு இணைப்பு, அதற்குள் முஸ்லிம் மக்களுக்கு அகச்சுயாட்சி என்பதே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரே வழிமுறையாகும்.

# பயங்கரவாதத்திடம் தோற்றுப்போகும் ஐரோப்பிய ஒன்றியம்

**ஐ**ரோப்பிய ஒன்றிய நாடுகள் புலிகளை கடந்த 29.05.2006 அன்று பயங்கரவாதிகளாகத் தடைசெய்த பின்னர், இலங்கையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் பணியாற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் தொடர்ந்து இப்பணியில் இருக்க முடியாது என்று புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். இதற்காக புலிகள் கூறிய காரணங்கள் ஏற்புடையதாக இல்லை என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும், இலங்கை அரசாங்கமும் தமது விசனத்தைத் தெரிவித்திருந்தன. அதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் செப்டெம்பர் முதலாம் திகதிக்குள் வெளியேறிவிட வேண்டும் எனப்



இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யகூசி அகாசி, சு.ப. தமிழ்ச்செல்வனை இறுதியாக வன்னியில் சந்தித்த போது.

புலிகள் தமது காலக் கெடுவையும் விதித்திருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக நோர்வே கருத்துத் தெரிவிக்கும்போது, கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்த மாட்டார்கள் என்றும் அவர்கள் பொதுவான பணியாளர்களாகவே செயற்படுவார்கள் என்றும் விளக்கமளித்தது. இதே கருத்தை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் தெரிவித்தன. ஆனால் புலிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

22.02.2002ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி கண்காணிப்புக் குழுவில் எந்தெந்த நாடுகள் அங்கம் வகிப்பது என்பதையும், அவர்கள் விலக்கிக் கொள்ளப்படுவதையும் புலிகளும் இலங்கை அரசாங்கமும் இணைந்தே தீர்மானிக்க முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கண்காணிப்புப் பணியில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் இருப்பது பிரச்சினையில்லை என்றும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற வகையில் தாம் நடந்து கொள்ளத் தயார் என்றும் இலங்கை அரசு தெரிவித்தது. ஆனால், புலிகள் தம்மைத் தடை செய்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புப் பணியில் தொடர்ந்து இருக்க முடியாதென்பதை வலியுறுத்தியதோடு அவர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் தரமுடியாது என்றும் கூறிவிட்டனர்.

புலிகளின் இந்தக் கடுமையான நிலைப்பாடு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை மட்டுமல்ல, அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும் அதிருப்தியை ஏற்படுத்துவதாக அமைந்தது. இதைத் தொடர்ந்து இந்தியா, இலங்கை விவகாரத்தில் கூடுதல் கவனம் எடுக்கத் தொடங்கியது. இதன் பயனாக இலங்கை அரசு ஒரு அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது.

இதற்கிடையில் புலிகள் நோர்வேக்கு போக வேண்டிய தேவையிருந்தாலும், கண்காணிப்புப் பணியில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் இருப்பதாலும், இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான அவசியம் உணரப்படுமாக இருந்தால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புலிகளின் விடயத்தில் ஒரு நெகிழ்வுப்போக்கைக் கடைபிடிப்பர் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தெரிவித்தன.

இந்தக் கருத்தானது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தம்மைப் பயங்கரவாதிகளாகப் பார்த்தாலும் தமது பிடிவாதங்களை நிராகரிக்கும் நிலையில் இல்லை என்பதை புலிகளுக்கு உணர்த்தியது. அதைத் தொடர்ந்து புலிகளின் பிடி மேலும் இறுக்கமடைந்தது. இலங்கைக் கடற்படையினரின் கடற்கலங்களில் கண்காணிப்புக் குழுவினர் பயணிக்க முடியாதென்றும் அப்படிப் பயணிப்போரின் பாதுகாப்புக்கு தாம் உத்தரவாதமளிக்க முடியாது என்றும் கூறினர். அதற்குப் பிறகு இன்று வரை கடலில் கண்காணிப்பாளர்கள் ரோந்துப் பணியில் ஈடுபடுவதை நிறுத்திக் கொண்டனர். இந்த மிரட்டலை சற்றும் எதிர்பாராத ஜப்பான், புலிகள் மீது தமது சந்தேகப் பார்வையைத் திருப்பியது.

இப்போது புலிகளைத் தடை செய்யும் பூர்வாங்க வேலைகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், எந்த நேரமும் அந்த அறிவிப்புச் செய்யப்படலாம் என்ற நிலையுள்ளது. இந்த அறிவிப்பு வருவதற்கு முன்னர் ஜப்பானின் இலங்கை சமாதான முயற்சிகளுக்கான விசேட பிரதிநிதி யசூசி அகாசி விரைவில் இலங்கை வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வருகையானது புலிகளின் தலைவர் பிரபாகரனை நேரடியாகச் சந்திக்கும் வருகையாகவே இருக்க வேண்டும் என்பதால் தாமதிக்கப்படுகிறது. ஏனெனில் புலிகளின் எந்த மட்டத்தினரோடு பேசினாலும் அது செல்லாக்காசுதான். ஆகவே எதிர்காலத்தில் புலிகள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை அதன் தலைமையிடமே கேட்டுவிட வேண்டும் என்று ஜப்பான் விரும்புகிறது. இந்த நோக்கத்தோடு முன்னர் ஒரு தடவை யசூசி அகாசி வன்னிக்குச் சென்ற போதும், பிரபாகரனைச் சந்திக்க முடியாமல் ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தபடியாக கடந்த 21.07.06 அன்று சுவீடன் நாட்டின் விசேட பிரதிநிதி அன்ரீன் ஒல் ஜிலன்ட் வன்னிக்குச் சென்று புலிகளைச் சந்தித்துப் பேசினார். அவரது வருகையின் முக்கிய நோக்கம், கண்காணிப்புக் குழுவில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பணியாளர்களின் விடயம்தான். இதில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளாக சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன. அப்படியிருக்கையில் சுவீடனைச் சேர்ந்த இவரின் வருகை பல எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்தது.

புலிகளைச் சந்தித்துவிட்டு நாடு திரும்பும் போது, அன்ரீன் ஒல்ட்ஜிலன், கூறிய கருத்துக்கள், புலிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பதை உணர்த்தியது. அதாவது, கண்காணிப்பாளர்கள் விடயத்தில் புலிகள் கொண்டிருக்கும் கடும் போக்கானது, பாரிய

கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரை டென்மார்க்கைச் சேர்ந்த 11 பேரும், பின்லாந்தைச் சேர்ந்த 11 பேரும், ஐஸ்லாந்தைச் சேர்ந்த 04 பேரும், நோர்வேயைச் சேர்ந்த 16 பேரும், சுவீடனைச் சேர்ந்த 15 பேருமாக மொத்தம் 57 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர். இதில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த 37 பேரை, தத்தமது நாடுகள் திருப்பியழைக்க நேர்ந்தால் 20 பேர் மட்டுமே எஞ்சுவர். இந்த எண்ணிக்கை வடக்கு - கிழக்கில் கண்காணிப்புப் பணி செய்யப் போதாது. வேண்டுமானால் கொழும்பில் தலைமையகத்தை மட்டும் நடத்தலாம்.

அலசுவது

**- மதியூகி -**

விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறியிருந்தார். அவரது முயற்சி படுதோல்வியில் முடிந்தது. இதன்பின்னர் 26.07.06 அன்று ஐக்கிய நாடுகள் சபையில் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதான ஆணையாளர் அட்டோ கியூட்ரெஸ் வன்னிக்குச் சென்று புலிகளைச் சந்தித்தார். இதில் அகதிகள் பற்றியே பிரதானமாகப் பேசப்பட்டதாகவும்,

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)

## அதிரடி அய்யாத்துரை



**போர்நிறுத்த** ஒப்பந்தம் செத்துப் போயிட்டிது எண்டு ஒரு பெரும் கண்டுபிடிப்பைக் கண்டு பிடிச்சிருக்காருங்கோ கண்காணிப்புக் குழுவின்ர தலைவர். உந்தக் கண்டு பிடிப்புக்கு அவருக்கு நோபல் பரிசு குடுத்தாலும் தகுமுங்கோ.

என்ன பகிடியெண்டால் உந்த ஒப்பந்தம் அடிப்படையிலேயே பல தவறுகளைக் கொண்டது எண்டும், அதில கையொப்பம் செய்தவையே ஆக்களை ஆக்கள் பாக்காமல்தான் கையொப்பம் வச்சிச்சினம் எண்டும் உது செயலிழந்து ரெண்டு மூண்டு வருடமாகிட்டுது எண்டும், 'முரசும்' எப்பவும்தான் சுட்டிக் காட்டிக்கொண்டு வருகுது. இவர் இப்பதான் ஏதோ சங்கு ஊதி, பால் வாத்துப்போட்டு, மூண்டாஞ் சடங்கு செய்து போட்டு, சந்தனத் தலையோடை 'நோ பேயில' வீட்டில நிக்கி றவர் மாதிரி, ஒப்பந்தம் செத்திட்டுது எண்டு சொல்லியிருக்கார். சரி, அது செத்த கதை ஒருபக்கமிருக்கட்டும். இவர் எப்ப பாய், படுக்கையைக் கட்டப்போறார் எண்டதை சொல்லாமல் விட்டுப்போட்டாரே.

**சேருநுவரயில** ரெண்டெழுத்தார் தண்ணியை தடுத்துப்போட்டு நிபந்தனை விதிக்கிறதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. தண்ணீரை ஒரு ஆயுதமாக பயன்படுத்துவதை அரசாங்கம் பொறுத்துக் கொள்ளாது. உந்த விஷயத்தில எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயாரில்லை எண்டதாலை எந்தக் கட்டத்துக்கும் போய் தண் ணீரை மக்களுக்குக் கிடைக்கச் செய்ய அரசாங்கம் தயங்காது எண்டு அமைச்சர் கெஹலிய சொல்லியிருக்கிறார். உவர் சொன்ன தோரணையைப் பார்த்தால் உந்த விவகாரம் ஒரு யுத்தத்துக்குப் போனாலும் போகலாம் எண்டுதான் தெரியுது. எனக்கு இப்பதானுங்கோ ஒரு விஷயம் ஞாபகம் வருகுது. ஒரு தடவை சு.ப.சொன்னவர், நாங்கள் துவக்கப்படும் போரிலை எல்லா தந்திரோபாயங்களையும் பயன்படுத்துவோம் எண்டு. அப்புடியெண்டால் தண்ணியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவதும் ஒரு தந்திரமோ எண்டு எண்ணத் தோனுதுங்கோ. எப்புடியோ ரெண்டெழுத்தார் யுத்தமெண்ட தங்கட இலக்கை அடைஞ்சிட்டினம்.

**எல்லாத்** தொழிலிலையும், நன்மை தீமைக்குப் போராடவும், உதவவும் சங்கமோ அமைப்போ இருக்குது. உந்த ஊடகக்காரருக்கு மட்டும் செத்துப் போனால் மட்டும், கோட்டை ரெயில்வே ஸ்டேசனுக்கு முன்னால கோஷம் போட்டு ஒரு ரெண்டு மணித்தியாலம் கூச்சல் போட மட்டுந்தானுங்கோ ஒரு இயக்கமிருக்குது. இதையும் மிஞ்சிப் பார்த்தால், யாராவது ஊடகவியலாளன் தாக்கப்பட்டால் ஒரு கண்டன அறிக்கையும் விடுவினம். அவ்வளவு தான். அடுத்த நாள் அவைக்கும் ஊடகக்காரருக்கும் தொடர்பு இல்லாமப் போயிடும்.

இதுக்கு மேலான ஒரு விஷயம் தெரியுமோ? அந்தச் சுதந்திரமில்லாத ஊதுகுழல் இயக்கத்துக்கு நாட்டில எத்தினை ஊடகம் இருக்குது எண்டதோ, எத்தனை ஊடகவியலாளர்கள் இருக்கினமெண்டதோ எதுவும் தெரியாதுங்கோ. ஒரு கண்டனம், ஒரு அறிக்கை உதுக்கு மட்டும் ஒரு இயக்கம் எண்டதை நினைச்சுப் பாருங்கோ. சிரிப்பா இருக்குதோ, இல்லையோ...?

**வெளிநாடுகளுக்குப்** போயிட்டு வாங்கோ எண்டு அறிவுறுத்தல் வந்ததாலையோ என்னவோ எங்கட கூத்தமைப்பு எம்.பி.மார், உள்ளூர் பிரச்சினைகளைக் கண்டு கொள்ளவே மாட்டேன் எண்டு இருக்கினம். உந்தத் தண்ணி விவகாரம் ஏதோ சிங்கள மக்களுக்கு மட்டும் தான் எண்டு நினைக்கினமாக்கும். ஒரு சத்தம் கூடக் காட்டாம இருக்கினம். நான் தெரியாமல் தான் கேக்கிறன். ரெண்டெழுத்தாரின்ர கட்டுப்பாட்டுக்குள்ள இருக்கிற எங்கட மக்கள் தண்ணி கேட்டு முன்னம் அரசுக்குக் கோரிக்கை விடுத்து அது நடக்கயில்லையெண்டால் அந்தப் பிரச்சினையை இவை ஏன் கண்டுகொள்ளயில்லை. இவைக்கு ஒதுக்கப்படுகிற மாவட்ட அபிவிருத்திக்கான பணத்திலை தன்னும் ஏன் செய்து குடுக்காம இருந்திச்சினம்.

இதை தமிழ் மக்களின்ர எம்.பி.மார் எண்டால், அவைக்கு என்ன பிரச்சினை இருக்கு எண்டு பார்த்து பக்கத்தில இருந்து செய்து கொடுக்கலையே ஏன்? அது ஏன் சிங்கள அரசாங்கம் செய்து கொடுக்கலை எண்டதை இவ்வளவு நாளா பாராளுமன்றத்துக்குக் கூடக் கொண்டு வரயில்லை. இவைக்கு கொடுக்கப்படுகிற காசில இவை உதுகளைச் செய்யாமல் என்னத்தை வெட்டிப் பிறட்டினம். உது ஒண்டையும் செய்ய முடியாட்டில் என்ன புண்ணாக்குக்கே எம்.பி. மாரா வந்திச்சினம்.

தேவையில்லாத விஷயத்துக்கெல்லாம் அண்டவெயார் தெரியிறளவுக்குக் கொடுக்கு கட்டிக் கொண்டு கொப்பு தாவிக் கத்துவினம். தமிழ் மக்களின்ர உந்த மாதிரி அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு ஏன் மூச்சுக் காட்டினமில்லை. சரி, இவைதான் உதவாதவை எண்டால் உவையின்ர தலைவர்மார் ரெண்டெழுத்தார் ஏன் உதில கவனம் எடுக்கயில்லை.

இப்ப மட்டும் நிண்டுகொண்டு தண்ணி, பயிருக்கோ உயிருக்கோ எண்டு எங்கட சனம் கேக்கினம் எண்டு எதுகை மோனையில கதைவிட்டுக் கொண்டிருக்கினம் எண்டெல்லாம், தண்ணி விவகாரத்தாலை ஒரு சண்டை வந்திடக் கூடாது எண்டு விரும்பிற தமிழ் மக்கள் கேள்விமேல கேள்வி கேக்கினம். திட்டம் போட்டு நடந்த மேற்படி விஷயத்திற்கு பதில் எப்புடி, யார் சொல்லுவினம்? நடக்கிறது நடக்கட்டும். எல்லாம் சனத்தின்ர தலைவிதி எண்டினமுங்கோ...

**ஒப்பந்தம்** செய்தாப் பிறகு ரெண்டெழுத்தார் தங்கட மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைப் போட்டுத் தள்ளிக் கொண்டிருக்கேக்க, நியாயம் கேட்டவைக்கு நோர்வே பிரதிநிதி எரிக் என்ன சொன்னவர் எண்டதை மறந்திருக்க மாட்டியள் எண்டு நினைக்கிறன்.

அவர் சொன்னவர், "உப்பிடியான ஒப்பந்தங்கள் செய்த நாடுகளில நடக்கிற ஒப்பந்த மீறல்களை விடவும் இலங்கையில நடக்கிற மீறல்கள் கொஞ்சம் தான்" எண்டு. உவர் கொஞ்சமெண்டு சொன்னது எவ்வளவு தெரியுமோ. ரெண்டெழுத்தார் மீறினது ஏழாயிரத்துக்கு மேலையும், அரசு முன்னூத்தி ஐம்பதுக்கு மேலையும் ஆகிட்டுது. உதில கொல்லப்பட்டவை ரெண்டாயிரத்துக்குமேலை. காயப்பட்டவை ரெண்டாயிரத்து ஐநூறுக்கு மேலை எண்டு அந்தப் பட்டியல் நீளமானதுங்கோ. இப்ப நிலைமையில ஒப்பந்த மீறல்களால மட்டும்தான் ஒப்பந்தமே தொங்கிக் கொண்டிருக்கு எண்டாகிட்டுது. உது எப்புடி இருக்கு தெரியுமோ? ஒரு ரூபா திருடேக்க கண்டிக்காத தாயை, திருடனாக சிறையில இருந்த மகன் மூக்கைக் கடிச்ச மாதிரி இருக்குதுங்கோ...வ்...

# நெருப்பு

குரங்குக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட உருவமாக மனிதன் வாழ்ந்த காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பெரும் கண்டுபிடிப்பு தான் நெருப்பு. கற்களை உரசி பொறிபறக்கும் போது மனிதன் மகிழ்ச்சி கொண்டான். அவ்வளவு ஏன் மரக்கிளைகள் தானே உரசி காடு பற்றிக் கொண்ட காட்சியைக் கண்டு ஆதிமனிதன் மண்டியிட்டு நெருப்பைப் பார்த்து வணங்கினான் என்று வரலாறு சொல்கிறது. விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்னரே அவசரப்பட்டு விழுந்து வணங்குவதும், பின்னர் அதற்காகவே மனம் வருந்துவதும் மனிதனின் முட்டாள்தனங்களில் ஒன்று. சுடும் வரை மனிதன் நெருப்பைப் பற்றிய பிரமிப்பில் தான் இருந்தான். இந்துக்களின் வாழ்வோடு நெருப்பு மிகவும் ஒன்றிப் போய் விட்டது. அக்னி சாட்சியாக என்று தாலிகட்டுவதில் ஆரம்பித்து கடைசியாக தகனக்கிரியை வரை நெருப்புக்குத் தனிப்பங்குண்டு.

இப்போது மின்சாரச் சுடுகாடு வந்த பிறகு நெருப்புக்கு வேலை இல்லாமல் போய் விட்டது. பேக்கரியில் பாண் வாட்டுவதுபோல் சடலத்தை தட்டில் வைத்து உள்ளே அனுப்பி சுவிட்ஸைத் தட்டிவிட்டால் அரை மணி நேரத்துக்குள் சாம்பல் கிடைத்து விடுகிறது.

சீதனக் கொடுமையில் நெருப்புக்குப் பலியான பெண்களின் முடிவுகள் பரிதாபத்துக்குரியவை. ஸ்திரிப் பெட்டி லேசாகச் சுட்டுவிட்டாலோ அல்லது தீக்குச்சி சுட்டுவிட்டாலோ பதறித்துடித்து விடும் பெண்கள், உடல் கருகி சாக துணிந்து விடும் பெண்களின் உணர்வுகளை எல்லா மாமிமார்களும் மாமாக்களும் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு




முதல் இத்தனைக்கும் தன் மனைவி கொடுமையை அனுபவிக்கிறாள் என்று



தருவது
-தேசன்

தெரியாமல் வயிறு நிறைய சாப்பிடவும், படுக்கையைப் பகிர்ந்து கொள்ளவும் மட்டும் கணவன்களாக வாழும் வெற்று முண்டங்களை முதலில் நடுத் தெருவில் வைத்து தீ மூட்டவேண்டும்.

கண் கலங்காமல் பார்த்துக் கொள்ளா விட்டாலும் பரவாயில்லை. கருகிச் சாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஒரு கணவனின் பொறுப்பல்லவா?

மாமியார்களாக வாழும் பெண்கள் முன்னாள் மருமகள்தான். ஏனோ கடந்த காலத்தை வசதியாக மறந்துவிடுகிறார்கள். கையாலாகாத ஆண்களுக்கு மனைவியாகிப் போன எல்லாப் பெண்களுக்கும் விடிவு எப்போது வருமோ அந்த நாள்தான் கருகித் துடிதுடித்து தற்கொலையாகிப்போன பெண்களுக்கு ஆத்ம சாந்தியடையும் நாள். பெண்கள் சமையல் வேலைகளில் நெருப்புக்கு நெருக்கமாக இருந்து விடுவதாலோ என்னவோ நெருப்பின் விபரீதத்தை அசட்டை செய்பவர்களாக இருக்கிறார்கள். இந்தியாவில் கணவன் இறந்தபிறகு உடன் கட்டை ஏறுவது என்று தங்களை மாய்த்துக் கொள்ளும் நிலை இன்றும் சில இடங்களில் தொடர்ந்திருக்கிறது. அப்படிச் செய்வதால் அந்தக் கணவன் மீது மனைவி மிகவும் பாசம் வைத்திருந்தவளாகக் கருதப்படுகிறது. என்ன நம்பிக்கையோ இது. மூட நம்பிக்கைகளில் மனிதனுக்கு இருக்கும் நம்பிக்கைகளை இன்னும் உடைத்துப் போடமுடியவில்லை. இருபத்தியோராம் நூற்றாண்டிலும் மூடநம்பிக்கைதான் மனிதனுக்கு முதல் நம்பிக்கை.

என்னைப் பொறுத்தவரை கண்காணுகின்ற மனிதனுக்கு மரியாதையும், அவன் மீது நம்பிக்கையும் கொள்ளாதவன் கண்காணாத எதையும் நம்புகிறவனாக வாழமுடியாது என்பதுதான் என் கருத்து. 75 சதவீதமான பெண்களின் வாழ்க்கை நெருப்பிலேயே வெந்து போகிறது. குடும்பத்தலைவிகள் பலர் அழகு கெட்டுப்போவதே நெருப்பில் வாடிவிடுவதால் தான். பெண்களைப் பூக்கள் என்று கவிதை படிக்கும் ஆண்களே பூக்களை நெருப்பில் வாட்டி எடுக்காதீர்கள்.

இந்தியா தமிழ் நாட்டில் ஓலைக்குடிசையிலான பாடசாலை தீப்பற்றியதில் 94 சிறுவர், சிறுமியர் உடல் கருகிப் பலியானார்கள். 12 பேர் இன்னும் கருகிய தழும்புகளோடு அந்தக் கோரச் சம்பவத்தின் காட்சிகளாக இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சம்பவம் கேள்விப்பட்ட போது தமிழக அரசின் கவலையீனம் மீது எனக்கு வந்த கோபம் இங்கு விவரிக்க முடியாதவை.

உரியவர்களின் கவலையீனம் அந்த மொட்டுக்களைப் பலிகொடுத்தது. நான் கண் கலங்கிப்போன பல சம்பவங்களில் அதுவும் ஒன்று. அது இந்தியாவில் நடந்தது என்று இருந்து விடாதீர்கள், இலங்கையிலும் நடக்கலாம். ஆகவே, சிறுவர்களின் கல்விக்கூடங்கள், மாலை நேர வகுப்புகள், விளையாட்டுத்தளங்கள் என்பவை தொடர்பில் முதலில் பெற்றோர்களும், அரச அதிகாரிகளும், சமூக நலன் விரும்பிகளும் கூடுதல் கவனத்தோடு இருக்க வேண்டும். யாருடைய மரணத்தையும் ஒரு பொது நிகழ்ச்சியாக சம்பவமாக நினைத்து விடாதீர்கள். இன்னொரு உயிருக்காக இறங்கி சேவை செய்யத் தெரிந்தவர்களும், இழப்புக்களுக்காக கண்ணீர் விடுபவர்களும், இன்னொரு உயிர் மீது அன்பு செலுத்தத் தெரிந்தவர்களும், இறைவனின் வாரிசுகள் என்பதை ஒவ்வொருவரும் புரிதல் அவசியமாகும்.

நெருப்பு சுத்தமானது; கலப்படமில்லாதது. அதனால் தானோ என்னவோ உண்மை சுடும் என்றார்களோ தெரியாது. ஆகவே நெருப்பிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள், ஒரு தீக்குச்சி போதும், ஊருக்கே தீ வைத்துவிடலாம். ஆனால் ஐம்பது தீக்குச்சிகள் ஒரே பெட்டிக்குள் அடங்கிக் கிடக்கிறதே அதைப்பற்றி எப்போதாவது சிந்தித்ததுண்டா. உரசும் வரை தீக்குச்சிகள்; உரசி விட்டால் தீக்கும் குச்சிகள். நாமும் அப்படி இருக்க வேண்டும். தேவையான இடத்தில் நம்மை வெளிப்படுத்த வேண்டும், வேண்டாத இடத்தில் பொறுமையோடு இருந்துவிட வேண்டும், நமக்குள் ஒரு நெருப்பு எப்போதும் இருந்து கொண்டிருக்க வேண்டும். அது வெற்றி...வெற்றி என்று பிரகாசமான வாழ்க்கையை நோக்கி நம்மை துரத்திக் கொண்டிருக்க வேண்டும்.

---




இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயனமிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
முரசு விமர்சனம்
தினமுரசு வாரமலர்
த.பெ. இல - 1772
கொழும்பு.

## தூண்டிவிடும் மின்னல்


ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் மாலை வேளையில் தனியார் தொலைக்காட்சி சேவை ஒன்றில் இடம் பெறும் 'மின்னல்' நிகழ்ச்சியானது, ஒரு சமூகத்தில் அல்லது அரசியலில் எந்த வகையில் மாற்றங்களை அல்லது திருத்தங்களை ஏற்படுத்த வழிவகுக்கிறது என்று ஆராய்ந்தால், நிலைமை தலைகீழாகவே இருக்கிறது. சமூகங்களின் அரசியல் பிரதிநிதிகள் என்று கூறப்படும் சிலரை தொலைக்காட்சியில் அரங்கேற்றி, தமது தனிப்பட்ட பிரச்சினைகள் தொடக்கம் தமது அரசியல் அசிங்கங்கள் வரை ஒருவர் மீது மற்றவர் மாறி மாறி வசை பாடித் தமக்குள் சேறு பூசிக்கொள்கின்றனர். இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் சாதாரண மக்கள், இவர்களா எமது தலைவர்கள் என்று வாயில் கைவைக்கின்றனர். இத்தனைக்கும் தீனி போட்டதுபோல் நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கும் ஏற்பாட்டாளர், ஒருவரை ஒருவர் தூண்டி விடுவது போல் மாறி மாறி கேள்விகளைத் தொடுப்பது நாகரீகமற்ற தன்மை அல்லது விஷமத்தனமான செயலாகவே கருத வேண்டியுள்ளது. குறிப்பாக சில கட்சிகளையும் அதன் தலைவர்களையும் வம்புக்கு இழுக்கும் விதமாக இந்த அறிவிப்பாளரே கேள்விக் கணைகளைத் தொடுத்து எதிரிலிருப்பவரின் வாயைக் கிளறி விடுவதில் அவருக்கு அலாதிப் பிரியம் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஊடகங்களில் பொறுப்பாக உள்ளவர்கள் இவ்வாறு காழ்ப்புணர்வுடனும் அற்பத்தனமாகவும் நடந்து கொள்வதைத் தவிர்த்து சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளை நடத்த முன்வரவேண்டும்.

*-பி. ராஜேஸ், வவுனியா.*

---


## விளம்பரப் பகுதி

**மலையாள மாந்திரீகம்**



தெய்வீக காந்த சக்தி மாந்திரீகம் மூலம் நீண்டகால திருமணத்தடை நீங்க, கால சர்ப்ப தோஷம், குழந்தையின்மை, காதல் கைகூட, கணவன் மனைவி ஒற்றுமையாயிருக்க தெய்வீக காந்த சக்தி பரிகாரங்கள் மூலம் முன் கருமவினைகளை என்னால் அகற்ற முடியும்.

தேவைகளுக்கு -

உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர்
P.K.சாமி (J.P.) ஐயா

**அருள் சித்த எண்ணெய்**



மன தடுமாற்றங்கள், படபடப்பு, கோபம், தலைவலி, தூக்கமின்மை, கூந்தல் வளர்ச்சிபெற, முடி கருமையாக இருக்க, இளம்நரை போக்க, பொடுகு தொல்லை நீங்க, பெண்களுக்கென தெய்வீக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தத் தைலத்தைப் பாவிப்பதனால் ஏதோரு பக்கவிளைவுகளும் இல்லை. இருபாலாரும் பாவிக்கலாம்.

அருள்ஞான சித்தர் பேராசிரியர் டாக்டர்
P.K.சாமி (J.P.) ஐயா

**ஜாதகம்**



காண்ட அடிப்படையில் ஜாதகமாக எழுதி எடுக்க, வெளிநாட்டு நேரப்படி ஜாதகங்கள் கணித்து வெளிநாட்டுக்கு அனுப்ப.


ஜோதிட தத்துவ ஞானி
P.K.சாமி (J.P.) ஐயா

விஷேசமாக வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி வசதிகளும் நேரடி பொதி கையளிப்பு சேவையும் எம்மிடம் உண்டு

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக உச்சாடப் பீடம்
162, KOTAHENA ST, COLOMBO - 13.
TEL : 2470615, 2342463, 2342464, FAX : 2344831.
Web : www.drpksamy.com
E-mail : drpksamy@sltnet.lk

ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்
No. 33, தின சந்தை கட்டிடம், நுவரெலியா.
NUWARA-ELIYA TEL : 052-4490031.

**நவசித்தர் மாந்திரீகம்**



ஓம் குருவே நம: கர்ம வினைகளினால் தீய சக்திகளால் ஏற்பட்ட தீராத துன்ப துயரங்கள், வீட்டில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டு பிரயாணத் தடை, காதல் பிரச்சினை, காதலர்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்ய, பிரிந்தவர் ஒன்று சேர, கணவன் மனைவி பிரச்சினைகள் தீர வேண்டாதவரை பிரிக்க, கிரக தோஷ நிவர்த்தி செய்து வீட்டில் லட்சுமிகரம் ஏற்பட, வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு கடல் கடந்து பலன் அளிக்கக் கூடியவாறு விசேடமாக செய்து கொடுக்கப்படும். இன்னும் அநேக காரியங்களுக்கு மட்டக்களப்பு பரம்பரை மஹா சக்தி உபாசகர் சித்த ஆயுள்வேத மாந்திரீக விஷ மருத்துவர்.

Dr.T.Murukuppillai (S.A.M.P.), Main Street, Pandiruppu - 01. Kalmunai. (Sri Lanka) Tel: 067 - 2224077, வெளிநாடு: 0094672224077


**ABI Beauty Parlour**

உங்கள் அழகினை மேம்படுத்திக்கொள்ள சிறந்த இடம்

*Abi Beauty Parlour*

*Bridal Dressing, Latest Facials*
*Hair Rebonding, Hair Treatments*
*Watts Removing.....*

மகளிர்க்கான அழகு கலை அனைத்தும் செய்து விடப்படும்.
பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன முற்பதிவுகளுக்கு தொடர்புகொள்ளவும்.



No. 60 6/4, Mayfield Road,
Kotahena, Colombo - 13.
Tel : 2387737, Hotline : 077-9539263
after 6'Clock - 2431137
(Ladies Only)


# இன்னொருவர் பார்வையில்

# இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சிங்களக் கட்சிகளின் இணக்கப்பாடு

**ஜனாதிபதி** மஹிந்த ராஜபக்ஷ, கடந்த நவம்பர் மாதம் பதவியேற்றதிலிருந்து வன்செயல்கள் மீண்டும் ஏற்பட்டமையும், ஜெனீவா - ஒஸ்லோ சுற்றுச் சமாதானப் பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்றமையும், இலங்கையில் இன நெருக்கடிக்குத் தீர்வுகாண உதவுவதில் சர்வதேச சமூகம் தனது பாத்திரத்திலும் பங்களிப்பிலும் புதிய கவனத்தைச் செலுத்த வைத்தது. இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் சமூகத்துக்குமிடையில் உள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மட்டுமல்ல, சிங்கள அரசியல் சமூகத்தவர்களிடையேயுள்ள முரண்பாடுகளை, குறிப்பாகப் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இந்தியா ஈடுபட வேண்டுமென்ற அறைகூவல்கள் விடுக்கப்பட்டிருக்கும் நிலையில், இலங்கை சமூகமும் அரசியல்வாதிகளும் என்ன செய்யப்போகிறார்களென்ற கேள்விகள் இன்னமும் தொக்கி நிற்கின்றன.

2001ஆம் ஆண்டு செப்டெம்பர் பதினொராம் திகதி ஏற்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய மனோநிலையைப் பயன்படுத்திப் பயன்பெறுவதில் இலங்கை அரசாங்கமும் சிங்கள அரசியல்வாதிகளும் தவறியமை அல்லது அதற்கான திறமை இல்லாமை குறித்து இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. இலங்கைத் தேசமும் மக்களும் ஏற்கனவே அனுபவித்த துயரங்களுக்கு அப்பால் செல்வதற்கு இலங்கையின் மனோநிலையில் குழப்பங்களும் கூட இருக்கின்றன. புலிகள் தற்போதைக்குத் தமது அணுகுமுறையை அல்லது தந்திரோபாயத்தைப் புதிதாக மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டால், பின்னால் திரும்பிப் பார்ப்பதற்குக் குறிப்பாகச் சிங்கள அரசியல் சமூகம் மறுதலித்து நிற்கிறது. எதிர்காலத்தில் பயங்கரவாதம் தொடர்பான உலகளாவிய மனோபாவம் மாறமாட்டாதென்று அது தவறாக அனுமானித்துள்ளது. ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான யுத்தம் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியதை அது புரிந்து கொள்ளவும் தயாராக இல்லை.

பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுவதில் சர்வதேச சமூகம் கூட்டாகவும் அல்லது பல்வேறு விதமாகவும் பங்களிக்க வேண்டுமா என்பது குறித்து சிங்கள சமூகம் தெளிவாக உள்ளதா இல்லையா என்ற கேள்வி இன்னமும் நிலவுகிறது. இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகள் இயக்கத்துக்குமிடையிலான பேச்சுவார்த்தைக்கு மட்டுமே நோர்வே தரப்பினர் ஏற்பாட்டாளர்களாக உள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே.க.வுக்குமிடையிலான எவ்வித பேச்சுவார்த்தைகளுக்குமோ அல்லது தேவைப்பட்டால் புலிகள் இயக்கத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்குமிடையிலான பேச்சுவார்த்தைகளுக்குமோ நோர்வே தரப்பினர் ஏற்பாட்டாளர்களல்லர். சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே.க.வுக்குமிடையிலான பிரச்சினைகள் ஆழமாக வேரூன்றியுள்ளன. அதாவது, பெருமளவிலான சிங்கள சமூகத்தவர்களுக்கும் தமிழ் சமூகத்தவர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளை விட இது ஆழமானது. தமிழ் சமூகத்திற்கும் நிரந்தர சமாதானத்திற்குமிடையில் குறுக்கே நிற்பவர்கள், புலிகள் இயக்கமென்று சிலர் வாதிடுகின்றனர். சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் இருக்கக்கூடிய முரண்பாடுகள் இதனைப் போன்றே இறுதித் தீர்வுக்கு இடைஞ்சலாக



ஜனாதிபதியுடன் எரிக் சொல்ஹெய்ம்

இறுதியில் இந்த நாட்டின் சமாதான முன்முயற்சிகளில் மேலும் அதிகமான, நேரடியான பாத்திரத்தை ஏற்றுக்கொள்வதிலிருந்து சர்வதேச சமூகம் விலகிக் கொண்டது. இதற்கு இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்பட்டமையையும் ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா, இலங்கையின் சமாதான முயற்சிகளில் அதிகளவு இந்தியா ஈடுபாடு காண்பிப்பதற்கு எதிராகப் புலிகள் இயக்கத்தோடு சேர்ந்து செயற்பட்டமையையும் குறிப்பிடலாம். ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு இதுவே காரணமாக அமைந்தது.

இதற்குப் பின்னர் இலங்கையில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கங்களும், சுதந்திரக் கட்சித் தலைமையிலான அரசாங்கங்களும் பாதிக்கப்பட்ட இந்திய உணர்வுகளையும் சராசரி இந்தியனின் உணர்வுகளையும் தணித்து சாந்தப்படுத்துவதற்காக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதுடில்லியின் உதவியை தொடர்ச்சியாகக் கோரிவந்தனர். ஆயினும் சமாதான முன்முயற்சிகளைப் பொறுத்தவரை இருதரப்பு உறவுகளில் ஏற்பட்ட குறுகியகால வரலாற்று அனுபவம் மீண்டும் ஏற்படக்கூடிய சந்தேகம் இந்தியாவுக்கு உள்ளது.

இதனால் புதுடில்லியிலுள்ள எந்த அரசாங்கங்களும் அதற்குத் தயாராகவில்லை. குறிப்பாக இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை வாபஸ் பெற்ற அனுபவம், மற்றும் ராஜிவ்காந்தி படுகொலை ஆகிய இரட்டை விடயங்கள் சொகுசான பாதையில் இந்தியாவை மூக்கைப்பிடித்து இழுத்துச் செல்ல முடியாத நிலையை ஏற்படுத்தியது. புலிகளை ஆயுதபாணியாக்கிய புதுடில்லியின் ஆரம்பகாலப் பங்களிப்பு பற்றியோ அல்லது இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முதன்முதலில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் பற்றியோ இந்திய எதிர்ப்பு பொது இணக்கப்பாடு இல்லை என்பதையும் ஒரு காரணமாகக் கூறியிருந்தது. புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளை நிராகரித்தமைக்கு வேறு பல காரணங்களையும்

> ***"உள்நாட்டுத் துயரங்களைச் சர்வதேசமயப்படுத்துதல்" என்ற தலைப்பில், இந்திய கொள்கை வகுப்பு அமைப்பின் சென்னைப் பிரிவுத் தலைவரான சத்யமூர்த்தி என்ற அரசியல் ஆய்வாளர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இந்திய கொள்கை வகுப்பு அமைப்பின் தலைமையகம் புதுடில்லியில் உள்ளது. இக் கட்டுரை 'டெயிலி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.***

கூறியிருந்தார். அவற்றை பேச்சுவார்த்தை மேசையில் முன்வைத்து கலந்துரையாடியிருக்கலாம். புலிகள் இயக்கம் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை, பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆரம்பப் படியாகக்கூட பயன்படுத்தியிருக்க முடியும். இன்று பேச்சுவார்த்தை முயற்சிகள் முடக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இத்தகைய பேச்சுவார்த்தைகளில் கலந்துரையாடப்படலாமென உள்ளன. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் சமாதான நடைமுறைகளுக்காக நம்பத்தகுந்த முன்முயற்சி களை எடுத்த போது, இந்த இருவராலும் தலைமை தாங்கப்பட்ட இரு அரசியல் கட்சிகளுக்கு இடையில் நிலவிய பிரச்சினைகளே சமாதான நடைமுறைகளைத் தடம்புரளச் செய்தன. இலங்கை விமர்சகர்கள் கூறுவதற்கு அப்பால் இதனைப் பார்க்க வேண்டியுள்ளது.

அதிகாரப் பகிர்வுக்கென மேலும் கூடிய தீர்வுப் பொதியோடு புலிகள் இயக்கத்தை அணுகுவதற்கு முன்னர், தென்னிலங்கையில் சிங்களப் பொது இணக்கப்பாடு ஒன்றினை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வகட்சி மாநாட்டினைக் கூட்டியதன் மூலம் சிறப்பான பணியினை மேற்கொண்டுள்ளார். இது ஒருவகையில் நல்லது. சந்திரிகா குமாரதுங்கவும் ரணில் விக்கிரமசிங்கவும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியையே சந்தித்தன. புலிகள் இயக்கம் பேச்சை நிராகரித்தமைக்கு சிங்களத் தரப்பில் எதிர்பார்க்கப்படக்கூடிய விடயங்கள் காரணமாக பேச்சுவார்த்தைகள் முடங்கிக் கிடக்கவில்லை.

பிரதான கட்சிகளைச் சேர்ந்த சிங்களத் தலைவர்கள் சமாதானப் பாச்சா காட்டி வாக்காளர்களை ஏமாற்றி, தங்கள் பக்கம் திருப்பியிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரியது. இவ்வாறு சமாதானத்திற்குச் சாதகமான விடயங்களை இந்தச் சிங்களத் தலைவர்கள் புலிகளுக்கு முன்வைக்கவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான சிங்கள மக்கள் மத்தியிலுள்ள சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே.க.வுக்கும் காலங்காலமாக இருந்துவந்த முரண்பாடுகளின் பிரதிபலிப்பும் அவர்களின் தோல்விக்கான காரணமாகும். தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நோக்கம் இக் கட்சிகளுக்கு இருக்கவில்லை. சிங்களப் பெரும்பான்மை வாக்காளர்களை ஏமாற்றுவதற்காக வெறும் வார்த்தை ஜாலங்களையே இவர்கள் காட்டிவந்தனர். சமாதான முன்முயற்சிகளைக் காரணமாக வைத்து சிங்கள வாக்காளர்கள் தமது கட்சி விசுவாசத்தை மாற்றுவார்கள் என்று கூறுவதற்கு எவ்வித காரணமுமில்லை. இக்கட்சிகள் அதிகாரத்திலிருக்கும்பொழுது அவற்றின் தலைமைகள் சமாதானத்திற்காக மற்றச் சிங்களக் கட்சியுடன் ஒன்றிணைந்து செயல்படவோ அல்லது தமது கட்சிகள் முன்வைத்தமைக்கு மேலாக அதிகாரங்களை வழங்கவோ தயாராகவிருக்கவில்லை.

இவையெல்லாம் இலங்கையின் அரசியல்வாதிகளும் சிங்கள சமூகமும் தீர்மானிக்க வேண்டிய விடயங்களாகும். நாட்டின் அரசியல் சார்ந்த உள்விவகாரங்களோடு சம்பந்தப்பட்ட முக்கிய விடயங்களில் அந்நிய சக்திகளின் தலையீட்டைக் கோருவதென்பது பயங்கரமான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். அதாவது இலங்கையின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிடுமாறு கோரப்படும் நாடு அல்லது நாடுகளின் இரு தரப்பு உறவுகளில் தீய பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். 2300 வருட கால பதிவு செய்யப்பட்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் ஒரு நாடு, அந்த வரலாறு பற்றிப் பெருமை கொள்ளும் ஒரு நாடு, வெளியார் தலையீடு எவ்வளவு தான் விசுவாசமானதாக, உண்மையானதாக இருந்தாலும் கூட, எதிர்ப்பின்றி அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எவரும் எதிர்பார்க்க முடியாது.

இலங்கை அரசியல்வாதிகளுக்காக தீர்மானங்கள் எடுக்க வேண்டியவர்கள் அந்த நாட்டு மக்கள் என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வேறெங்காவது அக்கறையின்றி இருக்கும் அரசாங்கங்கள் அல்ல என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமது வீட்டிற்கு அண்மையிலுள்ளவருடன் பரஸ்பர நம்பிக்கை கொண்டிருக்க முடியாவிட்டால், வீட்டிற்கு அண்மையிலுள்ள வாக்காளரின் நம்பிக்கையைப் பெற முடியாவிட்டால் வேறு நோக்கங்கள் கொண்ட அந்நிய அரசாங்கங்கள் மிக அந்தகாரமான பிரச்சினையொன்றில் தலையிடுமென்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இலங்கை அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரையில் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு தெளிவானது. அதாவது முன்னைய காலங்களை விட இலங்கையின் பிரச்சினை மோசமாகி விட்டதால், அந்தக் குளறுபடிகளைத் தெளிவான முறையில் தீர்த்து வைப்பதற்கு எவரும் தயாராக இல்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.


நன்றி : டெயிலி மிரர்

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

ஆயிரம் அடிகள் வசனங்களாலேயே படமாக்கப்படவேண்டிய காட்சியில் - ஓர் எழுத்தைக்கூட மாற்றாமல், என் விருப்பப்படியே பேசி நடித்தார். அரங்கத்தில் அந்தக் காட்சி கைதட்டல்களால் நிரம்பி வழிந்தது.

பட விஷயம் இருக்கட்டும். 1976 கடையில், 'குமுதம்' நிருபர் திரு. பால்யூ ஒரு நாள் என்னைப் பார்க்க வந்திருந்தார்.



'வாலி சார்! குமுதம் பத்திரிகையின் சார்பாக 'மாலைமதி' என்கின்ற பெயரிலே மாதம் ஒரு நாவல் வெளியிடறதா முடிவு பண்ணியிருக்கிறோம். ஆசிரியர் திரு. எஸ்.ஏ.பி. உங்க நாவல்தான் முதலாவதா வரணும்னு விரும்புறாரு.. நீங்க ஒரு நாவல் எழுதித் தரணும்' என்று பால்யூ என்னிடம் கேட்டார்.

'இரவல் இறக்கைகள்' என்று ஒரு நாவலை எழுதித் தந்தேன்.

பத்து நாட்களுக்குப் பிறகு, பால்யூ வந்திருந்தார். "எஸ்.ஏ.பி. உங்களுக்கு ஒரு லெட்டர் கொடுத்திருக்கிறார்"- என்று என்னிடம் நீட்டினார்.

அந்தக் கடிதத்தில், எஸ்.ஏ.பி. என் கதையில் சில மாறுதல்கள் செய்து தரும்படி கேட்டிருந்தார்.

"நான் எழுதிய கதையை, அப்படியே பிரசுரிப்பதாக இருந்தால் தருகிறேன்" மாறுதல் எதுவும் செய்வதற்கில்லை மன்னிக்கவும்"

- என்று பணிவோடு சொல்லி நண்பர் பால்யூவைத் திருப்பி அனுப்பினேன்.

நான் செய்த காரியம் அகந்தையினால் செய்ததல்ல. சில விஷயங்களைப் பிழைப்பதற்காகச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த இரண்டாவது சமாச்சாரம்தான் சாதனையாக சரித்திரத்தில் குறிக்கப் பெறுகிறது. ஆத்ம திருப்திக்காகச் செய்யும் வேலையில், அடுத்தவர் யோசனைக்கு இடமேயில்லை.

எம்.ஜி.ஆர். நடித்த படம் ஒன்று வாஹினியில் டைரக்டர் திரு. ராமண்ணாவின் இயக்கத்தில் நடந்து கொண்டிருந்தது. அந்தப் படத்தின் கதை, திரைகதை, வசனம், பாடல்கள் அனைத்திற்கும் நான் பொறுப்பேற்றிருந்தேன்.

ஒரு காட்சியில், எம்.ஜி.ஆரும், லதாவும் - ஒரு கோவில் மண்டபத்தில் - நடித்துக் கொண்டிருக்கிறார்கள். 'கட்' என்று இயக்குநர் ராமண்ணா சொன்னார். காட்சி அனைவர்க்கும் திருப்தியாகப் படமாக்கப்பட்டு விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது, நான் மட்டும் சிறிது அதிருப்தியோடு நின்றேன்.

"என்ன.. உங்க முகம் ஒரு மாதிரி இருக்கு? எடுத்த சீன், உங்களுக்குத் திருப்தியா இல்லையா?" என்று எம்.ஜி.ஆர். கேட்டார்.

"ஆமாம் அண்ணே! உங்க Performance எதிர்பார்த்த மாதிரி அமையல்லே" -என்று நான் சொன்னதும், படத் தயாரிப்பாளர் பதறிப்போனார்.

"எம்.ஜி.அர். என்ன சொல்வாரோ? கோபித்துக் கொண்டு போய் விடுவாரோ" என்றெல்லாம் ஓர் அச்சம் அனைவர் முகத்திலும் அப்பியிருக்க, அண்ணன் எம்.ஜி.ஆர். அமைதியாக என் தோள் மீது கை போட்டவாறே என்னைத் தனியாக அழைத்துப் போனார்.

### பாட்டும் பாராட்டும்


இந்த சீன்ல, நான் என்ன பண்ணனும்னு நீங்க எதிர்பார்க்கிறீங்க? சொல்லுங்க" என்றார் அண்ணன் எம்.ஜி.ஆர்.

"அண்ணே! கோவில்ல சிதறு தேங்காய்ப் பொறுக்கி சாப்பிடுற, புத்தி ஸ்வாதீனமில்லாத ஒரு பித்தனா நீங்க நடிக்கிறீங்க" அப்ப கோவிலுக்கு வந்து சாமி கும்புடுகிற கதாநாயகியின் தலையில் இருக்கிற பூவைப் பிச்சு நீங்க அவசர அவசரமாக வாயில போட்டுக்கிட்டு மெல்லுறீங்க" - என்று நான் சொல்லி முடிப்பதற்குள் -

(தொடரும்.......)




# ஒரு முத்தம் உ5 லட்சம்!



ஆலிவுட் திரை உலகில் தொடர்ந்து பல ஆண்டுகளாக முன்னணி நடிகையாகத் திகழ்பவர் சரான் ஸ்டோன். கவர்ச்சிப் புயலான இவருக்கு உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கான இரசிகர்கள் இருக்கிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு சரான் ஸ்டோன் சமூக சேவை நிறுவன விழா ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அவருக்கு முத்தம் கொடுக்க இரசிகர்கள் முண்டியடித்தனர்.



தனக்கு முத்தம் கொடுக்க இவ்ளோ போட்டியா? என்று ஷரான் ஸ்டோனுக்கு பெருமிதம்! அடுத்த கனமே மைக்கில் இப்படி சொன்னார்.

எனது கன்னத்தில் முத்தமிட விரும்புபவர்கள் ரூ.25 லட்சம் தர வேண்டும் என்றார்.

இதைக் கேட்டதும் முண்டியடித்த இரசிகர்கள் கப் - சிப்பானார்கள்.

ஆனால் தீவிர இரசிகர் ஒருவர் அந்த மேடையிலேயே ஷரான் ஸ்டோனுக்கு ரூ.25 லட்சம் கொடுத்து ஆசை ஆசையாக அவரது கன்னத்தில் முத்தம் கொடுத்தார். இதேபோல இன்னொரு பெண் இரசிகரும் ரூ.25 லட்சம் கொடுத்து தனது முத்த ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்.

இது பற்றி ஷரான் ஸ்டோனிடம் கேட்டதற்கு அவரது பதில்.

நான் எனது சொந்த நலனுக்காக இரசிகரிடம் பணம் வசூலிக்கவில்லை. சமூக சேவை நிறுவனத்திற்கு நிதி திரட்டவே அப்படி ஒரு அறிவிப்பு செய்தேன். ஆனால் மறு நிமிடமே இவ்வளவு பெரிய தொகை (ரூ.50 லட்சம்) கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

ஆனால் சமூக சேவை நிறுவன நிர்வாகிகளுக்கு ஏக மகிழ்ச்சி.

என்னைப் பொறுத்த வரையிலும் நான் நன்றாக இருப்பதைவிட ஊனமுற்றோர் நலன்தான் முக்கியம். என்னால் முடிந்த அளவுக்கு எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதை பெருமையாக நினைக்கிறேன். உணவு அளிப்பதற்காக தொடர்ந்து நிதி உதவியும் செய்து வருகிறேன்.

இப்போதெல்லாம் நடிகைகள் பலர் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்கிறார்களே?

சிலருக்கு முகத்தில் மூக்கு, நெற்றி, வாய் போன்ற பகுதி ஏதாவது அழகை கெடுப்பதாக இருந்தால் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்வதில் தவறில்லை. நான் கூட எனது கழுத்தில் சர்ஜரி செய்துள்ளேன்.

உங்களுடன் நடித்த நடிகர் அர்னால்டை சிறந்த கவர்னர் என்று முன்பு கூறி இருந்தீர்கள். இப்போது அவரது செயல்பாடுகள் திருப்தியாக உள்ளதா?

சீச்சி...இவரைப் போயா நாம் ஆதரித்தோம் என்று வெட்கமாக உள்ளது. சினிமாவில் வேண்டுமானால் அவர் ஹீரோவாக இருக்கலாம். மக்கள் சேவையில் அவர் ஒரு ஜீரோவாகத்தான் இருக்கிறார்.

நடிகர் அர்னால்டுக்கு அடுத்த தேர்தலில் நீங்க ஓட்டு போடுவீங்களா?

சர்வ நிச்சயமாக நான் அவருக்கு ஓட்டுப் போடமாட்டேன். மக்களுக்கு நல்லது செய்யாதவருக்கு ஓட்டுப் போட என் மனசாட்சி ஒப்புக் கொள்ளாது என்கிறார் ஷரான் ஸ்டோன் சற்று ஆவேசமானவராக!



# மரணத்தை வென்ற பாடகி

புற்று நோயினால் பீடிக்கப்பட்டிருந்த பிரபல பொப் பாடகி கைலி மினோக், இப்போது அந் நோயிலிருந்து முழுமையாக சுகம் பெற்றிருப்பதாக அவரே அறிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி 'ஸ்கை வன்' தொலைக்காட்சியில் தோன்றி அவரே இந்த விடயத்தைக் கூறியிருந்தார்.

நான் மிகவும் அன்பாக உங்களுக்குக் கூறுவது என்னவென்றால், புற்று நோயைத் தோற்கடிக்க முடியும் என்பது அவரது கூற்றாகும்.

அவுஸ்திரேலியாவில் பிறந்துள்ள கைலி பல்வேறு விருதுகளைப் பெற்ற முன்னணி பாடகிகளுள் ஒருவராவார். உலகப் புகழ்பெற்ற 'ஷோ கேர்ள்' பொப்பிசைக் குழு இவரது கடும் முயற்சியினால் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் புதிய பாடல் அல்பம் ஒன்றை இவர் வெளியிட உள்ளார்.

மரணத்தை வென்ற பாடகி!

# தாய்!

எஞ்சலினா ஜொலி இரு குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்த்து வருகின்றார். இதில் இரண்டாவது குழந்தை எத்தியோப்பியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சஹாரா என்ற குழந்தையாகும்.

இதில் இப்போது ஒரு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதாவது, இந்தக் குழந்தையின் தாய் நான் என்று எத்தியோபியாவைச் சேர்ந்த 18 வயதுடைய ஒரு பெண் அண்மையில் கூறியிருக்கிறார்.

மெண்டிவேப் டாவிட் எனும் இப் பெண் தான் எத்தியோப்பியாவில் வைத்து ஒருவரால் கற்பழிக்கப்பட்டதாகவும், இதன் காரணமாக தான் கர்ப்பமானதாகவும் கூறியுள்ளார்.

இவரது பெற்றோரும் உறவினர்களும் கருவை அழித்து விடுமாறு வற்புறுத்திய போதும் தான் அக்குழந்தையைப் பெற்றெடுக்கத் துணிந்ததாகவும் மேலும் கூறியுள்ள இவர் தற்போது தனது குழந்தைக்கு நல்லதொரு தாய் கிடைத்திருப்பதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் கூறியுள்ளார்.

வாழ்க தாய்க்குலம்!



# உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....

உண்மை வெளியானால் முக்கியமான பொறுப்பிலுள்ள பல இராணுவ அதிகாரிகளின் சாயம் வெளுத்துவிடும் என்று குறிப்பிடுகிறார்.

1979இல் வை.பீ.சவான் துணைப் பிரதம மந்திரியாக இருந்தார். சரண்சிங் அப்போது பிரதம மந்திரி. அவருடைய உதவியாளராக வேலை பார்த்த மகாவீரர் பிரசாத் என்பவர் KGBக்காக உளவு வேலை பார்த்ததாகக் கைது செய்யப்பட்டார். அதே ஆண்டு பாதுகாப்பு அமைச்சகத்தில் உள்ள டிக்காராம் என்கிற குமாஸ்தா, பாகிஸ்தானுக்கு ரகசியங்களை விற்றதாகக் கைது செய்யப்பட்டார். பாகிஸ்தானியரிடமிருந்து மாதம் ஆயிரம் ரூபாய் ஊதியமாய்ப் பெற்று இருபதாண்டுகளாக அவர் அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

ராஜஸ்தான், பஞ்சாப், காஷ்மீர் ஆகிய மாநிலங்கள் பாகிஸ்தான் எல்லையில் அமைந்தவை. பாகிஸ்தான் உளவாளிகள் பலர் செருப்புத் தைக்கும் தொழிலாளி போலவும், பத்திரிகை வியாபாரி போலவும் இந்த மாநிலங்களுக்குள் நுழைந்து உளவு பார்க்க முயற்சிப்பதும், அவ்வாறு சந்தேகப்படுகின்றவரை பொலிஸார் கைது செய்வதும் சர்வ சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்களே.


### வெளிநாட்டு நிறுவனங்கள்

Multi Nationals என்று சொல்லப்படும் வெளிநாடுகளின் வர்த்தக நிறுவனங்கள் இங்கே செயல்பட தொடங்கிய பிறகு அந்த வர்த்தக நிறுவனங்களின் மூலமாக அந்த நாடுகளுக்காக உளவு வேலை பார்க்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. இந்த நிறுவனங்களில் பல நம்முடைய இராணுவத்திற்குத் தேவையான கருவிகளையும் உதிரிப் பாகங்களையும் சப்ளை செய்கின்ற ஆர்வத்தோடு இருப்பதால் இவை நம்முடைய அரசின் மனப்பான்மை பற்றி தெரிந்து கொள்ளவும், தம்முடைய தேவைகளை எங்கிருந்து பெறுகிறோம், எங்கிருந்து பெறக்கூடும் ஆகிய விபரங்களை அறிந்து கொள்ளவும் தீவிர நாட்டம் காட்டத் தொடங்குகின்றன. இதற்குத் தேவையான தகவல்களை நம்முடைய தொழில் அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், நிதி அமைச்சகம், வெளியுறவு அமைச்சகம் போன்றவற்றின் மூலம்தான் பெற முடியும். இதற்கு அவர்கள் ஒரு வழியைக் கையாளுகிறார்கள். இந்த அமைச்சகங்களில் பொறுப்பான பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்களை நிறைய சம்பளம் கொடுத்து தங்களுடைய நிறுவனங்களில் வேலைக்கமர்த்திக் கொள்கிறார்கள். இந்த ஓய்வுபெற்ற அதிகாரிகளும் தங்கள் தொடர்புகளைப் பயன்படுத்தி தகவல்களைப் பெறுவது சுலபமாகி விடுகிறது. இப்படித்தான் இந்திய இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற லார்கின்ஸ் சகோதரர்கள் ரகசிங்களைப் பெற்றார்கள். பிரான்க் லார்கின்ஸ் (மூத்தவர்) இந்திய இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல், கென்னத் லார்கின்ஸ், விமானப் படையிலிருந்து ஓய்வுபெற்ற ஏர் வைஸ் மார்ஷல். இவர்கள் இருவரும் அந்நிய நாடுகளுக்கு நம்முடைய ரகசியங்களை விற்றதாக 1983இல் கைது செய்யப்பட்டார்கள்.

Fabric Natianals என்கிற துப்பாக்கிகள் தயாரிக்கும் பெல்ஜிய நிறுவனத்தில் ஃபிரான்க் வேலை பார்த்தார். புது டில்லியிலுள்ள உஷா சர்வீஸ் கன்ஸல்டன்ட்ஸ் என்கிற நிறுவனத்தில் கென்னத் வேலை பார்த்தார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)




# காதலோ காதல்



பொலிவுட் நடிகை பிபாஷா பாசு கடந்த வருடம் தனது எடையைக் குறைத்துக் கொண்டு கவர்ச்சியை மேலும் அதிகரித்துக் கொண்டதாக பொலிவுட் வட்டாரங்களில் செய்திகள் அடிபட்டன. அது உண்மை என இப்போது அவரே ஒப்புக் கொண்டுள்ளார்.

தற்போது இவர் உண்மையிலேயே தன்னைத் தானே காதலிக்க ஆரம்பித்துள்ளாராம். இதனால் பொலிவுட் நடிகர் ஜோன் ஏப்ரஹாம் இவரை மிக அதிகமாகக் காதலித்து வருகின்றாராம்!


இதே நேரம் 'நோ என்ட்ரி' எனும் திரைப்படத்தில் நடித்துள்ளதன் மூலம் தனது புகழ் அதிகரித்துள்ளதாகவும் பிபாஷா கூறி வருகின்றார்.

ஏதோ...காதல் கை கூடினால் சரி!

# தண்ணீரே ஒரு ஆயுதமாக!

**மீண்டுமொரு** பாரிய உத்தியோகபூர்வமான யுத்தமொன்று வெடிப்பதற்கு திருகோணமலை மாவிலாறு அணைக்கட்டுப் பிரச்சினை வழிவகுத்துவிடுமோ என்ற அச்ச நிலையே தற்போது தோன்றியுள்ளது.

கடந்த 20.07.2006 அன்று மகாவலி ஆற்றின் கிளை நதியான மாவிலாறு கால்வாயின் அணைக்கட்டுத் துரிசை புலிகள் பூட்டியதன் மூலம் சேருவில, தெஹிவத்த, நிலாப்பொல, சோமபுர போன்ற சிங்களக் கிராமங்களும் கிளிவெட்டி, மீன்காமம், மல்லிகைத்தீவு, பட்டித்தீவு, பாரதிபுரம், நாராயணபுரம், இருதயபுரம் போன்ற தமிழ்க் கிராமங்களும், தோப்பூர், கங்குவெலி போன்ற முஸ்லிம் கிராமங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இங்குள்ள மக்களுக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், இப்பகுதிகளில் வாழும் 1,500 விவசாய மக்களின் 30 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் கால்நடைகளும் நீரின்றி பாதிக்கப்பட்டுள்ளது.



பூட்டப்பட்டிருக்கும் மாவிலாறு அணை

இதுகால வரைக்கும் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும், அடக்கு முறைகளுக்கும் எதிராகப் போராடுவதாகக் கூறிவந்த புலிகள், தற்போது அப்பாவி மக்களின் அடிப்படை வாழ்வாதார உரிமைகளை, பறிப்பது அல்லது முடக்குவது அர்த்தமற்றதும், கண்டிக்கப்பட வேண்டியதொன்றுமாகும். இப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணும் நோக்கில் கடந்த 22 ஆம் திகதி நீர்ப்பாசன அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் பணிப்புரையின் பேரில் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் தலைமையில் பொறியிலாளர் குழுவினர் மாவிலாறு அணைக்கட்டை நோக்கிப் பயணமாகினர். மாவிலாறு அணைக்கட்டுக்கு ஒன்றரை கிலோ மீற்றர் முன்னதாக இக்குழுவினரை வழிமறித்த புலிகள், இதற்குமேல் செல்லமுடியாது என்று கூறி திருப்பியனுப்பினர். அதன்பின்னர் கண்காணிப்புக்குழுவினரூடாக பிரச்சினைகளை எடுத்துக்கூறிய அரசாங்கம், அணைக்கட்டை திறந்துவிடுமாறு கேட்டுக் கொண்டது. அதற்குப் புலிகள் அணைக்கட்டைத் திறப்பதாயின் தமது நான்கு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்க வேண்டுமென்று கூறினர்.


* தங்கள் பகுதிகள் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்படவேண்டும்.

* இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்.

* தமது பகுதிகளில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும்.

* இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியினூடாகப் பயணம் செய்யும் மக்களின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் உத்தரவாதமளிக்க வேண்டும். என்பனவே அந்த நிபந்தனைகளாகும்.

இக் கோரிக்கைகளை மக்களே அரசாங்கத்திடம் விடுத்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட மக்களே அணைக்கட்டை மூடியுள்ளதாகவும் புலிகள் வெளி உலகிற்குத் தெரிவித்தனர். இக் கோரிக்கைகளில் சில, மக்களின் அடிப்படை பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்டவை என்பதை மறுக்கமுடியாது. எனினும் அதற்காக அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடாத்தி ஒரு தீர்வினைக் கண்டிருக்க முடியும். அல்லது திருகோணமலை மாவட்டத்தில் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் கூட்டமைப்பு, பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்மக்களின் நலனில் அக்கறை கொண்டு பிரச்சினைகளை நேரடியாக அரசாங்கத் தரப்பினருடன் பேசித் தீர்வு கண்டிருக்க முடியும்.



மாவிலாற்றின் வழியில் மீண்டும் தண்ணீர் வருமா என்று காத்திருக்கும் பெரியவர்.

இவற்றில் எதையும் செய்யாமல் அரசாங்கத்தை அடிபணிய வைக்கலாம் என்ற நோக்குடன் ஒரு பகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, இன்னுமொரு பகுதி மக்களின் வாழ்வாதார உரிமையான தண்ணீரை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது அல்லது பணயமாக வைத்துச் செயல்படுவது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.

இந்நிலையில் கண்காணிப்புக் குழுவின் ஊடாக சமரச முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டபோதும் அவை பயனளிக்கவில்லை. கடந்த 26ஆம் திகதி பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் பேசிய திட்ட அமுலாக்கல் அமைச்சரும், பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல, மாவிலாறு அணைக்கட்டு நீரைப் புலிகள் தடுத்து நிறுத்தியது பாரதூரமான விடயமென்றும், 1977ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 54ஆம் பிரிவின் 02ஆவது சரத்தின்படி வாழ்வாதார உரிமைகளுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கையாக இதனைக் கருதலாமென்றும், இது தொடர்பாக ஐ.நா சபைக்கும், சர்வதேச நாடுகளுக்கும் தாம் முறையிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் அன்றைய தினம் காலையில் புலிகளால் முல்லைத்தீவில் புதிதாக அமைக்கப்படும் விமான ஓடுதளம் மீதும், மாலையில் மாவிலாற்றை அண்டிய ஈச்சிலம்பற்றுப் பகுதியிலும் விமானப் படையினர் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டனர். இதன்போது புலிகள் தரப்பில் 7 பேர் கொல்லப்பட்டதுடன், 8 பேர் படுகாயமடைந்தனர். இதுபற்றிக் கருத்து வெளியிட்ட அரசாங்கம், நீரைத் திறந்து விடுவது தொடர்பாகப் புலிகளின் எத்தகைய நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளமுடியாதென்றும், இறைமையுள்ள, நாட்டின் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீரைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுக்குமென்றும், இவ்விடயத்தில் புலிகளுடன் சமரசப் பேச்சுக்கள் பயனளிக்காத காரணத்தினாலேயே அரசாங்கம் இராணுவ நடவடிக்கை மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும், இது யுத்தமல்ல என்றும், சமாதான நடவடிக்கைகளை இது பாதிக்காது என்றும் கூறியிருந்தது.

இது இவ்வாறிருக்க, தென்னிலங்கையிலுள்ள கடும்போக்கு கட்சிகளிலொன்றான ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித்த தேரரின் தலைமையில் மாவிலாற்றுக்கு 4 1/2 மைல் தூரத்திலுள்ள கல்லாற்றுக்கு ஒரு குழுவினர் சென்று அணைக்கட்டை திறக்கப் போவதாக ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களைத் தடுத்து நிறுத்திய இராணுவத்தினர், இப்பிரச்சினைக்கு தாம் 48 மணிநேரத்திற்குள் தீர்வு காண்பதாகக் கூறி திருப்பியனுப்பினர். மேலும் தெரிவு செய்யப்பட்ட புலிகளின் இலக்குகள் மீது இலங்கை விமானப்படையினர் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டனர். 29ஆம் திகதி மட்டக்களப்பு கரடியனாறு தேனகம் மண்டபம் மீது விமானப்படை குண்டுகளை வீசியது. இதன்போது 12 குண்டுகள் மண்டபம் மீது வீழ்ந்து வெடித்ததில், தமது தரப்பில் 8 உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன், 4 பேர் காயமடைந்ததாகப் புலிகள் கூறியிருந்தாலும், அதைவிடப் பலமடங்கு இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதன் பின்னர் நிலைமை மேலும் மோசமாகியது. ஏனெனில் இக்காலப் பகுதியில் தான் பின்லாந்தும், அதைத் தொடர்ந்து டென்மார்க்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளிலிருந்து வெளியேறுவதாக அறிவித்தன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் கடந்த 31ஆம் திகதி மாவிலாற்றுப் பகுதியில் இருதரப்பினருக்குமிடையில் கடும் சமர் மூண்டது. இதில் இருதரப்பிலும் பெரியளவில் சேதங்கள் ஏற்பட்டபோதிலும், பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை. தாக்குதல்களை நிறுத்தும் வரை நீரைத் திறந்து விட முடியாது என்று புலிகள் இயக்கமும், நீரைத் திறந்து விடும் வரை தாக்குதல் தொடரும் என்று அரசாங்கமும் கூறிவருகின்றன. இதற்கிடையில் இனவாத அரசியற் கட்சிகளின் அழுத்தம் ஒருபக்கம், நீரின்றி வாடும் மக்களும், விலைநிலங்களும், கால்நடைகளும் மறுபக்கம் என அரசாங்கம் பல வழிகளிலும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் சிக்கியுள்ள அதேநேரம், நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் வெடித்தால் அதை எதிர்த்துப் புலிகளைச் சமாளிக்க வேண்டிய ஆற்றலை அதிகரித்துக்கொள்ள வேண்டிய நிலையிலும் உள்ளது.

இந்நிலையில் மாவிலாறு தண்ணீர் விவகாரம் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செயலிழக்கச் செய்துள்ளதான தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்பத்திலேயே மக்களின் பெயரால் புலிகள் தண்ணீரைத் தடுத்ததானது மனிதாபிமானமற்றது என்பதை புரிந்து நடந்து கொண்டிருக்க வேண்டும். அதேபோல் அரசாங்கமும் முடியுமானவரை சகல வழிகளிலும் பிரச்சினையை அணுகியிருக்கலாம். ஆயுத மோதல்களால் இழப்புகளைத் தவிர, வெற்றிகளைக் காண முடியாது என்பதை கடந்த காலம் உணர்த்தியுள்ளது. தற்போது வரை மாவிலாறு தண்ணீர் விவகாரத்தில் புலிகள் விரித்த வலையில் அரசாங்கம் விழுந்து விட்டதாகவே ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இருதரப்பு இழப்புகளையும், பின்னடைவுகளையும் பார்க்கும் போது மாவிலாறு நிலத்தில், தண்ணீர் வந்ததோ இல்லையோ, மனித ரத்தம் வந்தது. சாதாரண மாவிலாறு பிரச்சினையை எதிர்கொள்வதற்கு எத்தகைய விலையைக் கொடுக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்வது அவசியமாகும். அர்த்தமற்ற கௌரவத்திற்காகவும், ஆயுத பலத்தை பரீட்சிப்பதற்காகவும் மாவிலாறு விவகாரத்தை அரசும், புலிகளும் பார்க்காமல் தண்ணீரில்லாமல் அவஸ்தைப்படும் மக்களின் அவலங்களிலிருந்து இவ்விவகாரத்தைப் பார்க்க வேண்டும் என்பதே மனிதநேயமிக்க மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.



பத்து நாட்களுக்கு பிறகு மாவிலாற்றின் கோலம்.


எஸ்.எஸ்



தானம் வேள்வி தவங் கல்வி யாவும்
தரணி மீதில் நிலைபெறச் செய்வேன்,
வானம் மூன்று மழைதரச் செய்வேன்,
மாறி லாத வளங்கள் கொடுப்பேன்;

- சுப்பிரமணிய பாரதியார்

# ஞானதிருஷ்டி!



பாண்டு மன்னன், 'கிந்தா மகன்' என்ற முனிவரின் சாபத்தால் காலமானார். அவன் இறப்பதற்கு முன்னால் தன் புதல்வர்களான பாண்டவர்களை அழைத்து, "நான் இறந்ததும் நீங்கள் என் பிணத்தைத் தின்றுவிடுங்கள். அதன் மூலம் உங்களுக்கு ஞான திருஷ்டி ஏற்படும்" என்றார்.

தந்தையின் சொல்லை என்றுமே தட்டி அறியாத பாண்டவர்கள், தந்தை இறந்ததும் அவர் பிணத்தைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று தின்னப் போனார்கள். அப்பொழுது அங்கே திடீரென்று தோன்றிய கிருஷ்ணன், "மைத்துனர்களே! நீங்கள் எப்பொழுது பிணம் தின்னும் மனிதர்கள் ஆனீர்கள்" என்று கேட்டார்.

தருமர் தங்கள் தந்தை கூறியதை கிருஷ்ணரிடம் கூறினார்.

கிருஷ்ணர் அதைக் கேட்டு நகைத்து, "உங்கள் தந்தை வயதான காலத்தில் புத்தி கெட்டு உளறினால், அதற்காக நீங்கள் பிணத்தைத் தின்பதா? கூடவே கூடாது. நீங்கள் எல்லோரும் சென்று விறகு சேகரித்து வாருங்கள். பிணத்தை எரித்து விடலாம்" என்றார். பாண்டவர்கள், உடனே விறகு சேகரிக்கச் சென்றார்கள். ஆனால், சகாதேவன் மட்டும் போகாமல் நின்று கொண்டு இருந்தான்.

"சகாதேவா! நீ ஏன் போகவில்லை? என்று கேட்டார் கிருஷ்ணர்".


**பாப்பா முரசு சிறுகதை**

"தந்தையின் பிணத்தைக் காவல் செய்கிறேன்" என்றான் சகாதேவன். அவனுடைய பேச்சில் சந்தேகம் ஏற்பட, கிருஷ்ணர் கறுப்புப் பூனை வடிவம் எடுத்துக் கண்காணித்தார்.

அதற்குள் சகாதேவன் தந்தையின் பிணத்தில் ஒரு கை விரலைப் பிய்த்து விழுங்கினான். அது வயிற்றுக்குள் போனதும், அவனுக்கு ஞான திருஷ்டி ஏற்பட்டது. அதன் மூலம் கிருஷ்ணர் தங்களுக்கு ஞான திருஷ்டி ஏற்படாதவாறு சூழ்ச்சி செய்துவிட்டார் என்பது தெரியவந்தது. அது புரிந்ததும் அவனுக்குக் கிருஷ்ணரின் மீது கோபம் ஏற்பட்டது. அதே சமயத்தில் கறுப்புப் பூனை உருவத்தை விட்டு சுய உருவில் தோன்றிய கிருஷ்ணர், 'சகாதேவா! என்ன காரியம் செய்துவிட்டாய்? உனக்கு ஞான திருஷ்டி பயன் பட்டால், என்னுடைய கிருஷ்ண அவதாரநோக்கமே பயன்படாமல் போய் விடும். அதனால் நான் உனக்குச் சாபம் இடுகிறேன். நீ யாரிடமாவது எதிர்காலத்தைப் பற்றிக் கூறினால், அந்தக் கணமே உன் தலை வெடித்து விடும்" என்றார்.

"கிருஷ்ணா! நடக்கப் போகும் குருஷேத்திரப் போரில் பஞ்ச பாண்டவர்களாகிய எங்கள் ஐவரையும் நீ காக்க வேண்டும். எங்களில் யாராவது ஒருவர் இறந்தாலும் உன் தலை சுக்கு நூறாக வெடித்து விடும்?" என்று எதிர்ச் சாபம் போட்டான் சகாதேவன். அதற்குள் மற்றவர்கள் விறகுகளைக் கொண்டுவர, பாண்டு மன்னனின் உடல் எரியூட்டப்பட்டது. கிருஷ்ணர் தன் அவதார நோக்கத்தோடு, சகாதேவனின் சாபத்திற்காகவும் பயந்து, பஞ்ச பாண்டவர்களை குருஷேத்திரப் போரில் கண்ணை இமை காப்பது போலக் காத்து ரட்சித்தார். கடைசி வரையில் சகாதேவனும் தன் ஞான திருஷ்டியைப் பயன்படுத்தவில்லை.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08.08.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 655**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 653

**பரிசுக்குரியவர்:**
ஏ. ரொஷ்னியா, தரம் - 8, புனித கபிரியேல் பெண்கள் கல்லூரி, ஹட்டன்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சாஜிதா நஸார், தரம் - 3A, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 12. | அச்சினி, தரம் - 6, கிங்ஸ்டன் தேசிய கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15. |
| ஏ. ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ, கொடிகாவத்த. | ரா. திவ்யா, 175.லோவர் வீதி, பதுளை. |
| எம். ஜே. எம். அஸார்தீன், 53/ 1, பாடசாலை வீதி, கொடபிடிய, அகுறஸ்ஸ. | த. யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| வே. டிவஸ்ரிகா, தரம் - 2T, கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு. | எம். ஜனார்த்திக்கா, இல.31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. |
| கே. பிரசாந்தி, 89,பாபா பதி இல்லம், ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. | வை. ஜூம்லாட் பிர்மிளா, மக்களூற்று வெள்ளைமணல். |

# ஆத்திசூடி

## மேன் மக்கள் சொல் கேள்!

**நீ மேன்மையான குணம் உடையவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நட.**

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# தோகை மயில்


கொடியில் சேவல் தாங்கிய
குமரன் முருகன் வாகனம்
குடியரசாம் இந்திய
தேசப்பறவை மாமயில்

ஏழு வள்ளல் வரிசையில்
இடம் பிடித்த பேகனின்
வாழை போன்ற கருணையால்
போர்வையன்று பெற்றது!

குச்சிக்கால்கள் கொண்டது
குயில்கள் கூவும் சோலையில்
பச்சை வண்ணத்தோகையை
நடனம் போல விரிக்குது!

பொட்டு வைத்த சிறகினை
புத்தகத்துள் வைப்பதால்
குட்டி போடும் அதுவென
குழந்தை நம்பும் ஆசையாய்.


அழகு மயிலின் பா(ஓ)சையை
அகவல் என்று கூறுவார்.
பழகு தமிழின் செய்யுளில்
பாடல் உண்டு அகவலாய்.



# அதிசய உலகம்

## ஸ்டார் நோஸ்ட்மோல்!

**ஸ்டார்** நோஸ்ட் மோல் எனப்படும் பிராணி, உலகிலேயே மிகவும் வேகமாக சாப்பிடும் பிராணியாகும். இது 227 மில்லி செகன்டில் தன்னுடைய உணவை பிடித்துத் தின்றுவிடும். இந்த மோல் 20 சென்டி மீற்றர் நீளம் இருக்கும். இதில் மூன்றில் ஒரு பங்கு வால் பகுதி இருக்கும். இதன் எடை 75 கிராம். இவ்வளவு குட்டியாக இருந்தாலும் தன்னுடைய கை விரல்களைக் கொண்டு மிக அழகாக குழிதோண்டி வளைவளையாக வீடு அமைக்கும். இதன் மூக்குப் பகுதி பிங்க் நிறத்தில் இருக்கும். இந்த இடம் சதைபற்றாக இருக்கும். இதன் சுரனை கொம்புகள் குட்டி குட்டியாக கை விரல்களைப் போல் இருக்கும். இது பார்ப்பதற்கு நட்சத்திரம் போன்று தெரிவதால் இப்பெயர் வந்தது. இதற்கு 25 ஆயிரம் உணர்வுக் கொம்புகள் உள்ளன. இவை நீரிலும் நிலத்திலும் உள்ள புழு, பூச்சிகளை கண்டுபிடித்து லபக் செய்ய உதவுகிறது. இது மிக நன்றாக நீந்தும்; முக்கால்வாசி நேரம் தண்ணீரிலேயே இருக்கும். தண்ணீர் ஐஸ் கட்டி போன்று இருந்தாலும் அங்கேயே இருப்பதை மிகவும் விரும்பும்.



# சில விடுகதைகள்


1. இணையாத இருவர் பயணத்துக்கு ஏற்றவர்கள் - அவர்கள் யார்?
2. இட்டேன் எடுக்க முடியலை - அது என்ன?
3. இருட்டுக்காட்டிலே குருட்டுப்பன்றி மேயுது - அது என்ன?
4. உறவுக்காரர் அல்ல ஆனாலும் உரிய தகவல் தருவார் - அவர் யார்?
5. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் - அவன் யார்?
6. இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம் - அது என்ன?
7. ஐவருக்கும் ஒரே வீடு அது என்ன?
8. ஒருவனுக்கு உணவளித்தால் ஊரையே கூட்டுவான் - அவன் யார்?
9. ஓடுவான் சாடுவான் ஒற்றைக்காலில் நிற்பான் - அவன் யார்?
10. ஓடுகிற குதிரைக்கு விலாவெல்லாம் ஓட்டை - அது என்ன?

**விடைகள்**
1. ரெயில் தண்டவாளம்
2. கோலம்
3. தலைமுடி - பேன்கள்
4. தபால்காரர்
5. எறும்பு
6. மூக்கு
7. உள்ளங்கை
8. காகம்
9. கதவு
10. ரெயில்.

# தகவல் பெட்டி

## பலூனில் சாகசம்

**ஹீ**லியம் வாயு நிரப்பப்பட்ட 600 சாதாரண விளையாட்டு. பலூன்களைப் பயன்படுத்தி 11,000 அடி தூரத்துக்குப் பறந்து இயன் ஆஸ்போல் என்பவர் சாதனை படைத்தார். தென்வேல்ஸிலுள்ள கிளவ்செஸ்டசயர் என்ற இடத்திலுள்ள ‘வை’ பள்ளத்தாக்குக்கு மேலாக 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி இவர் இந்த சாதனையைப் புரிந்தார். பிரிட்டனின் சேம்ரிஜ் சயர் என்ற இடத்தைச் சேர்ந்த இவரது சாதனை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.




## காப்புறுதி செய்யப்பட்ட காது



**இ**ங்கிலாந்திலுள்ள மேற்கு சசெக்ட் என்ற இடத்திலுள்ள பில் ஜெப்றீஸ் என்பவர் வளர்க்கும் நாய், உலகிலேயே அதி நீளமான காதுகளைக் கொண்ட நாயென 2004ஆம் ஆண்டு உலக சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. இந்த நாயின் காதுகளின் நீளம் 11.5 அங்குலமாகும். இந்த நாயின் காதுகள் 47,800 டொலர்களுக்குக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பெறுமதி மிக்க ‘ரூபி’



**செ**ன்.மொரிஸ் என்ற இடத்தில் 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற ஏலவிற்பனையில் கிறிஸ்டீஸ் என்ற ஆபரண விற்பனை நிலையம் உலக சாதனையொன்றை ஏற்படுத்தியுள்ளது. அதாவது 8.62 கரட் ரூபி என்ற இரத்தினக்கல் முப்பத்தாறு லட்சம் டொலர்களுக்கு விலை போனது. அதாவது ஒரு கரட் இரத்தினக்கல் கிட்டத்தட்ட நான்கு இலட்சத்து இருபத்தையாயிரம் டொலர்களுக்கு ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது முன்னைய சாதனையை விட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமானது. ஒருவருடத்திற்கு முன்பு நடைபெற்ற ஏல விற்பனையில் ஒரு கரட் ரூபி இரத்தினக்கல் இரண்டு இலட்சத்து எழுபத்தையாயிரம் டொலர் விலை போனது. பட்டைத் தீட்டப்படாத வர்ணத் தரம் வாய்ந்த இரத்தினக்கற்களுக்கு கடந்த சில வருடங்களாக விலைகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். கிறிஸ்டீஸ் ஆபரண விற்பனை நிலையம் அதிக விலைக்கு விற்று சாதனை நிலை நாட்டிய இரத்தினக்கல் பர்மிய ரூபி என்பது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்மஸ் தாத்தா




**நா**ன்காயிரத்திற்கு மேற்பட்ட நத்தார் தாத்தாக்கள் லிவர்பூல் என்ற இடத்தில் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நான்காம் திகதி ஒன்றுகூடி நன்கொடை வழங்குவதில் சாதனை படைத்தார்கள். இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக 4514 பேர் முன்வந்த போதிலும், நத்தார் தாத்தாக்கள் அணியும் ஆடைகள் பற்றாக்குறையாக இருந்ததால் நூற்றுக்கணக்கானோர் திருப்பியனுப்பப்பட்டனர். வேல்ஸிலுள்ள போவர்ஸ் என்ற இடத்தில் போட்டிக் குழுவொன்றினால் ஏற்படுத்தப்பட்ட சாதனையை லிவர்பூலைச் சேர்ந்தவர்கள் முறியடித்தனர்.

## மண் சிற்பம்



**மி**கப் பிரமாண்டமான மண்ணாலான சிற்பமொன்றினைச் செய்தவரென்ற உலக சாதனையை நெதர்லாந்தைச் சேர்ந்த தோமஸ் என்பவர் புரிந்துள்ளாரென்று கின்னர்ஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கைத்தொழில் பொறியியல் துறையில் முதுமானிப்பட்டம் பெற்ற இவர், 1998ஆம் ஆண்டு சிற்பவேலைகளில் ஈடுபடத்தொடங்கினார். உலகெங்கிலும் இடம்பெற்ற மண்ணினாலான சிற்பங்களை உருவாக்கும் பல நிகழ்ச்சிகளில் இவர் பங்குபற்றியுள்ளார். வட அமெரிக்காவில் மண் சிற்பங்களைச் செய்யும் போட்டியிலும் இவர் சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றுள்ளார். இவரது சிற்ப வேலைகளுக்காக சிறுவர் முதல் முதியோர் வரையானவர்களின் மனம் கவர்ந்த சிப்பியாக இவர் மதிக்கப்படுகிறார்.



சிம்பு - அசின்
ஏசி

## சிம்பு நல்லவனுமில்லை! வல்லவனுமில்லை!
### –ரீமா சென்

**எ**ன்ன ஆச்சு வல்லவன்? படத்தில் உங்களுக்கு நல்ல கேரக்டர்னு பேசிக்கிறாங்க? என்று ரீமாவிடம் கேட்டதுக்கு சிம்பு பற்றி செதுக்குகிறார். அதுதான் உண்மை. இளம் ஹீரோக்களில் சிம்புவுக்கு கிடைக்கிற மரியாதை, இதில் வேறு மாதிரி இருக்கும் என்று ஒரு வார இதழுக்கு கடந்த வாரம் உற்சாகமாகப் பேட்டி கொடுத்திருக்கிறார் ரீமா சென். அதென்ன கடந்த கால...ஸாரி கடந்த வார கதை! இதே கேள்வியை இப்போது போய் யாராவது கேட்டால் சொல்கிற பதில் வேறு! "சிம்பு நல்லவனுமில்லை; வல்லவனுமில்லை" என்று ஆரம்பித்து இறுதியில் ஒரே தாக்குத் தாக்கி, திட்டித் தீர்த்து விடுவார். ஒரு வாரத்துக்குள் அப்படியென்ன நடந்து விட்டது? மூன்று நாட்களுக்கு முன்பு படப்பிடிப்பின்போது சின்னதாக இரண்டு பேருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. அதுவே பெரிதாகி சண்டைபோட்டுக் கொள்ளும் அளவுக்குப் போய்விட்டது என்பது தான் இப்போதைய செய்தி. என்ன செய்வதென்று தெரியாமல் குழப்பத்தோடு இருக்கிறார் தயாரிப்பாளர் தேனப்பன்.




சேரன் - நவ்யா நாயர்
மாயக்கண்ணாடி

## தமிழ் பேசும் சிங்களத்து சின்னக் குயில்!

**சி**ங்களத்து சின்னக் குயிலான பூஜா தமிழ் சினிமாவில் நடிக்க வந்த பிறகு சில முக்கியமான விஷயங்களைத் தவறாமல் கடைப்பிடிக்கிறார். அதில் ஒன்று நல்ல தமிழிலேயே முடிந்தவரை பேசுவது. தமிழ் சினிமாக்காரர்கள் யாரைப் பார்த்தாலும் தமிழிலேயே பேசி அசத்துகிறார். தம்பி படத்தில் நடித்தபோது சீமான் மற்றும் மாதவனுடன் பழகியதில் தமிழ் மீது அவருக்கு அபாரப் பற்று ஏற்பட்டதாம். "எனக்கு கமல் சார் மாதிரி விதம் விதமான கேரக்டர் பண்ணவேண்டும். பிச்சைக்காரியாக நடிக்கணும். அதேபோல கோடீஸ்வரி ரோலிலும் கலக்க வேண்டும்" என்று சொல்லும் பூஜாவின் நல்ல பழக்கம், தன்னிடம் எவ்வளவு பணம் இருந்தாலும் அதில் ஒரு பகுதியை ஏதாவது ஆதரவற்றோர் இல்லத்திற்குக் கொடுத்து விடுவதுதானாம். அத்தோடு இல்லாமல் நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஆதரவற்றோர் இல்லம், குழந்தைகள் காப்பகம் சென்று நேரத்தைச் செலவிடுகிறார். பூக்களும், குழந்தைகளும் மட்டும் இருந்தால் நேரம் போவதே தெரியாது என்கிறார் குழந்தையாக. 'பொறி' படத்தில் அம்மணி அழகான கிளாமர் காட்டியுள்ளாராம். "நான் காட்டியுள்ள கிளாமர் கண்ணுக்கு வலிக்காமல் மனசை மட்டும் பிசையும்" என்று விளக்கம் வேறு கூறுகிறார்.

## ஒரு படம் நடிச்சா...பத்து படம் நடிச்ச மாதிரி!

**கொ**க்கி படத்தில் சிறப்பாக நடித்த சஞ்சனா ஏற்கனவே துமாக்கி சலாம் வங்காள மொழிப் படமொன்றில் நடித்திருந்தார். அந்தப் படம் நல்ல வரவேற்பைப் பெற்று அவருக்குப் பல வாய்ப்புகள் வந்தபோதிலும் அடுத்ததாகத் தமிழ் சினிமாவில்தான் நடிப்பேன் என்று எந்தப் படத்தையும் ஒத்துக்கொள்ளவில்லையாம். "எப்படியாவது சாதிக்க வேண்டும் என்று விளம்பரம் துறையைத் தேர்ந்தெடுத்தேன். ஜே.டி.ஜெர்ரியின் விளம்பரப் படங்களில் நடித்தேன். என்னுடைய கோ - ஆர்டினேட்டர், வெல்விஷர்ஸ் எல்லோரும் தமிழ் சினிமாவில் கான்சன்ட்ரேட் பண்ணு. நன்றாக வருவாய் என்றார்கள். அதன் பின் தமிழ் சினிமாவின் மேல் காதல் வந்தது. கொக்கி பட யூனிட் ரொம்ப டிசிப்ளினோடு ஷூட்டிங் நடத்தியது. இதுதான் என் முதல் தமிழ்ப் படம் என்றாலும் பத்து படங்களில் நடித்த ஃபீலிங் ஏற்பட்டுள்ளது. அதற்கு டைரக்டர் பிரபு சாலமனின் ஒர்க்கிங் ஸ்டைல்தான் காரணம்" என்கிறார் சஞ்சனா.




விஜய்
போக்கிரி

## 'நான் கடவுள்' ஹீரோ – ஆர்யா!


**சேது**, நந்தா, பிதாமகன் ஆகிய படங்களில் மனிதனின் மென்மையான உணவுர்களை வியத்தகு வகையில் படம் பிடித்துக்காட்டி பாராட்டும், வெற்றியும் ஒரு சேரப் பெற்றவர் இயக்குநர் பாலா. இயக்குநர் பாலாவின் இயக்கத்தில் அஜீத் நடிப்பதாக இரண்டாண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட படம் 'நான் கடவுள்'. இதற்காகத்தான் அஜீத் உடல் மெலிந்தும், லாங் ஹேர் ஸ்டைலில் உலா வந்ததும். இதற்கிடையில் திருப்பதி, பரமசிவன் ஆகிய இரண்டு படங்களையும் முடித்துவிட்டார். அடுத்ததாக அஜீத்திற்கு நான் கடவுள் படம் வரும் என்று எதிர்பார்த்தால் கதை வேறு பக்கம் போகிறது. ஒரு சில நாட்களுக்கு முன் பாலா 'நான் கடவுள்' ஹீரோ யார் என்று அறிவித்து விட்டார். அந்த ஹீரோ ஆர்யா ஹீரோயின் பாவனா தயாரிப்பாளர் தேனப்பன் என எல்லோரும் இருந்த அந்தப் பேட்டியில் இது அறிவிக்கப்பட்டது.

**த**யாரிப்பாளர் கவுன்சிலுக்குத் தேர்தல் நடத்த நியமிக்கப்பட்ட ஒரு பொறுப்பாளருக்கே தெரியாமல், தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாராம். இதனைத் தொடர்ந்து, தனக்கும் இந்தக் கவுன்சிலுக்கு எந்தச் சம்பந் தமுமில்லை என்கிறாராம் பொறுப்பாளர்.

## கிசு கிசு!

**எ**ம்டன் மகன்' நாயகி வாஸ்து, கைரேகை, ஜோசியம் போன்ற சமாச்சாரங்களில் அதீத ஆர்வம் காட்டுகிறாராம். பிரேக் நேரங்களில் அத்தகைய புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பவர், ஷூட்டிங் ஆரம்பிக்கும் நேரத்தில், வாஸ்துப்படி கேமராவை எங்கு வைக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லி இம்சை செய்கிறாராம்.

## அவருக்குத் தெரியலையாம்!



முகப்பில்: சந்தியா

ஐஸ்வர்யாராய்


**ரா**ஜாவான இயக்குநரின் மைந்தன் நடிக்கும் 'வாலிபன்' படத்தில், ஓரிரு காட்சிகளில் தோன்றுகிறாராம் ஓர் இசையமைப்பாளர். மன்மத ராசா பாடலை வழங்கியவர் நடிக்கும் படமிது என்று விளம்பரப்படுத்தப் போவதாகத் தெரிந்த இசையமைப்பாளர், 'இதெல்லாம் தவறு. வேண்டுமென்றால் என் காட்சிகளைத் தூக்கி விடுங்கள்' என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டாராம்.

**உ**லக உருண்டையைச் சின்னமாகக் கொண்ட ஸ்டுடியோ ஒன்றில் 25 வருடமாகப் பயன்படுத்தி வந்த ஒரு செட்டைப் பிரித்து, மாற்றம் செய்துவிட்டோம் என்று ஒரு இயக்குநர் தம்பட்டம் அடித்து வருகிறாராம். அதைக் கண்டுபிடித்துவிட்ட ஸ்டுடியோ நிர்வாகம், தம்பட்டம் அடித்த இயக்குநரை அழைத்துப் பொறி பறக்கக் கடிந்துகொண்டதாம்.

**கோ**லிவுட்டின் இன்றைய பிளேபாய் என்ற தகுதி, வாகனம் ஒன்றின் பெயர் கொண்ட படத்தில் நடிக்கும் நாயகனுக்குத்தான் பொருந்துமாம். தவமிருந்து நாயகி, சிங்களப் பெண், அறிந்தும் அறியாமலும் நாயகி மற்றும் கலாபக் காதலன் நாயகிகள் என்று, உடன் நடித்த அத்தனை பேருடனும் ஷிப்ட் போட்டு, கேமரா இல்லாமல் டூயட் பாடி வருகிறாராம். (புதிய காதல் இளவரசன்?).

**பு**துப்பேட்டை படத்தில் 'நட்பு' நாயகியின் நடிப்பைப் பார்த்துவிட்டு பெண்கள் அமைப்பினர் அந்த நாயகிக்குப் போன் போட்டு கன்னாபின்னாவென்று திட்டித் தீர்க்கிறார்களாம். இதையடுத்து தன் வீட்டு போன் நம்பர் மற்றும் செல் நம்பரை மாற்றி விட்ட 'நட்பு', தன்னைச் சந்திக்கும் பத்திரிகையாளர்களிடம் 'அந்தப் படத்தில் நடித்தது தப்பா?' என்று கேட்டு வருகிறாராம். (இயக்குநரையே கேளுங்களேன்!)

**அ**ந்தக் கால செம்பருத்தி நாயகி அம்மாவாகி, அரசியலில் நுழைந்து வீட்டோடு செட்டிலாகி இருந்தார். அவருக்கு மறுபடியும் அரிதாரம் பூச ஆசை வந்து விட்டதாம். இதையடுத்து, தன் கணவருடன் ஆலோசித்துவிட்டு, சொந்தப் பணத்தைப் போட்டு அம்மன் வேஷத்தில் நடிக்க வந்து விட்டாராம். (ஆத்தா...பயந்து வருதே...)



## பந்தா!

**வா**ளமீன் புகழ் கானா நடிகர், 'பொறி' படத்தில் நடிக்க வெளியூர் போயிருந்தாராம். அங்கு பிரேக்கின் போது, தான் ரெஸ்ட் எடுக்க கேரவன் வேன் வேண்டும். இப்போது தனது ரேஞ்சே வேறு என்று, மார்தட்டி பந்தா காட்டியதைப் பார்த்து, யூனிட்டே அசந்து போய்விட்டதாம்.





# நயன்தாராவுக்குத் தடை!

சில்மிஷ நாயகனின் காதலிக்கு, கேரளப் படங்களில் நடிப்பதற்குத் தடை போட ஏற்பாடு நடக்கிறதாம். ஒரு மலையாளப் படத்தில், ஒரு பாடலுக்கு நடனமாட ஒப்புக்கொண்டவரை, சில சீன்களிலும் நடிக்க வற்புறுத்தியதையடுத்து, சச்சரவு ஏற்பட்டு நடிக்காமல் வந்துவிட்டாராம் நாயகி. இதையடுத்து, மலையாள இயக்குநர் சங்கம், நடிகைக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறதாம்.

# சீக்ரெட்டின் மறுபெயர் சிவாஜி...!

சீக்ரெட்டின் மறுபெயர் என்ன? என்று கேட்டால் டக்கென்று சிவாஜி என்றுதான் பதில் வருகிறது. அந்த அளவுக்கு ரகசியம் காத்து வருகிறார் டைரக்டர் ஷங்கர். சூப்பர் ஸ்டார் ரஜினி நடித்து வெளியாகப் போகும் படம் என்பதால் எதிர்பார்ப்பு ஏகத்துக்கும் எகிறிப்போய்க் கிடக்கிறது. சிவாஜி படம் இந்திய சினிமா உலக வரலாற்றில் ஒரு மைல் கல்லாக இருக்கும் என்று தமிழ் சினிமா டெக்னீஷியன்கள் அடித்துச் சொல்கிறார்கள். இதில் இடம் பெறும் கண்ணாடி மாளிகையை அமைக்க மட்டும் 3 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். எந்தப் படத்திலும் இல்லாத அளவுக்கு டூப் போடாமல் கடுமையான ரிஸ்க் எடுத்து சண்டை போட்டிருக்கிறார் ரஜினி. 35 நாட்கள் பாடுபட்டு எடுத்திருக்கிறார்கள் இந்தக் சண்டைக் காட்சியை. நூறு ஸ்டண்ட் நடிகர்கள், நூறு கார்கள் இடம் பெறும் இந்தப் பிரமாண்டமான சண்டைக் காட்சியை ஸ்டண்ட் மாஸ்டர் பீட்டர் ஹெய்ன் அமைத்திருக்கிறார்.




# விஜய்க்கு எதிரான போர்க்கொடி!

**விஜய்** நடித்த, 'ஆதி' படத்தை வாங்கி, கைகளைச் சுட்டுக்கொண்ட அத்தனை விநியோகஸ்தர்களும் சமீபத்தில் ஒன்று கூடி மீட்டிங் போட்டுள்ளனர். அதாவது, 'ஆதி'யில் பட்ட காயத்துக்கு மருந்தாக, 'போக்கிரி' படத்தை தங்களுக்கே தர வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளனர். ஒருவேளை, தங்களின் கோரிக்கையை சம்பந்தப்பட்டவர்கள் நிராகரித்தால், போர்க்கொடி பிடிக்கவும் ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. விஷயம், 'போக்கிரி' யூனிட்டுக்குக் கசிய, பிரச்சினையை திசை திருப்ப ஆழமாக யோசித்து வருகிறது விஜய் யூனிட்!

# அந்தக் கதை!

பிதாமகன் இயக்குநர் இரண்டு வருடங்களுக்கும் மேலாக உருவாக்கி வரும் 'நான் கடவுள்' படத்தின் கதை, இன்னமும் முழுமையடையவில்லையாம். என்றாலும், இதுவரை ரெடியான கதையில், பிணத்திற்கு முன்பாகச் சங்கு ஊதிக் கொண்டு போகும் கேரக்டர்தான் ஹீரோவாம். கிட்டத்திட்ட பிதாமகனின் இரண்டாம் பாகம் போல இருக்கிறதாம்.




# விஜய் ஆண்டனியின் ஆசை நிறைவேறியது!

'சுக்கிரன்' படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமாகி 'சப்போஸ் உன்னை' என்ற பாடலுக்கு இளைஞர்களைக் குத்தாட்டம் போட வைத்து தற்போது 'நெஞ்சாங்கூட்டில் நீயே நிற்கிறாய்' என்ற டிஸ்யூம் பாடல் வரை உள்ளத்தைக் கிள்ளியிருக்கிறார் விஜய் ஆண்டனி. "வீட்டின் மாடியிலேயே ரெக்கார்டிங் தியேட்டர் கட்ட வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாள் ஆசை. அது இப்போதுதான் நிறைவேறியிருக்கிறது. அம்மா, சகோதரி, மனைவி இவர்கள் அருகில் இருக்க, நினைத்த நேரமெல்லாம் மெட்டமைக்கிற சுகத்திற்கு இணையேது? என் வீடும், இந்த ரெக்கார்டிங் தியேட்டரும் அந்த சந்தோஷத்தை எனக்குக் கொடுத்திருக்கிறது" என்று நெஞ்சாங்கூட்டில் வைத்திருந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் விஜய் ஆண்டனி.

# முதல் இடத்தைப் பிடிக்கும் கனவுடன் வேதிகா!

'மதராஸி' படத்தில் அறிமுகமானவர் மும்பையைச் சேர்ந்த வேதிகா. தற்போது பாக்யராஜ் மகன் சாந்தனுக்கு ஜோடியாக 'சக்கரக்கட்டி' படத்திலும், லாரன்சுக்கு ஜோடியாக 'முனி' படத்திலும் நடித்து வருகிறார். இரண்டு ஹீரோயின்கள் படத்திலோ, சீனியர் ஹீரோக்களுடனோ நடிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. கதை நன்றாக இருக்க வேண்டும் - இதுதான் எனது நிபந்தனை. கவர்ச்சியாக நடிப்பதில் ஒன்றும் தவறு இல்லை. அது எல்லை மீறாமல் இருக்க வேண்டும். தமிழ்நாட்டு இரசிகர்களுக்கு கொஞ்சம் குண்டான ஹீரோயின்களைத்தான் பிடிக்கும். குண்டாகும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். தமிழ் சினிமாவில் எனக்கென ஒரு நிரந்தர இடத்தைப் பிடிப்பேன். அது முதல் இடமாகக் கூட இருக்கலாம் என்கிறார் வேதிகா.

# நன்றியுள்ள 'முனி'!


ஆறு படத்தின் இயக்குநரால் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டவர் அந்த நடன மாஸ்டர். தெலுங்கில் இயக்கிய இரண்டு படங்கள் சூப்பர் ஹிட்டாம். ஆனாலும், தமிழரான அந்த மாஸ்டருக்கு இங்கு எந்த வாய்ப்பும் வராத சூழ்நிலையில், பழைய இயக்குநரே அவரை அழைத்து 'முனி'யாக்கிவிட்டார். இதைத் தொடர்ந்து, இயக்குநரின் ஆளுயர படமொன்றை வீட்டில் வைத்து வழிபட ஆரம்பித்துவிட்டாராம் மாஸ்டர்.

# மாற்றப்பட்ட தெலுங்கு நடிகை!

முனியைத் தயாரிக்கும் இயக்குநரின் படமான 'வட்டாரத்தில்' நடிக்க, ஒரு தெலுங்கு நடிகையை புக் பண்ணியிருந்தார்களாம். ஷூட்டிங்குக்கு கிளம்பும்போது, நாயகி தனக்குப் பேசியதைவிட, அதிக சம்பளம் தந்தால்தான் நடிக்க வருவேன் என்று அடம் பிடித்தாராம். இயக்குநர் கடுப்பாகித் தெலுங்கு பார்ட்டியை ஒதுக்கிவிட்டு, மும்பையிலிருந்து அழகிகளை வரவழைத்து, செலக்ட் பண்ணிக்கொண்டு இருக்கிறாராம்.

# ஜோடி யார்?

**கே**ப்டனின் 'தர்மபுரி' பட ஷூட்டிங், ஸ்ரீரங்கத்தை மதுரை, ராமநாதபுரம், நெல்லை என்று தென்மாவட்டங்களில் தொடர்ந்து நடக்கும்போது, அங்கு உள்ளாட்சித் தேர்தலுக்கான பிரசாரத்திலும் ஈடுபடப் போகிறாராம். படத்தின் பெயர் கொண்ட ஊரில், ஷூட்டிங் கிடையாதாம். அதுபோல, இதில் கேப்டனுக்கு ஜோடி சேர, இதுவரை யாரும் முன் வரவில்லையாம்.



# இயக்குநரின் சபதம்!

அந்தக் கால புதுவசந்த இயக்குநர், மெட்ராஸ் லவ் பற்றி எடுத்து வரும் படத்தின் ஸ்டில்கள் பத்திரிகைகளில் வரக்கூடாது என்று கண்டிஷன் போடுகிறாராம். "பத்திரிகைகளின் பாராட்டோ, பப்ளிசிட்டியோ இல்லாமல், இந்தப் படத்தை இரு நூறு நாட்கள் ஓட ஏற்பாடு செய்கிறேன்" என சபதமே செய்திருக்கிறாராம் இயக்குநர்.

# முடிவு!

சிவமைந்தன், ஷூட்டிங் பிரேக்கின் போதும், வீட்டில் ஓய்வெடுக்கும் நேரத்திலும் திருவாசகம், தேவாரம் போன்ற நூல்களைப் படித்து வருகிறாராம். மேலும், இந்த ஆண்டு முழுவதும் எந்தப் பத்திரிகைக்கும் பேட்டி கொடுப்பதில்லை என்றும் முடிவெடுத்துள்ளாராம். பேட்டி என்ற பெயரில் தனது திருமணம் பற்றியே அதிகம் கேட்கப்படுவதால், இந்த முடிவாம்.

# தலைமறைவான நடிகை!

'சுந்தரா டிராவல்ஸ்' படத்தின் நாயகி, லொள்ளு நடிகரின் 'ரீல் ஃபிப்டீன்' படத்தில் இரண்டாம் நாயகியாக புக் பண்ணப்பட்டிருந்தாராம். 'விசாகப்பட்டினத்தில் ஷூட்டிங்' என்று அவரை அழைத்துப் போனாராம் இயக்குநர். ஆனால், அங்கு அவரைத் தவிர, யாருமே இல்லாததைப் பார்த்து விவரம் கேட்ட நடிகையிடம், 'இரண்டு நாள் ரிகர்சல் இருக்கிறது' என்றாராம் இயக்குநர். இதில் கடுப்பாகிப் போன நடிகை, சொல்லாமல் கொள்ளாமல் தலைமறைவாகிவிட, இது பிரச்சினையாகி, லொள்ளு நடிகர் வந்து நடிகையைக் கண்டுபிடித்து சமாதானப்படுத்தினாராம்.

# 'ஆதி' நாயகி சிபாரிசு!

இளைய தளபதியின் 'போக்கிரி' படத்தை இயக்கும் வாய்ப்பை, டான்ஸ் மாஸ்டருக்கு வாங்கிக் கொடுத்ததே 'ஆதி' நாயகிதானாம். இருவருக்குமே நெருக்கமான அந்த நாயகியே இந்தப் படத்திற்கும் ஹீரோயினாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியபோது, 'ஆதி' நாயகி தன் டைரியை எடுத்துக் காண்பித்து, நிலைமையை எடுத்துச் சொல்லிவிட்டு, அவரேதான் 'மஜா' நாயகியை சிபாரிசு பண்ணினாராம்!






## ...ாசிக்கப்படாத வீணை

...ும் ஒரு
...ிக்கப்படாத வீணை.

...ிப்பதற்கு எவரும்
...வராததாலேயே
...சிக்க வேண்டிக்
...்கிறது எனக்கு.

...ிக்க வருவதாயின்
...யிலே
... வைக்க வேண்டுமாம்
...ர்களுக்கு.

...ந்தும்...
...றோ ஒரு நாள்
... எறியப்பட்ட நான்
... தட்டப்பட்டு
...ிக்கப்படுவேன்.

...போது...
... பெருமையையும்
...த உலகறியும்.

*-கன்னிமுத்து வெல்லபதியான்.*

## உதயம் வேண்டும் இதயங்களில்!

காதலின் பிரிவினால்
காயப்பட்ட இதயங்கள்
நித்தமும் உள்ளுக்குள்
அழுகின்றன!

இயற்கை அனர்த்தப்
பிடிக்குள் சிக்கிய
நெஞ்சங்கள்
ஒரு விடிவுக்காய்
ஏகன் பக்கம்
கரங்கள் ஏந்திநிற்கும்!

யுத்தத்தின்
கோரப்பிடிக்குள் குமுறியழும்
பிஞ்சு இதயங்களும்
விழி நீர் சிந்தி...!

அந்தக் கன்னிப் பேதைக்கு
தேயிலைக் கூடைதான்
முதுகில் சுமையென்பதல்ல
சீதனமும்தான்.
இப்படியே...!

மனுக்குல உள்ளங்கள்
அமாவாசையாய் இருண்டு
கிடக்கு இறைவா!
உதயம் வேண்டும்
எங்கள் இதயங்களில்
எப்போது வருமோ?

*-இறக்காமத்தூரான், எச்.எம்.எம்.பாஹிம்.*

## சிதறிய இதயம்

சுகமான பொழுதுகளில்
உனதான நினைவுகள்
பால்வற்றிப்போன
பட்டை மரங்களாய்
என்னுள்ளே...

நீ பேசிய மொழிகள்
சுருதி அறுந்த
வீணைகளாய்
அர்த்தமற்றுப்போன
சங்கீதங்கள்...

நமதான நட்புக்கு
நீ அர்த்தம் கூறியபோது
கவிதை ஏடுகளும்
வெற்றுத் தாள்களானது.

நீ வரைந்த
காதல் மடல்களும்
சருகுகளாய்ப் போனது
குப்பை மேடுகளில்.

நீ வடித்த
கண்ணீர்த் துளிகள்
விஷ அமிர்தங்களாய்
என் தேகம் சுடுபட்டு
புண்ணாய் துடிக்கிறது.

இவை ஒவ்வொன்றும்
நீ இன்னொரு
இதயத்துக்கு
சொந்தமானபோதுதான்.

*-கியாஸ் எம்.மிப்றாஸ், மூதூர் - 07.*

## ...ரப்பதற்கு...!

என்
உள்ளத்தில்
அவன் வரவு
வறுமையாகிப்
போனதனால்
என்னிதயம்
வாடுகிறது...!

அரவணைக்க
அனுசரணையாளன்
இன்றி இற்றுப்
போகின்றது
இதயம்...!

நினைவுகளால்
நித்திரையும்
வெகுதூரம்...!

என்
இரவுகள்
பகலாய்
கொட்டிக்
கிடக்கு.
அள்ளிக்
கொடுப்பேன்;
எடுத்துச்
செல்வானா
அவன்!?

அவனை
நினைத்து
தெய்வம்
மறந்தேன்.

என்
வசந்தங்களை
வாரி அள்ளிக்
கொண்டவன்
ஏனோ என்
உயிரை
விட்டுச்
சென்றான்...!

அவனின்
உருவப் படத்தை
நெருப்பிட்டு
எரித்த எனக்கு
ஏனோ அவன்
நினைவுகளை
பொசுக்கத்
தெரியவில்லை...!

இறைவா!
உன் காலடியில்
மண்டியிட்டு
இரு கரம்
ஏந்துகின்றேன்...
அவனை மறந்துவிட
சக்தி கொடு...
இல்லையேல்
என்னுயிரை மாய்த்துவிட
சாபம் கொடு...!

*-சுஜாஹ் முகைடீன், நிந்தவூர் - 18.*

## சிற்ப சமாதி

எனதான
வாழ்வின் இயல்பை
திருகியெறிந்து
வருத்தமிழையச் செய்கிறாய்.

மௌனப் பாவை நீ!
சாட்டை ரணங்களால்
சன்னமிட்டு
எதிர்ப்புறம் தலை நீட்டுகிற
எண்ணங்களை
சிராய்ப்புர வைக்கிறாய்.

சீழ் வடியும்
சில்மிஷ கணங்களை
அமைதி யுகங்கள்
அலைக்கழித்துப்போகும்
என் நிலாக் காலங்களை
அரங்கேற்றி...
உன் அதிகாரபூர்வத்தால்
இன்னமும் - என்
எண்ண முகத்தில்
காறி உமிழ்ந்தபடி...

உயிலும் உளியும்
உரசிப்போன
சிற்ப சமாதிகளாய்
நிலா பூத்துக் கிடக்கிற
உன் வட்ட முகத்தில்,
உனதான என்
நச்சரிப்புகள்...!

*-பெரியசாமி விக்னேஸ்வரன், ஹட்டன்.*

## ஹர்த்தால்

வீட்டை விட்டு
வெளியேற முடியாத
எனக்கெதற்கு
பாதணிகள் - அதுவும்
புதுப்பாதணிகள்.

சைக்கிளுக்கு
'பிறேக்' பூட்டவும்
டீப்புக்கு
'பெச்' போடவும்
காலையில் நேரத்தோடு
எழுந்திடவும் தேவையில்லை.

ஏன்?
புனிதஸ்தலத்திற்கும்
போகத் தேவையில்லை;
போகவும் முடியாது.

கடைகள் திறக்கப்படாததால்
காக்கைகளுக்கு
காலைச் சாப்பாடும்
கிடைப்பது குறைவாகும்.

பாவம்
பசியால்
கா!...கா...!! வென்றழும்.

அப்போது
'வீட்டுக்கு யாரோ
வரப் போகிறார்கள்'
என்ற மூட நம்பிக்கையும்
பொய்யென
நிரூபிக்கப்படும்.

கஞ்சி காய்ச்சி(க்)
குடித்த ஏழைகள்
கோழியாகப் போகிறார்கள்.

கறுப்பு இரவினை
அவ்வப்போது
வெள்ளையிரவாய்
அறிமுகப்படுத்திய
முயற்சியின்
உச்ச வெற்றி(க்)
கிண்ணம் பெறும் நாள்...

மெருகூட்டாமலே சொன்னால்
சோற்றிலே
மண்ணள்ளிப் போடாமல்
நஞ்சையூற்றினால்
மரணிப்பார்கள் - என்பதை
பயிற்சி மூலம் செய்து காட்டல்.

*-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.*

## மனிதா...!

ஒரு
உண்மைக்காகவே
உயிர் வாழ்கிறேன் - அது
பொய்களால்
மறைக்கப்படும்போது
இந்த உலகையே
நான் வெறுக்கின்றேன்!
பொய்
சுடுவதில்லை - ஆனால்
உண்மை
சுடும்!
உண்மை
உயிர்,
பொய்
உடம்பு - இதனைப்
புரிந்து கொள்
மனிதா..

*-பொன்.நவநீதன், கல்முனை.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் - கவிஞரும்

*கவிதை உலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு. தம்முடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் வளர்ந்து வரும் கவிஞர்களான அஜிதா, கண்ணன் ஆகியவர்கள் எழுதிய இரு கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவர்களின் கவிதைகளில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

## உன்னோடு....!

உன்னோடு காலம் முழுவதும்
நான் வாழ்ந்திட நினைத்தேன்...
ஏனோ கால் நிமிடம் கூட
நீ என் அருகில் இல்லை!

உன் தோளோடு தோள் சேர்த்து
நடந்திட நினைத்தேன்...
ஏனோ உன் கால்போன சுவடுகூட
கண்ணில் தென்படவில்லை!
உன்னை கண்ணின் மணியாக
காத்திட நினைத்தேன்...
ஏனோ, இமை உதிர்க்கும்
ரோமமாகக் கூட
நீ என்னைப் கருதிடவில்லை!

உன் வாழ்க்கைத்
துணையாகிட வேண்டி
மனதில் தினமும் நினைத்தேன்...
ஏனோ, ஒரு வழித் துணையாகக் கூட
நீ என்னை அழைத்திடவில்லை!

உன் மதிப்பில்
ஆயிரத்தில் ஒருத்தியாக
நான் உயர்ந்திட நினைத்தேன்...
ஏனோ, அந்த ஆயிரத்தில்
ஒருத்தியாகக் கூட
நீ என்னை சேர்த்திடவில்லை!

உன் அரியணையில் அரசியாகவே
வீற்றிருக்க நினைத்திருந்தேன்... ஏனோ,
ஒரு சேவகியாகக் கூட நீ என்னை
அனுமதழக்கவில்லை!

உன் தாகம் தீர்த்திடும் கனிரசமாக
நான் மாறிட நினைத்தேன்...
ஏனோ, உன் பாதம்
கழுவும், நீராகக் கூட
நீ என்னைப் பாவிக்கவில்லை!

அலங்கரிக்கும் ரோஜாவாக
நான் மலர்ந்திட நினைத்தேன்...
ஏனோ, உன் பாதம் மிதிக்கும்
சருகாகக் கூட
நீ என்னைத் தீண்டிடவில்லை!

உன் முகம் ஒரு சிகரமாகவே ஓங்கி
நிமிர்ந்திட முயன்றேன்...
ஏனோ, சிறு
குன்றாகக் கூட வளராமல்
உதிர்ந்து போனேன்!

ஒரு காவியமாகவே உன்னுள்
கலந்திட நினைத்தேன்...
ஏனோ, ஒரு ஓவியமாகக் கூட
உன் முன் நிலைக்காமல்
கலைந்து போனேன்!

உன் சரித்திர நாயகியாய்
திகழ்ந்திட நான்
வியூகம் வகுத்தேன்...
ஏனோ, ஒரு சொல்லாகக் கூட
ஏட்டில் இடம் பெறாது போனேன்!

உன் கனவிலும் நானே வந்து
உன்னைத் தழுவிட நினைத்தேன்...
ஏனோ, உன் நினைவில் கூட
சரியாக நில்லாமல்
நழுவிப் போனேன்.

*-அஜிதா.*

## காதலெனும் தீயினிலே...

இறந்த காலம் காதலுக்கு
மட்டும் இல்லை - அது
இருந்தாலோ அதற்குப் பேர்
காதலில்லை

பிறந்த பயன் காதலிலே
பூர்த்தியாகும் - காதல்
பிழம்பாலே நம் கண்கள்
ஜோதியாகும்.

ஒடியாத கிளையென்று
நினைத்திருந்தேன் - கிளி
உட்கார்ந்து போன உட்ன்
வளைந்து போனேன்.!

உன்னை நான் பார்த்த
உடன் நெஞ்சிக்குள்ளே -
அடி
உட்சிறகு ஒரு லட்சம்
முளைக்கக் கண்டேன்.

விண்ணைப் போய் முட்டிவிடக்
கூடாதென்றே - இன்று
விரிகின்ற சிறகுகளை
சுருக்கிக் கொண்டேன்.

எங்கே நான் பறந்தாலும்
என்ன பெண்ணே - தினம்
இளைப்பாற உன் மடி தான்
எனக்கு வேண்டும்.

கங்கை நதி ஊரெல்லாம்
திரிந்தாலென்ன - அடி
கடலில் தான் அது சென்று
சேர வேண்டும்.

சிரிப்பதற்கு மட்டுமிந்த உதடு
போதும் - பார்வை
சிந்தி விழ மட்டுமந்த
கண்கள் போதும்.

எரிப்பதற்கு மட்டுமந்த அழகு
போதும் - ஆணை
இடுவதற்கு மட்டுமந்த
விரல்கள் போதும்.

கருப்புகளை மறந்து விட்டு
எரிந்து நிற்கும் - ஒரு
கனகமணி விளக்கைப் போல்
நமக்கும் தோழி...

உறுப்புகளை மறந்துவிட்ட
காதல் வேண்டும் - அது
உண்மையிலே சாத்தியமா
முயன்று பார்ப்போம்.

*-கண்ணன்.*

## ...நீண்ட கால குத்துச் சண்டை வீரர்



**மிக** நீண்ட காலம் குத்துச்சண்டைச் சாம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஜோ லூயிஸ் என்பவராவார். 1937ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி சாம்பியன் பட்டம் பெற்ற இவர், 1949ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி குத்துச்சண்டைகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவிக்கும் வரை 11 ஆண்டுகள் 252 நாட்கள் இவர் சாம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார்.

## தொடராக வீழ்த்திய வீரர்



**தெ**ன்னாபிரிக்காவைச் சேர்ந்த விக்ரொவல் என்ற குத்துச்சண்டை வீரர், பிரிட்டனைச் சேர்ந்த டனி ஓ சலைவன் என்பவரைப் பத்துச் சுற்றுக்களில் 14 தடவைகள் தாக்கி வீழ்த்தினார். 1950ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் திகதி தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க்கில் நடைபெற்ற உலக குத்துச்சண்டைப் போட்டியில் இச் சாதனை புரியப்பட்டது.

## அதிரடி குத்துச் சண்டை வீரர்



**அ**மெரிக்காவைச் சேர்ந்த ஜெரால்ட் மக்லெலான் என்பவர், ஜே பெல் என்ற அமெரிக்கக் குத்துச் சண்டை வீரரை இருபது செக்கன்களில் தாக்கி வீழ்த்தினார். பியூட்டோரிக்காவில் 1993ஆம் ஆண்டு ஆகஸ் 7ஆம் திகதி நடைபெற்ற உலக குத்துச் சண்டைப் போட்டியிலேயே மிகக் குறுகிய நேரத்துக்குள் சாம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

# ஆரஞ்சு பழங்களின் அழகு டிப்ஸ்

கண்களைச் சுண்டி இழுக்கும் வசீகரமான ஆரஞ்சுப் பழம், நம் தேகத்துக்கும் வசீகரத்தை அள்ளித்தரக் கூடியது, தெரியுமா? அவற்றில் சில...

### கண்கள் 'ப்ளீச்' ஆக...

ஆரஞ்சு ஜூஸை ஃப்ரீஸரில் வைத்து ஐஸ் கட்டியாக்குங்கள். இதை வெள்ளைத் துணியில் கட்டி, கண்ணுக்கு மேல் ஒத்தி எடுங்கள்.

ஒரு நாள் விட்டு ஒரு நாள் இப்படிச் செய்து வர, கண்கள் 'ப்ளிச்' ஆகிவிடும்.

தூக்கமின்மையால் கண்களில் ஏற்படும் சோர்வை நீக்கி பிரகாசமாக்கவும் ஆரஞ்சு பயன்படுகிறது.

### ஜொலி ஜொலிக்க...

தலையின் வறட்டுத் தன்மையைப் போக்கி, ஜொலி ஜொலிக்க வைக்கிறது ஆரஞ்சு தோல் சிகிச்சை.

உலர்ந்த ஆரஞ்சு தோல், துண்டுகளாக்கிய வெட்டிவேர், சம்பங்கி விதை, பூலான் கிழங்கு, கடலைப் பருப்பு, பயத்தம் பருப்பு, கசகசா... இவை ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து, மெஷினில் கொடுத்து அரைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பவுடரை வாரம் ஒரு முறை தலைக்குத் தேய்த்து குளியுங்கள்.


இப்படிச் செய்து வந்தால் முடி பளபளப்பாகவும், வாசனையாகவும் இருக்கும். இதையே உடம்புக்குத் தேய்த்துக் குளிக்கும் வாசனை படவுடராகவும் பயன்படுத்தலாம்.

### வடுக்கள் நீங்க

முகத்தில் பருக்களால் ஏற்பட்ட வடுக்கள் மாறாத தழும்பாக இருந்து வாட்டுகிறதா? ஆரஞ்சு விழுது இருக்க கவலையேன்?

ஆரஞ்சு தோல் அரைத்த விழுது கால் தேக்கரண்டி, கசகசா விழுது 1 தேக்கரண்டி, சந்தனப் பவுடர் 2 சிட்டிகை... இவற்றை கெட்டியான விழுதாக்கிக் கொள்ளுங்கள். தினமும் இரவு தூங்கப் போகும்போது, பருக்கள் வந்த இடத்தில் மூடுவது போல் பூசுங்கள். காய்ந்ததும் முகத்தை கழுவி விடுங்கள்.

இந்த சிகிச்சையால் வடு மறைவதுடன், பருக்களும் இனி உங்கள் முகத்தை எட்டியே பார்க்காது.



### கருமையை விரட்டியக்க...

சிலருக்குக் கண்களுக்குக் கீழ், இரண்டு கன்னப் பகுதியிலும் கருமை படர்ந்து திட்டுத் திட்டாக இருக்கும். அந்தக் கருமையை விரட்டியடிக்க ஒரு டிப்ஸ்...

ஒரு வேப்பங்கொழுந்துடன், ஆரஞ்சு தோல் விழுது - கால் தேக்கரண்டி, கஸ்தூரி மஞ்சள் கால் தேக்கரண்டி கலந்து, எங்கெல்லாம் கருமை படர்ந்து இருக்கிறதோ, அங்கெல்லாம் பூசி 5 நிமிடம் கழித்து கழுவுங்கள்.

வாரம் இருமுறை செய்யுங்கள். கருமை ஓடிவிடும்.

### ஆரஞ்சு மசாஜ் சிகிச்சை...

தலை எப்போதும் சுத்தமாக இல்லாவிட்டால், அது குப்பைக் கூடையாகி அரிப்பு ஏற்படும். இந்த அரிப்பை அடியோடு அகற்றுகிறது. ஆரஞ்சு மசாஜ் சிகிச்சை.

உலர்ந்த ஆரஞ்சு தோல் - 100 கிராம், வெந்தயம் - 100 கிராம், பிஞ்சு கடுக்காய் - 10 கிராம், வால் மிளகு - 10 கிராம், பச்சை பயறு - கால் கிலோ எல்லாவற்றையும் கலந்து அரைத்துக் கொள்ளுங்கள்.

இதை வாரம் இரு முறை தலையில் நன்றாகத் தேய்த்துக் குளியுங்கள்.

அரிப்பு போவதுடன் சுத்தமும், வாசனையுமாகக் கூந்தல் பளபளக்கும்.

### ஆரஞ்சு ஃப்ரூட் பேக்...

வெளி தூசுகளால் முகம் சிலருக்கு களையிழந்து காணப்படும். அவர்களின் முகத்தில் ஒளியேற்ற இதோ ஆரஞ்சு ஃப்ரூட் பேக்.

ஆரஞ்சு தோலை துண்டுகளாக்கி பவுடராக்கிக் கொள்ளுங்கள். இந்தப் பவுடர், முல்தானிமட்டி, சந்தனம் மூன்றும் ஒரே அளவு எடுத்து தயிருடன் கலந்து, முகத்துக்கு பேக் போட்டு 5 நிமிடம் கழித்து கழுவுங்கள். வாரம் ஒருமுறை இதை முகத்துக்குப் போட்டு வர, பேஷியல் செய்தது போல் முகம் பிரகாசமாக ஜொலிக்கும். தயிருக்குப் பதிலாக ஆரஞ்சு ஜூஸையும் பயன்படுத்தலாம்.




# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## வாழைப்பழ சாக்லேட்

***தேவையானவை :-***

கனிந்த வாழைப்பழம் - 10
பால் பவுடர் - அரை கப்
சர்க்கரை - முக்கால் கப்
கொக்கோ பவுடர் - 2 மேசைக் கரண்டி
வெண்ணெய் - அரை கப்
நைஸாக சீவிய முந்திரி
பிஸ்தா - 4 தேக்கரண்டி.

***செய்முறை :-***

கொக்கோ பவுடர், பால் பவுடர் இரண்டையும் சலித்து வைத்துக் கொள்ளவும். வாழைப் பழத்தை மிக்ஸியில் நைஸாக அரைத்துக் கொள்ளவும். முந்திரி, பிஸ்தா பருப்புகளை நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.


அடி கனமான, வாயகன்ற ஒரு பாத்திரத்தை ஸ்டவ்வில் வைத்து, வாழைப்பழக் கூழ், சர்க்கரை சேர்த்துக் கிளறவும். சுருண்டு வந்ததும், பால் பவுடரைத் தூவி, வெண்ணெயைப் போட்டுக் கிளறவும். தீயைக் குறைத்து, கலவை கையில் ஒட்டாத பதம் வரும்வரை கிளறவும்.

பிறகு, நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டி சமமாக்கி, முந்திரி, பிஸ்தா துண்டுகளை மேலே தூவவும். ஆறிய பின் வில்லைகள் போடவும்.

ஒரு வாரம் வரை இந்த சாக்லேட்டை வைத்திருக்கலாம். வாழைப்பழம் சாப்பிடாத குழந்தைகளுக்குக் கூட மிகவும் பிடிக்கும்.

# வெடிப்பிலிருந்து விடுதலை பெற...

தரையைச் சுத்தம் செய்யப் பயன்படும் சோப் ஆயிலில் உள்ள கெமிக்கல், கால்களில் பட்டால் சிலருக்கு வெடிப்பு உண்டாகும். அதே போல், அதிக அளவில் நீலம் கலந்த டிடர்ஜெண்ட் பவுடரைப் பயன்படுத்தும் போது துணிகளை ப்ளீச் செய்வது போல, கைகளையும் அது ப்ளீச் செய்வதால், சிலருக்கு தோல் உரிந்துவிடும்.



### இதிலிருந்து விடுதலை பெற சில டிப்ஸ்!

* ஒரு நாள் விட்டு ஒரு நாள் எலுமிச்சை தோலால் பாதங்களை நன்றாகத் தேய்த்து கழுவுங்கள். இது வெடிப்பில் உள்ள அழுக்குகளை நீக்கி, பாதத்தைச் சுத்தமாக்கும். கடுகு எண்ணெயை கால், கைகளில் தேய்த்துக் கழுவி வந்தால், சொரசொரப்பு தன்மை நீங்கி, மிருதுவாகும்.


* ஒருநாள் பாத்திரம் தேய்க்கும் நாரில் தயிரைத் தொட்டு உள்ளங் காலில் தேயுங்கள். மறுநாள் தண்ணீரில் கல் உப்பைப் போட்டு நாரில் தொட்டு தேயுங்கள். தொடர்ந்து இப்படி செய்து வர, பாதம் மெத்தென்று ஆகும்.

* வெந்தயக் கீரையை அரைத்து கை, கால்களில் பத்து போல் அப்பி தேய்த்துக் கழுவி வந்தாலும், முரட்டுத் தன்மை போய் பளிச்சென்று ஆகும்.

* மருதாணி பவுடருடன் டீத்தூள், சர்க்கரை, தேங்காய் எண்ணெய் கலந்து கை, கால்களில் இட்டுக் கொள்வது மிகவும் நல்லது. இது வெடிப்பு மற்றும் சொர சொரப்பை நீக்கி குளிர்ச்சியாக்கி, பஞ்சு போன்று மென்மையாக்கும்.

* உருளைக் கிழங்கைச் சீவி உலர்த்தி பவுடராக்கி, தண்ணீரில் குழைத்து பூசி வந்தால், வெடிப்பினால் ஏற்பட்ட கருமை நீங்கி, மிளிரும்.

* சாதாரணமாகவே கைகள் இறுக்கிப் பிடிக்கும்போது கன்னிப் போவது சகஜம். டூ வீலர் ஓட்டும்போது ஒட்டு மொத்த



பிரஷரும் கைகளுக்குப் போவதால், கைகள் கன்னிப் போக வாய்ப்பிருக்கிறது. இதற்காகப் பயப்படத் தேவையில்லை. நேரடியாக வண்டியின் கைப்பிடியைப் பிடிக்காமல், கை உறை அணிந்து கொண்டாலோ, கைப்பிடியில் கம்பளியினால் செய்த உறையைப் பொருத்திக் கொண்டாலோ இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபடலாம்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

33

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
கையொப்பம் : ..............................

BG

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
08.08.2006

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -33**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**பரிசுப் போட்டி இல - 31**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**


**என். எம். மன்சூர், இல. 58ஏ, மன்னார் வீதி, புத்தளம்.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




**அது** எவ்வளவு உபயோகமானது என்பது அந்த அரபுக்காரர்கள் விஷயத்தில் ருசுவாகிவிட்டதே!

விடிகாலை மூன்று மணி. தனிமைக் கொட்டடியில் இருந்தவர்களின் அறைக் கதவுக்கு வெளியே பதினொரு பைகள் வைக்கப்பட்டன. ஒவ்வொன்றின் மேற்புறத்திலும் பெரிய சீட்டு ஒட்டப்பட்டிருந்தது. ஒரு பையின் சீட்டை என்னால் படிக்க முடிந்தது. பியரி: வயது



30. ஐந்தடி எட்டரை அங்குலம். இடுப்பளவு நாற்பத்து இரண்டு, காலணி எட்டரை. எண் பத்து. ஒரு கொலைக் குற்றத்துக்காக இருபதாண்டு தண்டனை பெற்றிருப்பவன் இந்தப் பியரி.

இருண்ட உலகத்தில், ஒளிவு மறைவில்லாத, நேர்மையான நல்ல பையன் இவன். எனக்கு இவனை நன்கு தெரியும். கடல் கடந்த சிறையை நிர்வகிக்கும் அதிகாரிகள் எவ்வளவு கச்சிதமாகவும், திட்டமாகவும் வேலை செய்கிறார்கள் என்பதை இந்தச் சீட்டுக் காட்டியது. இராணுவத்தில், நம் பொருள்களை நாமே ஊகித்துக் கொள்ளும்படி செய்து விடுவார்கள். இவர்கள் இராணுவத்தைக் காட்டிலும் தேவலை. இங்கே எல்லாவற்றையும் எழுதி வைத்துவிடுகிறார்கள். ஒவ்வொருவரும் தன் அளவு என்னவோ அதேபோல் பெறமுடியும். ஒரு பையில் வெளியே நீட்டிக் கொண்டிருந்த துணியிலிருந்து, எங்கள் யூனிபார்ம், சிவப்புப் பட்டைகள் போட்ட வெள்ளை உடுப்பாக இருக்கும் என்று கண்டுகொண்டேன். அந்த உடுப்பை அணிந்து கொண்டு விட்டால், எவர் கண்ணிலும் படாமல் போவதென்பது முடியாத காரியம்.

நீதிபதிகள், ஜூரர்கள், அரசாங்க வக்கீல்கள் முதலியவர்களின் உருவங்களை என் மனக்கண் முன்னே கொண்டுவர வலுக்கட்டாயமாக முயன்றேன். மனம் கீழ்ப்படிய மறுத்தது. வேறு சாதாரண நபர்களின் உருவங்கள் தான் தோன்றின. ஒரு விஷயம் அறிந்து கொண்டேன். வெகு விவரமாக ஒன்றை நினைவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் நாம் தனியாக, தன்னந்தனியாக இருந்தாகவேண்டும். வரவிருக்கும் கூட்டு வாழ்க்கையில் இதுபோன்ற வேறு பல தேவைகளும், திட்டங்களும், எண்ணங்களும் ஏற்படக்கூடும் என்ற உண்மையைப் புரிந்து கொண்டேன். அதில் ஓர் ஆறுதல் ஏற்பட்டது.

பியரி என்ற கைதி கம்பிக்கருகே வந்து, “சௌக்கியமா பட்டு?” என்றான்.

“எப்படி இருக்கிறது”

“என்னைப் பொறுத்தமட்டில் அமெரிக்காவுக்குப் போக வேண்டுமென்று எப்போதும் கனவு கண்டு கொண்டிருந்தேன். ஆனால் நான் ஒரு சூதாடி. பயணத்துக்குத் தேவையான பணத்தைச் சேமிக்கவே முடியவில்லை. எனக்கு அதைப் பரிசாகத் தருவதென்று பொலிஸ்காரர்கள் தீர்மானித்து விட்டார்கள். அவர்களுக்கு ரொம்ப இரக்க உள்ளம். இல்லையா,

பட்டாம்பூச்சி?” அவன் இயல்பாகப் பேசினான். எதைப் பற்றியும் பீற்றிக் கொள்கிற மாதிரி பேசவில்லை. அவன் தன்னம்பிக்கையுடன் இருப்பதை உணர முடிந்தது. “அமெரிக்காவுக்கு என்னை இலவசமாய் அழைத்துப் போகிற பொலிஸ்காரர்களைப் பாராட்டத்தான் வேண்டும். இல்லையா? பிரான்ஸில் பதினைந்து வருடம் தனியான சிறையில் ஓடாகத் தேய்வதைக் காட்டிலும் கயானாவுக்குப் போவதையே நான் விரும்புகின்றேன்.” என்றான்.

“அக்கரைச் சிறையில் தொழு நோயிலோ, மஞ்சள் காமாலையிலோ செத்தாலும் பரவாயில்லை. பிரான்ஸில் தன்னந்தனியாக ஒரு பொந்தில் பைத்தியம் பிடித்துத் தலையைப் பிய்த்துக் கொண்டு கிடப்பதைக் காட்டிலும் அது ஒன்றும் மோசமில்லை,” என்றேன்.

“எனக்கும் அப்படித்தான் தோன்றுகின்றது.”

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

“இதோ உன் சீட்டு. பார்த்தாயா?” என்று பையைக் காட்டினேன்.

குனிந்து உற்றுப் படித்தான். எழுத்து எழுத்தாகக் கூட்டினான். “இந்த உடைகளை உடனே மாட்டிக் கொள்ளவேண்டும் போலிருக்கிறது எனக்கு. பையைத் திறந்தால் என்ன? யாரும் எதுவும் சொல்லமாட்டார்கள். இது நமக்காக வைத்திருப்பது தானே?” என்றான்.

“தொடாதே. பேசாமல் வை. அவர்களே வந்து சொல்கிற வரையில் காத்திரு. இப்போது போய்த் தப்புத் தண்ட செய்யக்கூடாது. நமக்குக் கொஞ்சம் அமைதியும், நிம்மதியும் தேவைப்படுகிறது.” என்றேன். நான் சொல்வதைப் புரிந்து கொண்டான் அவன். கதவிலிருந்து விலகிப் போய் விட்டான்.

தேகா என்னை நோக்கி, “இதுதான் இங்கே நமது கடைசி இரவு தம்பி. நாளைக்கு நம்மைத் தாய்நாட்டிலிருந்து பிரித்துத் தொலைதூரம் கொண்டு போய் விடப் போகிறார்கள்,” என்றான்.

தேகா! இந்த அழகான நாட்டில் நீதி முறைகள் அவ்வளவு அழகாக இருக்கவில்லையே! வேறு சில நாடுகள் அழகாக இல்லாதிருக்கலாம். ஆனால் வழுக்கி விழுந்த தனது மக்களை இன்னும் மனிதத் தன்மையோடு நடத்தக்கூடியதாக அவை இருக்கும். அப்படிப்பட்ட நாடுகளை ஒருவேளை போகப் போகக் காண்போமோ என்னமோ.” என்றேன். இதைச் சொன்னபோது, மிக உண்மையான வார்த்தை சொல்கிறேன் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் வருங்காலம் நிரூபித்தது” - நான் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை.

மீண்டும் பரிபூரண நிசப்தம் குடிகொண்டது.

மணி ஆறு. எங்கு பார்த்தாலும் சலனம். கான்விக்ட் வார்டர்கள் காப்பி எடுத்து வந்தார்கள். பிறகு நாலு வார்டர்கள் வந்தனர். இன்று அவர்கள் வெள்ளையுடை அணிந்திருந்தார்கள். ஆனால் ரிவால்வரை அப்படியே வைத்துக் கொண்டிருந்தார்கள். மாசு மறுவற்ற வெள்ளையுடை. பவுன் போல் பளபளத்த பித்தான்கள். ஒருவன் தன் இடது புஜத்தில் தங்கப் பதக்கம் அணிந்திருந்தான். தோள்பட்டையில் எதுவுமில்லை.

“இரண்டிரண்டு பேராகத் தாழ்வாரத்துக்கு வாருங்கள். ஒவ்வொரு பையிலும் அவரவர் பெயர் போட்ட சீட்டு இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு சுவரோரமாக முற்றத்தைப் பார்த்தாற்போல் நில்லுங்கள். பைகளை உங்கள் முன்னே வைத்துக் கொள்ளுங்கள்.!”

நாங்கள் பைகளை காலடியில் வைத்துக் கொண்டு வரிசையாக நிற்பதற்கு இருபது நிமிடமாயிற்று.

“உங்கள் உடைகளைக் கழற்றுங்கள். சுருட்டி மூட்டையாகக் கட்டுங்கள். ரைட். யாரப்பா அங்கே? அந்த மூட்டையைக் கட்டி, கொட்டடிக்குள் கொண்டு போய் வை. இப்போது இந்த உடைகளை மாட்டிக் கொள்ளுங்கள். இடுப்பு ஆடை, டிராயர், பட்டை போட்ட டிரெளசர், சட்டை, ஷூ, ஸாக்ஸ் - எல்லோரும் மாட்டிக் கொண்டாயிற்றா?“

“ஆயிற்று சார்.”

“ரைட். பையிலிருக்கிற உல்லன் கோட்டை வெளியே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். ரொம்ப மழையாகவோ, குளிராகவோ இருந்தால் உபயோகப்படும். பைகளை இடது தோளில் மாட்டிக்கொள்ளுங்கள். இரண்டிரண்டு பேராக என் பின்னால் வாருங்கள்.”


முன்னே சார்ஜண்ட; பக்கவாட்டில் இரண்டு வார்டர்கள். நாலாவது நபர் பின்புறத்தில். இப்படி எங்கள் அணி வெளி முற்றத்துக்கு நடை போட்டது. இரண்டு மணி நேரத்திற்குள் எண்ணூற்றுப் பத்துக் கைதிகளும் அணிவகுத்து நின்றனர். நாற்பது பேரைத் தனியே கூப்பிட்டார்கள். அதில் நானும், தேகாவும் இருந்தோம். தப்பியோடிப் பிடிபட்ட ஜூலட், கால்கானி, ஸான்டினி ஆகிய மூவரும் இருந்தார்கள். இந்த நாற்பது பேரையும் பத்துப் பேர் கொண்ட நான்கு அணிகளாகப் பிரித்தார்கள். நான்கு அணியின் பின்னேயும் ஒரு வார்டர் வந்தார்” சங்கிலி கிடையாது, கை விலங்கு கிடையாது எங்களுக்கு முன்னே மூன்று கெஜதூரத்தில் எங்களைப் பார்த்தாற்போல் பத்துப் பொலிஸ்காரர்கள் பின்புறமாக நடைபோட்டார்கள். மொத்தத் தூரமும் அவர்கள் இப்படியே எங்களைப் பார்த்துக் கொண்டே மார்ச் பண்ணினார்கள். ஒவ்வொருவனையும் இன்னொரு பொலிஸ்காரர் தோளைத் தொட்டு வழி நடத்திச் சென்றார்.

கோட்டையின் பெரிய வாசல் திறந்தது. அணிகள் மெல்ல மெல்ல நகர்ந்தன.

(பட்டாம்பூச்சி பறக்கும்)

# இஸ்ரேல் நடத்துவது அடாவடித்தனம்!


**ஜூ**லை மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகிய இஸ்ரேலின் அடாவடித்தனம் உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஆரம்பத்தில் ஹிஸ்புல்லா இயக்கம் மீதான தாக்குதல்கள் என்ற



போர்வையில் ஆரம்பமான இஸ்ரேலின் தாக்குதல்கள் இப்போது கட்டுமீறிச் சென்று சிறுவர்கள் ஏன்? ஐ.நா. அதிகாரிகளையே பலியெடுக்கும் அளவிற்குச் சென்றுவிட்டன. இதன் காரணமாக வேறு வழியின்றி 48 மணிநேரத்திற்குத் தாக்குதல்களை நிறுத்தி வைக்குமாறு இஸ்ரேலை ஐ.நா. கோரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

## உண்மையில் நடந்தது என்ன?

லெபனான் நாட்டினை ஆக்கிரமித்து இருந்த இஸ்ரேல் 28 வருடங்களுக்கு முன் அதாவது 1978ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறியது. அன்றிலிருந்து இன்றுவரை லெபனான் தேசத்தை கண்கொத்திப் பாம்பு போலவே இஸ்ரேல் கண்காணித்து வருகின்றது. இதற்கு முக்கிய காரணம்


கோபி அனான்

இஸ்ரேலுக்கு தலையிடியாக இருக்கும் இரண்டு அமைப்புக்களே ஆகும்.

அவற்றில் முக்கியமானது பாலஸ்தீன தேசத்தினை மையமாகக் கொண்டியங்கும் ஹமாஸ் இயக்கம். மற்றையது லெபனான் தேசத்தினை பின்புலமாகக் கொண்டியங்கும் ஹிஸ்புல்லா அமைப்பு.

இஸ்ரேலினுடைய சும்மா மென்ற வாய்க்கு அவல் போடுவது போன்ற ஒரு சம்பவமே கடந்த மாதம் 12ஆம் திகதி இடம்பெற்றது. தெற்கு லெபனான் எல்லை ஊடாக ஊடுருவிய ஹிஸ்புல்லா அமைப்பினர் அதிரடித் தாக்குதல்களை நடத்தியதுடன், இரண்டு இஸ்ரேலிய கொமாண்டோ படை வீரர்களைப் பிடித்துக்கொண்டும் சென்றுவிட்டனர்.

தன்னுடைய இரண்டு படை வீரர்களை விடுவிக்கும்வரை தாக்குதல்கள் தொடருமென போர் பிரகடனத்தை ஒருதலைப்பட்சமாக அறிவித்த இஸ்ரேல், பொதுமக்கள் குறித்து கிஞ்சித்தும் அக்கறை கொள்ளாது படுமூர்க்கத்தனமான தாக்குதல்களை ஆரம்பித்தது.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிக்கும் நிலையாக ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு எதிரான தாக்குதல்கள் என்று போர்ப் பிரகடனத்தை ஆரம்பித்த இஸ்ரேல், இன்று ஐ.நா. பார்வையாளர்களை பலி எடுக்கும் அளவிற்கு தனது உச்சக்கட்ட கோரமுகத்தைக் காட்டியுள்ளது.

லெபனானின் முக்கிய நகரங்களான பின்ட், ஜூபலி, மரூன், அல்ட்ராஸ், அடங்சேய் ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேலிய விமானத் தாக்குதல்களின் போது தென் லெபனான் நகரான அடங்சேய் எனும் இடத்தில் அமைந்துள்ள ஐ.நா நிலை மீது குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதில் 04 ஐ.நா. பார்வையாளர்கள் கொல்லப்பட்டனர். இவர்கள் கனடா, சீனா, ஏஸ்சியா, பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இஸ்ரேல் தாக்குதலில் நான்கு ஐ.நா. பார்வையாளர்கள் மரணமாகியதையிட்டு இஸ்ரேல் பிரதமர் எஹூத் ஏல்மாட், ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனானிடம் பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளார். ஆனால் இஸ்ரேல் அரசினை மட்டம் தட்டி வைப்பது போல, இத்தாக்குதல் வேண்டுமென்றே நடாத்தப்பட்டதாக கொபி அனான் துணிச்சலாக அறிவித்திருப்பது குறித்து எஹூத் ஏல்மாட் கடும் அதிர்ச்சியடைந்துள்ளார்.

இதேவேளை, மற்றுமொரு சம்பவம் உலகத்தினையே அதிர்ச்சிக்குள்ளாக் கியுள்ளது. லெபனான் கானா என்ற கிராமம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 03 மாடிக் கட்டிடம் ஒன்று தகர்ந்ததில் 30 பச்சிளம் சிறார்கள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஊடகப்பிரிவின் மூலம் கொல்லப்பட்ட பச்சிளம் பாலகர்களின் படங்களைக் கண்ட சர்வதேசம் அதிர்ச்சியடைந்துள்ளது.

இஸ்ரேலினால் நடாத்தப்பட்டு வரும் மோசமான விமானக் குண்டு வீச்சுக்களினால் கடந்த ஜூலை மாதம் மட்டும் 600இற்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகப் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் நடாத்திவரும் தாக்குதல்களில் உயிரிழப்புக்களைத் தவிர, சுற்றுச்சூழலைப் பாதிக்கும் மற்றுமோர் விபரீதமும் நிகழ்ந்துள்ளது.




எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது குண்டுமாரி பொழியப்பட்டதில் அவை தீப்பற்றி எரிகின்றன. இதன் உச்சக்கட்டமாக மசகு எண்ணெய்


**ஜெ.கே**

சுத்திகரிப்பு நிலையம் தகர்க்கப்பட்டதில் 30 ஆயிரம் தொன் பெற்றோல் மத்திய தரைக் கடலில் கொட்டப்பட்டுள்ளது. இந்தச் சுற்றாடல் மாசிலிருந்து மீள்வதற்கு வெகு காலம் பிடிக்கும் என சுற்றுச் சூழல் ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

இப்போது சர்வதேச சமூகத்தின் முன்னால் இருக்கும் மிக முக்கிய கேள்வி அமெரிக்காவின் ஆசீர்வாதத்துடன் இஸ்ரேல் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களை யார் தடுத்து நிறுத்துவது? என்பதுதான். இதற்குக் காலம் தான் பதில் கூற வேண்டும்.

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"





'தி வேக பாண்ட்' படத்தில் ஜிப்ஸி தலைவனாக நடித்தது எர்ரிக்கேம்ப்பெல். கடத்தப்பட்ட பெண்ணாக நடித்தவர், சாப்ளினுடன் ஆரம்ப காலத்தில் பல படங்களில் கதாநாயகியாக நடித்த எட்னா பெளவயனஸ். 'எட்னா' வாட்டசாட்டமாக இருப்பாள். சாப்ளினின் திரைப்பட கதாநாயகி மட்டுமல்லாமல், அவருடைய ஆரம்ப கால நிஜ வாழ்க்கைக் காதலியாகவும் இருந்தவள். இருவரும் பல இடங்களுக்கு உல்லாசமாகச் செல்வார்கள். காதல் வெள்ளத்தில் நீந்துவார்கள். பல நண்பர்கள், எட்னாவை அவர் மனைவியாக்கிக் கொள்வார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை. அதற்கு என்ன காரணமென்று




இருவரும் அதை வெளியிடவில்லை. சில நண்பர்களிடம் சாப்ளின் சொன்னார் : "திரைப்பட வாழ்க்கையில் கவனம், எதிர்காலம் இன்னும் நன்றாக அமைய வேண்டும் என்ற கனவை நினைவாக்கத் தேவையான உழைப்பு, இவைகளுக்கு நடுவே எட்னாவை மனைவியாக்கினால் இரண்டு வகை வாழ்க்கையும் பாதிக்கப்படும்!"

'தி வேகபாண்ட்' மற்றொரு முக்கிய காரணத்திற்காகத் திரையுலகச் சரித்திரத்தில் இடம் பெற்றது. இதே வகையான கதையமைப்பை வைத்து 1931இல் சாப்ளின் தன்னுடைய முதல் முழு நீள திரைப்படத்தை உருவாக்கினார். அந்தப் படத்தில் பெண்மணிக்குப் பதிலாக ஒரு ஆண் குழந்தை. அந்தப் படம் தான் உலகெங்கும் மக்களைச் சிரிக்க வைத்து, சிந்திக்க வைத்து, அழவும் வைத்தது. அதுதான் 'தி கிட்' அந்தக் காவியத்திற்கு அடிக்கல்லாக அமைந்தது தி வேகபாண்ட்.

சாப்ளினின் அடுத்த படைப்பு அவர் புகழை மேலும் பல மடங்கு வளர்த்தது. கதையமைப்பு... நகைச்சுவை...இயக்கம்...இவைகள் எல்லாமே மிகவும் சிறப்பாக அமைத்தார். இது ஒரு, நன்றாகக் குடித்துவிட்டு தன் வீட்டிற்குத் திரும்பும் ஒருவனின் கதை. இதில் என்ன விசேஷமென்றால் படத்தின் ஆரம்பத்தில் வரும் ஒரு சிறு காட்சியைத் தவிர, மீதி படம் முழுவதும் ஒரே கதாபாத்திரம்! அதுதான் சாப்ளின். வேறு நடிகரோ, நடிகையோ எதுவுமே இல்லை. சில விமர்சகர்கள் இன்றைய அளவிலும், இதுதான் சாப்ளினின் உன்னத படைப்பு என்று குறிப்பிடுகிறார்கள். சாப்ளின் வேறு எந்தப் படத்தையும், எடுக்காமல் இருந்திருந்தாலும், இந்த ஒரே படம் அவருக்கு அழியாத புகழை அள்ளிக் குவித்திருக்கும் என்று சொல்பவர்களும் உண்டு. அந்தக் கலைப்படம் தான் 'ஒன் ஏ.எம்.'

இந்தப் படத்தில் சாப்ளின் விலையுயர்ந்த ஆடைகளை



அணிந்திருக்கிறார். டாக்ஸியிலிருந்து இறங்கும் பொழுது வண்டியின் கதவைத் திறக்க முடியாமல் திணறுகிறார். வசதியாக ஒரு வீட்டிற்குள் நுழையலாம் என்றால் தேடிப் பார்த்தும் தான் அணிந்திருந்த சூட்டில் சாவியைக் காணோம். அருகிலிருந்த ஒரு ஜன்னல் திறந்திருப்பதைக் கண்டுபிடிக்கிறார். மிகவும் சிரமப்பட்டுக் கூனி, குறுகி, தாவி உள்ளே வருகிறார். உள்ளே வந்ததும் பாக்கெட்டில் கையை விடும் பொழுது சாவி கிடைக்கிறது. திருடனைப் போல நம் வீட்டிற்குள்ளேயே ஜன்னல் வழியாக நுழைந்து விட்டோமே என்ற மனநிலையில் கதவைத் திறந்து கொண்டு, வெளியில் வந்து, மீண்டும் முறையாக உள்ளே செல்கிறார். அந்த



வீட்டில் அவரைத் தவிர யாரும் இல்லை. அவருக்குத் துணையாக இருப்பது உயிரில்லாத புலி, சிங்கம், கரடி பொம்மைகள், தோல் 'கார்பெட்கள்'. மாடியின் மேல் ஒரு பெரிய அளவு கடிகாரம். அதன் பெண்டுலம் அங்குமிங்கும் ஆடிக் கொண்டிருக்கும். குடிபோதையில் வீட்டிலிருக்கும் எல்லாப் பொருட்களுமே உயிர்பெற்றுத் தன்னை எதிர்த்துப் போராடுவது போல் ஒரு பிரமை இவருக்கு! ஒவ்வொரு மிருகத்தையும் கண்டு அலறுகிறார். எப்படியோ கஷ்டப்பட்டு, பலமுறை கீழே விழுந்த பிறகு, மாடிப்படிகளில் ஏறிச் செல்கிறார். அங்கு கடிகாரத்தின் பெண்டுலம் அவர் முகத்தைப் பதம் பார்க்கிறது, மீண்டும், மீண்டும் எப்படியோ சமாளித்துக் கொண்டு தன் படுக்கை அறைக்குள் நுழைகிறார்.

தூங்குவதற்காக அந்த அறையில் அமைக்கப்பட்டிருக்கிறது அந்தக் காலத்தில் அமெரிக்காவில் அபார்ட்மெண்ட்டுகளில் உபயோகப்படுத்தப்பட்ட ஒரு வகையான கட்டில் 'மர்பி பெட்'. இது இடத்தை வீணாக்காமல் இருப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு படுக்கை. பகல் நேரங்களில் அல்லது படுக்கை தேவைப்படாத நேரங்களில் அந்த மர்பி பெட் சுவருக்குள்ளே துளைக்கப்பட்ட ஒரு இடத்தில் போய் அமர்ந்துவிடும். அதை இயக்கக் கட்டிலில் 'ஸ்பிரிங்' பொருத்தப்பட்டிருக்கும். சுவரில் ஒரு ஸ்விட்ச் அமைப்பு மாதிரி வைக்கப்படும் ஒன்றை அமுக்கினால் படுக்கை கீழே வரும். மற்றொன்றை அமுக்கினால் படுக்கை உள்ளே சென்றுவிடும். இதுதான் அந்த மர்பி பெட்டின் சிறப்பு.

*(தொடரும்)*

---



# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

## 21



## நூர்ஜஹான் ராணி

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

மெஹருன்னிஸா விதவையானாள்.

விதவையாக தனது தகப்பனாருடன் வசித்து வந்த மெஹருன்னிஸாவிடம் இளவரசன் சலீம் தனது காதலைத் தெரியப்படுத்தி தன்னை திருமணம் முடிக்குமாறு வேண்டிக்கொண்டான்.

ஆனால் அதற்கு அவள் மறுத்துவிட்டாள்.

இதற்கிடையில் அக்பர் மன்னர் தனது பட்டத்து இளவரசரான சலீமிற்கு திருமணத்திற்காகப் பெண் பார்க்கத்தொடங்கினார். இனியும் தாமதித்தால் தனது காதல் ராணியைக் கரம் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்த சலீம், தகப்பனாரிடம் தான் மெஹருன்னிஸாவினை விரும்பிய விடயத்தையும், விதவையாக இருந்தாலும் அவளையே திருமணம் முடிக்க விருப்பமாக உள்ள விடயத்தையும் நேரடியாகவே கூறிவிட்டான்.

மகன் சலீமின் வார்த்தைகளைக் கேட்ட அக்பர் மன்னர் அதிர்ந்து போனார்.மெஹருன்னிஸா விதவை ஆவாள் என எவருமே எதிர்பார்க்கவில்லை. அதுவும் திருமணம் முடிந்து சில தினங்களிலேயே அவளுக்கு இப்படி ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும் என்று யாருமே கிஞ்சித்தும் சிந்தித்திருக்கவில்லை. ஷெர்-அப்கான் சமரில் மரணமடைந்ததை அடுத்து மெஹருன்னிஸா தனது தந்தையாருடனேயே வசிக்கலானாள்.

இதேவேளை அக்பர் மன்னர் தனது புதல்வனான சலீமிற்கு திருமணம் செய்து வைப்பதற்காக ஏற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்தார். எத்தனையோ முகலாய அரசர்கள், நிலச்சுவாந்தர்கள் என ஏராளமான பெரிய இடங்களில் இருந்து சலீமை சம்பந்தங்கள் தேடி வந்தன.

ஆனால், எந்த ஒரு திருமணப் பேச்சையும் செவி கொடுத்துக் கேட்பதற்கு சலீம் தயாராக இருக்கவில்லை. ஏனெனில் அவனது மனது முழுவதும் மெஹருன்னிஸாவே நிறைந்திருந்தாள். தனது மனதிற்குள் தேக்கி வைத்திருந்த அவள் மீதான காதலால் அவள் விதவையானபோதும் கூட சலீம் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருந்தான். இதன் காரணமாக தனக்குப் பேசி வந்த அனைத்து திருமண ஏற்பாடுகளையும் அவன் தட்டிக்கழித்தான்.

அக்பர் மன்னரின் மாளிகைக்கு அருகிலேயே அரச உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட மாளிகையும் இருந்தது. அந்த மாளிகையிலேயே கியாஸ் பெக் தொடர்ந்து தங்கியிருந்தார் மெஹருன்னிஸாவும் தனது தந்தையுடன் அவ்வில்லத்திலேயே வசித்து வந்தாள்.

எனவே அடிக்கடி அவளைக் காணும் சந்தர்ப்பம் சலீமிற்குக் கிடைத்தது. தனது தயக்கம் எல்லாவற்றினையும் உதறித்தள்ளிய சலீம், தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு நேரடியாகவே மெஹருன்னிஸாவிடம் கேட்டான்.

ஆனால் அவள் உடனடியாக அதற்குச் சம்மதிக்கவில்லை. இன்னுமொரு திருமணம் முடிப்பது என்ற எண்ணத்தை தான் கொண்டிருக்கவில்லை என சலீமிடம் அவள் தெளிவாகவே கூறிவிட்டாள்.

ஆனால், மெஹருன்னிஸா திருமணம் முடிப்பதற்கு முன்னரே தான் அவளை விரும்பிய விடயத்தை எடுத்துரைத்த சலீம், எவ்வளவு காலம் சென்றாலும் தான் காத்திருப்பதாகவும் உறுதிபடத் தெரிவித்தான்.

ஏறக்குறைய நான்கு ஆண்டு காலம் மௌனமாக இருந்த மெஹருன்னிஸா, தனது மௌனத்தைக் கலைத்து சலீமை திருமணம் முடிக்க தான் தயார் எனத் தெரிவித்தாள். இதனடிப்படையில் சலீம் என்ற ஜஹாங்கீர் மன்னருக்கும் மெஹருன்னிஸாவிற்கும் 1611ஆம் ஆண்டு தற்போது பழைய டில்லி என அழைக்கப்படும் அக்பரின் மாளிகையில் திருமணம் இடம்பெற்றது.

இத்திருமணத்தின் மூலம் நாட்டின் ராணியாகவும் முடிசூடிய மெஹருன்னிஸா அதன் பின்னர் தனது உத்வேகத்தினைக் காட்டினாள். உண்மையில் அவள் சகல கலைகளுக்கும் ராணியாகவே திகழ்ந்தாள்.

சலீமின் மனைவி என்ற வரையறைக்குள் மட்டும் தன்னை முடக்கிக் கொள்ளாமல் அரச நிர்வாகத்திலும் அவள் பங்கெடுத்தாள். ஒரு கட்டத்தில் மெஹ்ருன்னிஸாவின் சம்மதமில்லாமல் எந்த ஒரு அரச தீர்மானமும் நிறைவேற்றப்படாது என்ற எழுதப்படாத சட்டமே அமுலாக்கப்பட்டிருந்தது.

அரச நிர்வாகத்தில் மட்டுமல்ல, சலீம் மன்னருக்கு இணையாக வேட்டையாடுவதிலும் அவள் புகழ்பெற்றிருந்தாள். அக்காலகட்டத்தில்தான் அறிமுகமாகியிருந்த துப்பாக்கியினைக் கொண்டு ஒரே நாளிலேயே நான்கு புலிகளை அவள் சுட்டுவீழ்த்தியதாக வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

பெண்களுக்கு முழுச் சுதந்திரம் வேண்டும். அவர்கள் ஆண்களின் கைப்பாவைகளோ அல்லது அடிமைகளோ அல்ல என்பதனை முழு அளவில் வலியுறுத்தினாள். விதவைகளுக்கு மறுமணம் செய்து வைப்பது, அனாதைப் பெண்களுக்கு நிதி உதவி அளித்து திருமணம் செய்து வைப்பது போன்ற செயல்களில் மிகத் தீவிரமாக ஈடுபட்டாள். இதன் காரணமாகப் புகழ் பெற்றதனாலேயே பின்னாளில் நூர்ஜஹான் அதாவது உலகின் ஒளி எனப் பெயர் பெற்றாள்.

இதன் உச்சக்கட்டமாக 1620ஆம் ஆண்டு கிழக்கிந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பினை முகத்திரை அணிந்தவாறு தானே பிரதான தளபதியாக இருந்து நூர்ஜஹான்



முன்னெடுத்தாள்.

சலீம் - நூர்ஜஹான் ஆகியோருக்கு குழந்தைகளே பிறக்கவில்லை. இதற்கு உண்மையான காரணம், திருமணம் என்ற ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் சலீமும், நூர்ஜஹானும் உடல் ரீதியாக இணையவில்லை என அக்கால வரலாற்றாசிரியர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

சலீம், நூர்ஜஹான் காலத்திற்குப் பின் அக்பர் மன்னரின் தம்பியின் மகனான இரண்டாம் ஜஹாங்கீரே ஆட்சிப் பொறுப்பெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## அமெரிக்க ஜனாதிபதிக்கு இரகசியமாகத் தகவல் அனுப்பினார் ஜெயவர்த்தனா


**இலங்கை** - இந்திய ஒப்பந்த விபரங்கள், ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்வரை இரகசியமாக வைக்கப்பட வேண்டுமென்றே ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் உடன்பாடு காணப்பட்டது. ஆனால் ஜெயவர்த்தனா, தனது உறுதிமொழியை அனுசரித்து நடக்கவில்லையென்பது, பின்னர் அம்பலமானது. ஜனாதிபதி ஜெயவர்த்தனா, ஜனாதிபதி மாளிகையில் ராஜீவ் காந்திக்கு 29ஆம் திகதி காலை அளித்த தேனீர் விருந்துபசாரத்தின்போது நடைபெற்ற ஒரு சம்பவம், இதனை அம்பலப் படுத்தியது. அப்போது இலங்கையில் அமெரிக்க உயர்ஸ்தானிகராகக் கடமையாற்றியவர் ஜேம்ஸ் ஸ்பெய்ன் என்பவர். தேனீர் விருந்துபசாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித்தை அணுகிய ஜேம்ஸ் ஸ்பெய்ன், அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகனிடமிருந்து தனிப்பட்ட செய்தியொன்று வந்திருப்பதாகவும் அதனை நேரடியாகவே இந்தியப் பிரதமரிடம் கையளிக்குமாறு தனக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். ராஜீவ் காந்தியின் விஜயம் மிகக் குறுகிய காலத்தைக் கொண்டதென்பதாலும் அவரது நிகழ்ச்சி நிரலில் நிறைய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாலும் அவரை நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்கான ஒழுங்குகளைச் செய்ய முடியாதென்று தீக்ஷித் பதிலளித்தார். எனவே ராஜீவைச் சந்திப்பதற்கென புறம்பான நேரமொன்றினை ஒதுக்குவதற்குப் பதிலாகத் தன்னை அவரிடம் அழைத்துச் செல்லுமாறு ஸ்பெய்ன் கேட்டதற்கிணங்க, அதற்கான ஒழுங்குகளைத் தீக்ஷித்




(அரசியல் தொடர்)

மேற்கொண்டார்.

றொனால்ட் றேகன் கைச்சாத்திட்டு அனுப்பி வைத்த



றொனால்ட் றேகன்

தனிப்பட்ட செய்தியை ஸ்பெய்ன், ராஜீவ் காந்தியிடம் கையளித்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாகவே இச் செய்தி ராஜீவிடம் கையளிக்கப்பட்டது. இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியப் பிரதமர் எடுத்த துணிகர நடவடிக்கையை றொனால்ட் றேகன் பாராட்டியிருந்தார். அத்துடன் இலங்கையில் ஸ்திரத்தன்மையையும் சமாதானத்தையும் ஏற்படுத்த எடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகளையும் தான் பாராட்டுவதாகவும் றேகன் தெரிவித்திருந்தார். இந்தியா எடுத்துவரும் முன்முயற்சிகளை ஒப்பந்த விபரங்கள் பகிரங்கப்படுத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி நேரடியாகப் பாராட்டுவதென்பது ஒரு விசயத்தை அம்பலப்படுத்தியது. அதாவது ஒப்பந்த உள்ளடக்கங்கள், ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாகவே, அமெரிக்க ஜனாதிபதியின் கவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்பதே அதுவாகும். அமெரிக்காவோடு ஜே.ஆர்.கொண்டிருந்த நெருங்கிய, இரகசியத் தொடர்புகளை இது காட்டுவதாக அமைந்துள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு ஆதரவு தெரிவித்து, இந்தியப் பிரதமருக்கு முதன் முதலாகச் செய்தி அனுப்பிய உலகத் தலைவர் அமெரிக்க ஜனாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு அமெரிக்கா பூரண ஆதரவை வழங்கியதோடு, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நேரடிப் பொறுப்பை இந்தியா கையேற்றதையும் அமெரிக்கா வரவேற்றிருந்தது. அத்துடன் ஒப்பந்த விதிகளை வரவேற்றிருந்தது. ஒப்பந்த விதிகளை அமுல்படுத்துவதில் உதவியளிக்கவும் அமெரிக்கா தயாராகவிருந்தது. ராஜீவ் காந்திக்கும் ஜெயவர்த்தனாவுக்குமிடையில் பரிமாறப்பட்ட கடிதங்களும் ஒப்பந்தத்தில் ஓர் இணைப்பாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததால், உத்தேச ஒப்பந்த விதிகள் பற்றி, ஜெயவர்த்தனா றேகனுக்கு அறிவித்திருப்பாரென்பது சாதாரணமானதுதான்.

'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையம், திருகோணமலைக் கடலில் அந்நிய நாட்டுக் கப்பல்கள் வந்து போவது உள்ளிட்ட இந்தியாவின் பந்தோபஸ்துக்கு ஆபத்தான விடயங்கள் தொடர்பாக ராஜீவுக்கும் ஜே.ஆருக்குமிடையில் கடிதங்கள் பரிமாறப்பட்டிருந்ததால், ஒப்பந்த விடயத்தை அமெரிக்க ஜனாதிபதியின் கவனத்துக்கு இலங்கைத் தலைவர் கொண்டு வந்திருக்கக் கூடுமென்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த உத்தேச ஒப்பந்தத்தை வரவேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும், றொனால்ட் றேகன் செய்தி அனுப்பியிருந்தார். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அதன் சகல அம்சங்களையும் பகிரங்கப்படுத்தலாமென்றே ஏற்கனவே இலங்கை - இந்தியா ஆகிய இரு நாடுகளும் இணக்கம் கண்டிருந்தன.

இதற்கிடையில் ஒப்பந்தத்தை எதிர்த்துக் கொழும்பில் வெடித்த வன்செயல்கள் கண்டி, அனுராதபுரம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியதால், வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவத்தை சிங்களப் பகுதிகளுக்குக் கொண்டு வந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம் + அம்பி மகன்**

ஜெயவர்த்தனா விரும்பினார். இதற்கு இந்திய விமானங்களைத் தந்துதவுமாறு ஜெயவர்த்தனா, ராஜீவ் காந்தியிடம் வேண்டுகோள் விடுத்தார். அதே நேரம் யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் வவுனியாவின் சில பகுதிகளுக்கும் கணிசமான அளவு இந்திய அமைதிப் படையை அனுப்பி வைக்குமாறு ராஜீவிடம் ஜெயவர்த்தனா கோரிக்கை விடுத்தார்.

ராஜீவ் காந்தி கொழும்பில் தங்கியிருந்த போதே ஒப்பந்தத்துக்கு எதிராக எழுந்த வன்செயல்கள், ஜெயவர்த்தனா எதிர்நோக்கிய ஆபத்துகளையும் சிக்கல்களையும் தெளிவாக எடுத்துக் காட்டின. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்பு. எதிர்காலத்தில் பிரிக்கப்பட்டு விடலாம் என்பதே ராஜீவின் பிரச்சினையாக இருந்தது. சிங்களக் கடும்போக்காளர்களின் கோரிக்கைக்கு ஜெயவர்த்தனா அடிபணிந்து போகக் கூடாதென்பதற்காகவே ஒரு வருடத்துக்குப் பின்னர் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதென்ற விதி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும், ராஜீவின் பாதுகாப்புக்கென இரண்டு குண்டுகள் துளைக்காத கார்களையும் ஏற்றிவந்த ஏ.என்.32 ரக விமானங்கள் இரண்டினையும் இலங்கைப் படையினரை கொழும்புக்கு ஏற்றி வருவதற்காக யாழ்ப்பாணத்துக்கு ராஜீவ் அனுப்பி வைத்தார். ஜெயவர்த்தனாவின் அனுமதியுடனேயே ஆறாயிரம் இந்திய அமைதிப்படையினர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருந்தனர். இலங்கையில் வந்திறங்கிய அமைதிப் படையினர் அனைவரும் தமிழர்களா என்ற கேள்வியும் சந்தேகமும் சிங்களத் தரப்புகளிலிருந்து எழுப்பப்பட்டன. இலங்கைக்கு வந்து சேர்ந்த இந்திய அமைதிப் படையில் பஞ்சாப் ரெஜிமென்ற், மட்ராஸ் ரெஜிமென்ற் எனப் பல்வேறு இந்தியப் படைப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் அடங்கியிருந்தனர்.

1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி, சென்னையிலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பிரபாகரன் கீழ்க்கண்டவாறு கூறியிருந்தார். "இந்தியாவின் நலன்களை மட்டுமே கவனத்தில் கொண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்த விதிகளை ஏற்றுப் போதிய பாதுகாப்பில்லாமல் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கையளிக்கத் தயாராக இல்லை" என்று அவர் கூறினார்.

இதற்கிடையில் புலிகள் இயக்கத்துக்கும் ஏனைய தமிழீழக் குழுக்களுக்குமிடையில் மோதல்கள் ஆரம்பமாகின. ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ போன்ற தமிழீழக் குழுக்களுக்கு இந்தியப் படை ஆதரவளிப்பதாகப் புலிகள் இயக்கம் சந்தேகம் கொண்டது. புலிகள் இயக்கத்தின் தாக்குதல்களைத் தாங்கள் எதிர்நோக்க வேண்டிய ஆபத்திருப்பதால் ஆயுதங்களைக் கையளிக்க ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமும் ரெலோ இயக்கமும் மறுப்புத் தெரிவித்தன.

(தொடர்ந்து வடியும்....)




பிரபாகரனின் நண்பன் குட்டப்பன் என்பவரிடம், பிரபாகரனை ஏமாற்றி அழைத்து வர சந்துநாயரும் ஜயந்தனும் கூறுகிறார்கள். விசேஷ சரக்கு (மதுபானம்) இருப்பதாக குட்டப்பன் பிரபாகரனை கூட்டி வருகிறான். தேங்காய் கோடவுனில் இருந்து நன்றாகக் குடித்ததால் பிரபாகரனுக்கு போதை ஏறுகிறது. அவர் சுய நினைவை இழக்கிறார்.

**அப்போது...**

தேங்காய் கோடவுனின் உட்புறம் சிம்மினி விளக்கின் திரி உயர்ந்தது. மாந்திரீக வித்தை செய்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் கச்சிதமாகச் செய்யப்பட்டிருந்தன.

சுத்தமாகச் சுய நினைவையிழந்த பிரபாகரன் பின்புறமாகச் சரிந்தான்.

பிரபாகரன் ஏராளமாகக் குடித்துவிட்டு சுய நினைவில்லாமல் படுத்துக்கிடப்பதாகக் குட்டப்பன் வந்து சொன்னான்.

"சரி நீ போகலாம். ஒரு விஷயம் சொல்றேன், கேட்டுக்க. இங்கே நடந்த எதையும் யார்கிட்டயும் மூச்சுவிடக்கூடாது. இந்தத் தோப்பைத் தாண்டினதும் எல்லாத்தையும் மறந்திடணும். இந்தா.. இத வச்சுக்க" - சந்துநாயர் தனது இடுப்பில் செருகி வைத்திருந்த நூறு ரூபாய் சுருள் ஒன்றை எடுத்து அவனது கையில் கொடுத்தார்.

குட்டப்பன் அதை வாங்கிக்கொண்டு அங்கிருந்து வெளியேறினான்.

பிரபாகரனுக்கு ஏதோ அபாயம் நேரப் போகிறது என்பது மட்டும் அவனுக்குத் தெரிந்தது. மேற்கொண்டு பிரபாகரனுக்கு என்ன நடந்தால் என்ன? மாமனும் மருமகனும்தானே! எது நடந்தாலும் சரி.

குட்டப்பன் இருட்டினூடாக நடந்துகொண்டிருந்தான்.

ஜயந்தனும் சந்துநாயரும் சேர்ந்து பிரபாகரனை அறைக்குள் கொண்டுவந்து படுக்கவைத்தார்கள். அதன் பிறகு

**எழுதுவது சிவன்**

கோவிந்தனைப் பார்த்துச் சைகை செய்தனர்.

ஒருசில நிமிடங்களுக்குள் பிரபாகரனது உடம்புக்குள் கோவிந்தன் புகுந்துகொண்டான்.

வெகு நேரத்துக்கு பிரபாகரனது உடல் அப்படியே அசைவற்றுப் படுத்திருந்தது.

"ஒரு சந்தேகம் ?" – சந்து நாயர் ஜயந்தனைப் பார்த்துக் கேட்டார்.

" கேளுங்கள்!"

"இவன் பகல் நேரத்தில் எழுந்து நடமாடுவானா?

"நடமாட மாட்டான். சூரியன் மறைந்த பிறகுதான் இவனது நடவடிக்கைகளே ஆரம்பமாகும். சுருக்கமாகச் சொன்னால் இனிமேல் இவன் கோவிந்தனேதான். இன்னும் தெளிவாகச் சொன்னால் இனிமேல் இவன் ஒரு ரஷஸ்."

"இவனை இப்படியே விட்டுட வேண்டியதுதானா?"

"தேவையில்லை. நம்மளோட நோக்கம் நிறைவேறிட்டா, அதுக்குப் பிறகு இவன் இருக்கவேண்டியதில்லை" - ஜயந்தன் கூறினார்.

சற்று நேரத்துக்குப் பிறகு தூக்கத்திலிருந்து விழிப்பவனைப்போல் பிரபாகரன் எழுந்தான்.



" கோவிந்தா!" – ஜயந்தன் அழைத்தார்.

"என்னங்க?" - பிரபாகரன் கேட்டான்.

தங்களது திட்டம் வெற்றி பெற்றுவிட்டதாக ஜயந்தன் கணக்கிட்டார்.

தங்களது நோக்கம் நிறைவேறுவது வரையில் அவன் தங்களது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். எனவே இப்போது அவனை வெளியே விடக்கூடாது என்ற முடிவுக்கு வந்தார் ஜயந்தன். அப்போது அவனது உடம்புக்குள் மது நிறைந்திருந்ததால் நாளை இரவுக்கு மேல்தான் அவனைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

"நாளை இரவுவரை இவன் இங்கேயே கிடக்கட்டும். மற்றதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" - ஜயந்தன் கூறினார்.

சந்து நாயர் அதற்கு ஒப்புக்கொண்டார்.

குமார் மறுநாள் காலையிலேயே கிராமத்துக்குப் புறப்பட்டார். சனி, ஞாயிறு விடுமுறையுடன் இரண்டு அரசாங்க விடுமுறையும் சேர்ந்து கொண்டதுதான் காரணம்.

புறப்படுவதற்கு முன்னால், ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்து ஒருதடவை சோதித்துவிட்டு பூட்டிக்கொண்டு கிளம்பினார். விடுமுறையாக இருந்ததால் வேறு யாரும் பரிசோதனை சாலைக்கு வரவேண்டிய தேவையிருக்காது என்று நினைத்தார். எனவே சாவியைத் தன்னிடமே வைத்துக் கொண்டார்.

மதிய நேரத்தில் குமார் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். வழக்கமாக பிரபாகரன் அவரை எதிர்பார்த்துக் காத்திருப்பான். ஆனால், இன்று அவனைக் காணோம். "ஒருவேளை அவனுக்கு ஏதாவது ஆகியிருக்குமோ?" என்று நினைத்துக் கவலைப்பட்டார்.

பிரபாகரனது வீட்டுக்குப் போய் விசாரித்த போதும் உருப்படியாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. முந்தைய நாள் இரவு வீட்டைவிட்டுப் போனவன் இன்னும் திரும்பவில்லையென்று பிரபாகரனது அம்மா கூறினார்.

கிராமத்திலிருந்து அவன் எதற்காகவும் வெளியே போகவேண்டியது இல்லை என்பது குமாருக்குத் தெரியும். அப்படியே கிளம்புவதாக இருந்தால் காலேஜுக்குத்தான் வருவான். காலேஜுக்கு வந்ததாகவும் தெரியவில்லை.

குமார் தனது வீட்டுக்கு வந்தார்.

மாலை நேரத்தில் மீண்டும் ஒருதடவை பிரபாகரனின் வீட்டுக்குப் போய் விசாரித்தார். இன்னும் வரவில்லையே" என்ற தகவல் கிடைத்தது.

"வேறு எங்குதான் போய்த் தேடுவது?" - என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்ட குமார் யோசனையில் ஆழ்ந்தார்.

டீக்கடைக்குப் போனவர், தனக்குத் தெரிந்த யாராவது வருகிறார்களா என்று பார்த்தார். சிறுவயதில் தன்னுடன் படித்த சேகரன் தெருவில் போய்க் கொண்டிருப்பதைக் கவனித்தார்.

"சேகரா, பிரபாகரனைக் காணோமே. நீ எங்கேயாவது பார்த்தாயா?" - குமார் கேட்டார்.

"நேத்து ராத்திரியில பார்த்தேன்!" - என்று நெற்றியைச் சுளித்தபடி கூறினான் சேகரன்.

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# காரண காரியத்துக்கு அப்பால்...

உலகெங்கிலும் மனிதன் பிறந்ததிலிருந்து எழுப்பிய கேள்வி: ஏன் இந்தத் தூக்கம்? ஏன் இந்தச் சிக்கல்கள்? நான் ஏன் பிறந்தேன்? இந்த உலக அமைப்பின் - பிரபஞ்ச அமைப்பின் சூட்சுமம்தான் என்ன?

அதன் விளைவாகப் பல நாட்டு மக்களும் ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமல், அவர்களுக்குத் தோன்றிய வழிகளில், அவர்கள் அனுபவம் காட்டிய பாதையில் அறிவை வளர்த்தார்கள். இந்தியாவில் தியான மார்க்கம் தோன்றியது. ஜப்பானில் தியானம் வழியே பிறந்த சென் மார்க்கம் - புதிரை விடுவிக்கும் சுய சிந்தனை - தோன்றியது. அரேபியாவில் சூபிகள் எனப்படுவோர் இசையின் மூலமும் நாட்டியங்களின் மூலமும் உணர்வு மூலமுமாக (பக்திப் பாதை) தங்களை எங்கோ இருக்கும் அகண்டை பரம்பொருளுடன் பிணைத்துக் கொண்டனர்.

இவ்வழிகள் அமைதியையும், நெறியையும், மகிழ்வையும் மகாசக்தியின் வலிமையைப் பெற்ற துணிவையும், நம்பிக்கையையும் தந்தன. இதனால் வாழ்க்கை வாழ்வது எளிதாயிற்று. இந்தப் பழைய மார்க்கங்களை நோக்கி இன்றைய மனோதத்துவ ஆராய்ச்சிகள் பல பல்கலைக்கழகங்களில் நடைபெறுகின்றன. அறிஞர்கள், ஏதோ புதையலைக் கண்டெடுத்தாற்போல மகிழ்கிறார்கள். மாணவர்களும் இளைஞர் கூட்டமும் புதிய அனுபவங்களில் ஈடுபடுகின்றனர்.

இது அனுபவ அறிவு. விஞ்ஞானமோ ஆதாரங்களை மேற்கொண்ட அறிவு. விஞ்ஞானத்தில் விஞ்ஞானி தான் வெளியே இருந்து கொண்டு சோதனைகளைச் செய்து உண்மை காண்கிறான். இந்த அனுபவ அறிவிலோ விஞ்ஞானி, தானே ஒரு சோதனைப் பொருளாக மாறி சோதனைகளைத் தன்மீதே ஏற்றிக் கொள்கிறான். இதையே அனுபவம் என்கிறோம். ஆதாரத்தை மட்டுமே நம்பி உண்மை காண்பது போதாது.



அனுபவத்திற்கும் உண்மை காணும் பணியில் மகத்தான பங்கிருக்கிறது என்று அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

சென் மார்க்கத்தில் புத்த பிக்குகளின், விதண்டா 'விவாதக் கதை'கள் வந்தது போல, சூபிகள் மார்க்கத்தில் நம்மைச் சிந்திக்க வைக்கும் நகைச்சுவைக் கதைகள் வருகின்றன. முல்லா நஸ்ருத்தீனின் நகைச்சுவைக் கதைகளையும் செயல்களையும் படித்திருப்பீர்கள். அக் கதைகள் சூபிகளின் நோக்கை விளக்குகிறது.

இதுவல்லாமல் சில சடங்குகளை, சூபிகள் அனுசரிக்கிறார்கள். பனிரெண்டு பேர் கொண்ட இரு கூட்டங்கள் இரண்டு வரிசையில் நின்றுகொண்டு பாடுகின்றனர், ஆடுகின்றனர். சிந்திக்கும் திறனுக்கு அப்பால் செல்ல சில பாடல்களை, ஒலிகளைத் திரும்பத் திரும்ப எழுப்புகிறார்கள்.

திருமதி எம்.எஸ்.தம்மை மறந்து பாடுகிறார். மதுரை சோமு நம்மை எல்லாம் எங்கோ அழைத்துச் செல்கிறார். எங்கு அழைத்துச் செல்கிறார்கள்? கேட்டால், 'நாதப் பிரம்மம்' என்பார்கள். நாதத்தின் இசையின், ஒலியின் பிறப்பிடத்திற்கே போகிறோம். அங்கே நமது இசைக் கலைஞர்கள் ஐக்கியமாகிறார்கள். நாமும் அங்கே ஐக்கியமாகிறோம். அற்புதமான அனுபவம்.

அதேபோன்ற அனுபவம் தான் பல துறைகளிலும் ஏற்படுகிறது; எல்லாம் ஒருவகை ஐக்கியத்திலே முடிகின்றன; அல்லது ஐக்கிய நிலையைத் தொட்டுவிட்டு வருகின்றன.

இதைத்தான் சூபிகளின் சடங்குகள் காட்டுகின்றன. அங்கே மகிழ்வு, ஆராவாரம், கண்ணீர் என்று எல்லா அடிப்படை உணர்வுகளும் வெளிப்படுகின்றன. மனிதன் ஏன் சடங்குகளைச் செய்கிறான் என்று நான் பலமுறை யோசிப்பதுண்டு. ஹார்ட்வார்ட் பேராசிரியர் ஹுஸ்டன் ஸ்மித் தனது 'மனிதனின் மதங்கள்' என்ற புத்தகத்தில் அதற்கான காரணங்களை ஆராய்கிறார்.

சடங்குகளில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. ஒரு நியதி இருக்கிறது. ஏதோ செய்ய வேண்டியதைச் செய்கிறோம் என்ற பாதுகாப்புணர்ச்சி, நம்பிக்கை இருக்கிறது. மேலும் சட்டென்று காரண காரிய அறிவு மூலம் ஒரு விஷயத்தில் மனத்தை ஈடுபடுத்துவது எல்லோராலும் முடியாது. பல செயல்கள் மூலம் பல சடங்குகள் மூலம் நம்மை நாமே நம்ப வைக்கிறோம். சடங்குகள் நம்பிக்கை தரும் ஒரு பாதை. சடங்குகளில் விஷயங்களை உருவகப்படுத்துகிறோம்; பாவனை செய்கிறோம். பாவனை செய்வது நிஜமாகச் செய்வதன் முன்படி. மனத்தை நம்ப வைக்கும் முதற்படி.

சூபிகளின் இந்த ஐக்கிய உணர்வுகளுடன் நஸ்ருத்தீனின் நகைச்சுவைக் கதைகளையும் சேர்த்துப் பார்க்கும்போது அவர்களது வாழ்க்கைத் தத்துவத்தின் முழுமை நமக்குத் தெரியும்.

முல்லா நஸ்ருத்தீன் எதையோ தொலைத்துவிட்டுத் தரையில் தேடிக்கொண்டிருந்தார். "என்ன தொலைத்து விட்டீர்கள் முல்லா?" என்று வழியில் போனவர் கேட்டார். "எனது சாவி" என்றார் முல்லா. வழியில் போனவரும் மண்டி போட்டுக் கொண்டு முல்லாவுடன் சாவியைத் தேடத் துவங்கினார். சிறிது நேரம் கழித்து அடுத்தவர் முல்லாவைப் பார்த்துக் கேட்டார் "எந்த இடத்தில் சாவி தொலைந்தது என்று ஞாபகமிருக்கிறதா?"

"ஏன், என் வீட்டில்தான்."

"சாவியை அங்கே தொலைத்துவிட்டு இங்கே தேடுகிறீர்களே?"

இங்குதான் என் வீட்டைவிட அதிக வெளிச்சம் இருக்கிறது...அதனால்தான் என்றார் முல்லா.

வெளிச்சம் இருக்குமிடத்தில்தான் தேட முடியும் என்கிறார் முல்லா. எதை நமக்குச் சொல்கிறார் அவர்.

முல்லா நஸ்ருத்தீனை எல்லா கீழை நாட்டுத் தத்துவங்களையும் அறிந்து வருமாறு அனுப்பினார் அரசர். முல்லா எல்லா நாடுகளையும் பார்த்துவிட்டு ஊர் திரும்பினார். அரசரிடம் போய் நின்று ஒரே ஒரு வார்த்தையைப் பதிலாகக் கூறினார்: 'கேரட்' என்று. அரசர் விளக்கிக் கூறுமாறு சொல்லவே, முல்லா கூறினார்; "முக்கியமான பகுதி கீழே மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. சிலருக்குத்தான் தெரியும். கறிகாய்த் தோட்டம் பயிர் செய்யும் தோட்டக்காரனைப் போல மேலே பச்சையாயிருக்கும், கீழே ஆரஞ்சு நிறமிருக்கும் என்று. அதை அடைய - எடுக்க - முயற்சிக்காவிட்டால் அழுகிப் போகும். பல கழுதைகள் அதைத் தின்னச் சுற்றிக் கொண்டிருக்கின்றன."

"விதி என்பது என்ன?" என்று ஓர் அறிஞர் முல்லாவைப் பார்த்துக் கேட்டார்.

"முடிவில்லாத சம்பவங்கள்; பின்னிப் பிணைந்து ஒன்றையொன்று பாதிப்பதுதான்" என்றார் முல்லா.

"அது சரியல்ல, நான் காரணத்திலும் அதன் விளைவிலும் - காரண காரிய தத்துவத்தை - நம்புகிறேன்"என்றார் அறிஞர்.

"ரொம்ப சரி" என்றார் முல்லா. தெருவில் ஒரு கூட்டம் போய்க் கொண்டிருந்தது. "அந்த மனிதனை தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்கிறார்கள். அவன் ஏன் செல்கிறான்? யாரோ காசு கொடுத்த காரணத்தினால், அவன் கத்தி வாங்கவும் மற்றவனைக் கொல்லவும் நேர்ந்ததா? அல்லது அவன் கொலை செய்ததைப் பிறர் பார்க்க நேரிட்டதால் தூக்குமேடை செல்கிறானா? அல்லது அவன் கொலை செய்தபோது யாரும் தடுக்காத காரணத்தினாலோ?" என்றார் முல்லா அறிஞரை நோக்கி. நமது காரண காரியம் காட்டும் அறிவுக்கு எல்லையுண்டு. இதை நாம் உணர வேண்டும்.

காரண காரியத்திற்கு மேலே ஒரு பெருஞ் சக்தி இருக்கிறது. "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்று அதையே அறிவுரை வழங்குகிறார் அழகாக வள்ளுவர்.

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 178க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

டாக்டர் ரோகினி முத்ததம்பி, வீ 19 ஜீ 4/ தே. வீ.தி, மாளிகாவத்தை, கொழும்பு - 10.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. அனீஸா. அல் ஆஸாத், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03.
2. நா. விஷ்ணுவர்த்தன், 200, பாடசாலை வீதி, சேனைக் குடியிருப்பு. 01, கல்முனை.
3. ப. கவிநாத், பிரதான வீதி, சித்தாண்டி, மட்டக்களப்பு.
4. பைசுல் அமீனா ஜலீல், 61/1A/1, மகா புத்கமுவ, முல்லேரியாவ.
5. இந்திராணி பத்மறாஜன் 86/6, டன்பார் வீதி, ஹட்டன்.
6. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா மன்னார்.
7. ஆர். கார்த்திகேசு, 3 3/1. 42ஆவது ஒழுங்கை கொழும்பு - 06
8. ஏ. வாசவி, இல. 620, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
9. சீ. தங்கவடிவேல், 91 பயினியர் வீதி, மட்டக்களப்பு.
10. மரியம் ரொஸ்மின் ஜெமில், 390A, செமனரிவத்த ரோட் தென்னக்கும்புர, கண்டி.

## குறுக்கெழுத்துப் போட்டி 180

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | ■ | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | ■ | 17 | ■ |
| ■ | 20 | ■ | 22 | 23 | 24 |
| 25 | ■ | 27 | 28 | ■ | 30 |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1.திருக்குறளிலுள்ள அதிகாரமொன்று.
7.பெண் என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
11.வேதம் என்றும் கூறலாம் (திரும்பியுள்ளது).
13.எறும்பினங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
22.ஏழுவகைப் பெண்களில் 25 வயதுடையவள். (குழம்பியுள்ளது)
27.உடற்கலங்கள் இதனாலேயே ஆக்கப்பட்டுள்ளன. மிகச் சிறியது என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)
31.முறம் என்ற சொல்லின் ஒத்த கருத்து.
35.போதை தருவது (திரும்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1.நீராகாரம் என்றும் கூறலாம்.
2.வாழ்வில் உயர்வுபெற இதுவும் அவசியம். (குழம்பியுள்ளது).
3.ஏழ்மை என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
6.மிருகங்களில் ஒன்று (தலைகீழ்)
11.அதிகாலைப் பொழுது என்றும் பொருள் (தலைகீழ்)
22.அக்கினி அல்லது குதிரை என்றும் கூறலாம் (தலைகீழ்)
24.வயது என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
25.இலைகள் மீது காணப்படும் சொறிவை ஏற்படுத்தும் தன்மை (தலைகீழ்)
27.புழு என்று பொருள்படும் (தலைகீழ்).

## குறுக்கெழுத்துப் போட்டி 178 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தீ [1] | ர [2] | வா [3] | ணி [4] | ■ | ம் [6] |
| ற் [7] | மா [8] | ■ | தி [10] | ங் [11] | யு [12] |
| த் [13] | தி [14] | அ [15] | ■ | வி [17] | செ [18] |
| தி [19] | ■ | ங் [21] | க [22] | தை [23] | ■ |
| ■ | ள் [26] | தி [27] | ர [28] | ■ | தீ [30] |
| ன் [31] | தெ [32] | ■ | வு [34] | க [35] | ம [36] |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 08.08.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-180
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்



- வழங்குவது ராஹில்

## எந்நன்றி கொன்றார்க்கும்...

கடலலை சில அடிகள் நிமிரும்போது...

பூமி சில நொடிகள் குலுங்கும் போது...

காற்று சிறிது கோபம் செய்யும்போது...

வானம் அவிழ்ந்து விழ மேகத்திரவத்தால் பூமி மூச்சுத்திணறும் போது, உன் சுவாசம் உதிர்ந்து விடுகிறது.

இயற்கை தன் சமநிலையை மறக்கும் போது மரணங்களின் பட்டியல் நீள்கின்றது.

அப்பொழுதுதான் கடவுள் நாமமே உனக்குள் இருந்து எட்டிப் பார்க்கின்றது.

நீ புன்னகைச் சிகரத்தில் நின்றபோது...

இன்ப வானில் நீ சிறகு செய்தபோது உன்னை உனக்கே ஞாபகமில்லை.

சிரிப்புச் சேமித்தாய் - பாவங்களின் இலாபக் கணக்கிலிருந்து.

மகிழ்ச்சி வளர்த்தாய் - தீமை நீரூற்றி.

உனக்குத் தரப்பட்ட சின்ன ஆயுளை நீ நீளமாக்கியவன் போல்...

மரணம் என்ற முற்றுப்புள்ளியை நீ சிதைத்தவன் போல்...

உன் வார்த்தைகளைக் கத்திகளாக்கினாய்.

உன் செயல்களில் நஞ்சு ஊற்றினாய்.

உன் வாழ்க்கை ஆழமான ஆணி வேர் என்று உனக்குள் ஒப்பந்தமிட்டாய்.

பிறரைக் கைகுலுக்கும் போது அவனுடைய மோதிரம் கிடைக்குமா என்றுதான் உன் மனம் முனகும்.

பிறரின் தலை தடவும்போது விழிகளைப் பிடுங்கலாமா என்றுதான் நீ தீர்ப்புச் செய்வாய்.

உன் உணர்வுகளிடம் முட்களை மட்டுமே அறிமுகப்படுத்தினாய்.

உன் கனவுகள் உன்னைப் பற்றி மட்டுமே பேசின.

உனது இதயத்தைச் சுற்றி மின்சார முள்வேலி வளர்த்திருந்தாய். உனக்குள்ளே அத்துமீறி அன்பு நுழைந்து விடாமல் இருப்பதற்காக!

உன் பாவங்கள் மலைபோல் உயர்ந்தா, நீ பள்ளத்தில் விழும் வரை.

ஆலயங்கள் வெறுங் கட்டிடங்கள் உனக்கு.

கோயில்கள் நீ பொழுதுபோக்கும் இடங்கள்.

மசூதிகள் நீ களைப்பாறுகின்ற நிழல்கள்.

உன் உயிரை ஊட்டியவனுக்கு - ஐம்புலன்கள் தந்து குறையில்லாமல் உன்னைச் செய்தவனுக்கு நீ நன்றி கொன்றாய்.

நீ உள்ளிழுக்கும் மூச்சும், நீ வெளிவிடும் மூச்சும் அவன் தந்த பிச்சை என்பதை உன் வாழ்க்கையிலிருந்து அகற்றிவிட்டாய்.

இயற்கை உனக்குச் சிநேகமாக வேண்டுமா?

இறைவனை நீ உயிரால் வணங்கு!

நீ இறைவனைவிட்டு விலகும்போது இயற்கை எச்சரிக்கிறது.

# முயற்சியின் பயன்

**அன்று** திங்கட்கிழமை. ஜியாத் வீட்டில் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். நேரம் ஒன்பதைத் தாண்டியும் அவன் எழுந்திருக்கவில்லை. அவனது தந்தை அவனருகில் சென்று “தம்பி எழுந்திரு...நேரம் ஒன்பதாகிவிட்டது” என்று தட்டி எழுப்பியதுதான் தாமதம். சற்றென்று எழுந்து என்ன?...ஒன்பது மணியாகி விட்டதா?...என்று ஏக்கத்துடன் கேட்டுக் கொண்டு குளியலறைப் பக்கமாய் ஓடினான்.

சற்று நேரம் கழிந்த பின்னர் குளியலறையை விட்டு வெளியே வந்தவன் “என்னப்பா, நீங்க...நேரத்தோடு எழுப்பி இருக்கக் கூடாதா? எட்டு மணிக்கு வரச் சொன்னவர். இப்ப நேரம் ஒன்பதரையாகி விட்டது. என்ன சொல்லப் போறாரோ தெரியல்ல...ம்...நடக்கிறது நடக்கட்டும்...எல்லாம் விதியின் விளையாட்டு” என்று சொல்லிக் கொண்டே சட்டையை மாட்டிக் கொண்டு அவசர அவசரமாகப் பயிலையும் எடுத்துக் கொண்டு சமீர் அன்ட் சன்ஸ் நிறுவனத்திற்கு விறு விறுவென்று வேகமாய் நடந்து சென்றான். அங்கு நடக்கவிருக்கும் சம்பவத்தை அவன் அறிவானா? பாவம் ஏதோ உயர்தரம் படிச்சுப்போட்டு சும்மா இருக்கின்ற பயலிடம் வேலைக்காக இன்டர்வியூக்கு வரச் சொன்னால் கேட்கவா வேண்டும்.

சமீர் அன்ட் சன்ஸை அடைந்த அவன், காவலாளியிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அவசர அவசரமாய் மெனேஜர் இருக்கும் அறையை அடைந்தான். அங்கோ மெனேஜர் தனது இருக்கையில் அமர்ந்த வண்ணம் ஏதோ யோசித்துக் கொண்டிருந்ததை கண்ணாடி ஊடாகப் பார்த்த ஜியாத், அவ்விடத்திலேயே சற்று தாமதித்து விட்டு கதவைத் தட்டிக் கொண்டு “மே ஐ கம் இன் சார்” என்று கூறி மெனேஜரின் பதிலை எதிர்பார்த்திருந்த அவனுக்கு “யெஸ், கம் இன்” என்று மெனேஜர் கூறியதுதான் தாமதம் அடுத்த விநாடியே மெனேஜரின் அறைக்குள் நுழைந்தான் ஜியாத்.

மெனேஜர், “பிளீஸ் சிட்டவுன்” என்று கூறியதும் ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டான் ஜியாத். மெனேஜர் பேச ஆரம்பித்தார். என்ன ஜியாத் இவ்வளவு நேரம் என்ன செஞ்சீங்க? “வட் ஆர் யூ கெப்பன்” என்று ஜியாதைப் பார்த்துக் கேட்டவுடன், ஜியாத் நான் தூங்கிட்டன் சார். நேரம் போனதும் தெரியல்ல. என்னை மன்னிச்சிடுங்க சார் என்று கூறினான். ஆனால் மெனேஜரோ “ஐ ஆம் வெரி சாரி” ஜியாத். உங்கட வேலைய வேறொரு பையனுக்குக் கொடுத்துட்டன். “யூ அன் வெரி லேட்” என்று கூறி எழுந்தார். ஜியாத்தும் “இட்ஸ் ஓல் ரைட் சார்” என்று கூறி எழுந்தான். அவனின் மனதிற்கோ மிகவும் வருத்தமாய் இருந்தது. அவனின் உதடுகளே அவனுக்கு ஆறுதல் கூறின.

ஆனாலும் எழுந்து சென்ற அவனது கால்கள் போன போக்கிலே அவன் போனான். அவனது தந்தை கூலி வேலைக்காக சந்தையை நோக்கி நடக்கையில், தனது மகன் தன்னையறியாமலேயே போய்க் கொண்டிருக்கிறான் என்பதை



அறிந்து கொண்ட அவர், மகனை வீட்டிற்கு அழைத்து வந்தார். அவனை அமர வைத்து ஆறுதல் கூறினார். “இந்த வேலை போனா என்னடா...இந்த வேலை இல்லாமல் வாழ முடியாதாடா...உனக்கு நான் இருக்கேன்; என்னோடு சேர்த்து கடவுள் இருக்கிறார். பிறகு உனக்கு என்ன கவலை இருக்கி...நீ எந்த கவலையும் படத் தேவையில்லை. நீ நல்லா படிக்கனும்., நீ யாருட காலுலயும் விழத் தேவையில்லை. நீ ஒரு டாக்குதரா வரனும் அதை நான் என் கண்ணால பாக்கனும்டா. அதுக்காக நான் கூலி வேலையாவது பார்த்து உன்னை படிப்பிக்கன்டா என்று ஜியாத்தின் தந்தை கண்ணீர் பெருகக் கூறினார். ஆனால் ஜியாத் “என்னப்பா...நீங்க மட்டும் கூலி வேலைக்குப் போப்போரீங்களா...முடியாது. உங்களோட நானும் வர்றேன். உங்கட சுகத்துல மட்டும் தானா நான் பங்கெடுக்குறது. உங்கட துக்கத்துலயும் நான் பங்கெடுப்பன் என்பதை மறந்திடாதீங்க” என்று கூறி தந்தையின் சம்மதத்தையும் பெற்றுக் கொண்டான்.

அடுத்த நாள் விடியற்காலை தந்தையும் மகனுமாக இருவரும் எழுந்து இறைவனைத் தொழுது விட்டு காலையுணவையும் ஒன்றாக சேர்ந்து சாப்பிட்டுவிட்டு சந்தைப் பக்கமாக ஏதாவது வேலை இருக்குமா என்று பார்ப்பதற்காக சென்றனர். அப்போது அங்கே நின்ற ஒரு முதலாளி “ஜியாதைப் பார்த்து தம்பி இந்த அரிசி மூட்டைகளை கொஞ்சம் தூக்கித் தர்றியாப்பா உனக்கு நூறு ரூபாய் தருகிறேன்” என்று கூறினார். இதனைக் கேட்ட அவனது தந்தை அடக் கடவுளே! எனது மகன் மூட்டைத் தூக்குவதா? என்று மனதை நொந்து கொண்டு ஜியாதை பார்த்து இதை நான் தூக்கிக் கொடுக்கிறேன். நீ இங்கேயே இரு என்று கூறினார். ஆனால் ஜியாதோ, இல்லை அப்பா இதை நானே தூக்குகிறேன் என்று கூறி மூட்டைகளை தூக்க ஆரம்பித்தான். தான் செல்லமாக வளர்த்த மகன் மூட்டை தூக்குகிறானே! என்று மனம் சோர்ந்து கண்ணீர் பெருக மகனின் நிலையைக் கண்டு வருந்தினார். இப்படியாக தந்தையும் மகனும் பல நாட்கள், பல மாதங்கள் கூலித் தொழிலாளிகளாகவே காணப்பட்டனர்.

ஒரு நாள் அவனது தந்தை நெஞ்சுவலி என்று சொன்னவர் நாட்கள் செல்லச் செல்ல படுத்த படுக்கையானார். வைத்தியர்களும் கை விரித்து விட்டனர். ஜியாத்துக்கு எல்லாமே அவர்தான். தனது ஆறாவது வயதில் தாயை இழந்த அவனை வளர்த்து ஆளாக்கியவர் அவரே. மிகவும் செல்லமாக வளர்ந்த அவனை நன்றாக படிக்க வைத்தார். அவனும் நன்றாகத்தான் படித்தான். க.பொ.த.(சா.த.) பரீட்சையில் மாவட்டத்தில் முதலாமிடம் பெற்றவன் அவன். ஆனால் விதியோ? வியாதியோ? தெரியவில்லை மலேரியா எனும் வடிவில் அவனை ஆட்கொண்டதால், அவனால் க.பொ.த.(உ.த.) பரீட்சையை எழுத முடியவில்லை. தற்போதுதான் அதற்கான பரீட்சை எழுதினான். பெறுபேறு தெரிய இன்னும் நான்கு மாதங்கள் காத்திருக்க வேண்டும். அதற்குள் அவனது ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்ளத்தானே வேண்டும் என்பதனால் தனது இரு கைகளாலுமே வேலைகள் செய்து உழைத்து தந்தையையும் பராமரித்து வந்தான். நான்கு மாதங்கள் நான்கு வாரங்களாய் உருண்டோடின. பெறுபேறும் கிடைத்து விட்டது. அவ்வூரிலேயே க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்ற முதல் மாணவனாக ஜியாத் திகழ்ந்தான். அவன் இதனை தன் தந்தையிடம் கூறினான். தந்தையின் கண்களிலிருந்து இரு சொட்டு கண்ணீர் மாத்திரமே வெளியானது. அதுதான் அவருடைய இறுதிக் கண்ணீருடன் கூடிய ஆனந்தக் கண்ணீர். அந்த நிமிடமே அவர் இறையடி சேர்ந்தார். அவனால் தந்தையின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த சோக நிகழ்விலிருந்து மீள பல நாட்களாயின. அப்பாவின் ஆசையைத் தன் இலட்சியமாகக் கொண்டு படித்தான். இறைவனின் அருளாலும் அவனது நண்பனாகிய முஜீபின் உதவியாலும் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத் துறை போனான், படித்தான், முயற்சித்தான். வைத்தியராய் வெளியானான்.

இன்றும் அவன் இந்நிலைக்கு காரணமாய் அமைந்த அவனது இரு உழைத்த கரங்களையும் எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறான்.

இன்றைய நிலையில் அவனுக்கு யாருமில்லை. ஒரு ஜீவனை தவிர. அவன் தான் முஜீப். தனது வாழ்க்கையில் தன் தந்தைக்கு அடுத்ததாக முக்கியத்துவம், அன்பு செலுத்துவது முஜீபுக்கே. முஜீபும் ஜியாத்தும் அன்றிலிருந்து இன்று வரை இணை பிரியாத் தோழர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். வாழ்ந்தும் வருவார்கள்...


*(யாவும் கற்பனை)*

# முதல் காதலே...

**எளிமையான** அலங்காரத்தில் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு ஆர்யா கம்பனிக்குச் சென்றான். வழக்கம் போல கம்பனி வாசலிலே தனது நண்பர்களான மிதுன், சந்தோஷ் ஆகியோரைக் கண்டதும் கம்பனி வாசலிலே சமா வைத்து பேசிக் கொண்டு இருந்தான். திடீரென கம்பனி வாசலின் உள்ளே மேரி என்ற பெண் நுழைந்ததும் ஆர்யா மௌனமாகி நண்பர்களையும் மறந்தவனாகி அவன் அவளையே பார்த்தவண்ணம் தன் எண்ணங்களை அலையவிட்டான். அதைப் பார்த்த நண்பர்கள் எதுவும் பேசாமல் செல்ல, ஆர்யாவும் அவளைத் தொடர்ந்து கம்பனிக்குள் சென்றான்.

இவ்வாறு வழக்கமாக ஆர்யா கம்பனிக்கு வருவதும் மேரியைப் பார்ப்பதுமாக தன்னுடைய வாழ்நாளைப் போக்கிக் கொண்டு இருந்தான். அவனின் ஆசைகளை அடக்கமுடியாது, தன் நினைவுகளையும், கனவுகளையும் கற்பனைகளையும் கவிதையாக புனைந்து இவற்றை தனது நண்பர்களிடம் தெரியப்படுத்தி, நான் இதை மேரியிடம் கொடுக்கப் போகிறேன். நான் அவளைக் காதலிக்கிறேன் என்று கூறி தன் நண்பர்களையே தூது அனுப்ப முயற்சித்தான். ஆனால் ஆர்யாவின் நண்பர்கள் மேரியின் குணாதிசயங்களை ஏற்கனவே தெரிந்து கொண்டவர்கள். அவள் பணவெறிபிடித்தவள். எவரையும் மதியாதவள். அகங்காரமுடையவள் என்று உண்மைகளை கூறி ஆர்யாவை அவளிடம் இருந்து விலக வழி வகுத்தனர். ஆனால் திடீரென கோபம் கொண்ட ஆர்யா, மேரியைப் பற்றி பேச வேண்டாம். அவள் மிகவும் நல்லவள். ஆதங்கம் அற்றவள் என்று கூறி, நண்பர்களையும் தூக்கி எறிந்து விட்டு வேலைக்கும் செல்லாமல் மேரி வரும் வரையும் கம்பனி வாசலில் காத்துக் கிடந்தான். மாலை நேரம் அவள் வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பும் பொழுது அவளை வழி மறித்து, தன் விருப்பத்தை வெளிப்படுத்தும் வாயிலாகத் தான் புனைந்த கவிதை மடலை அவளிடம் நீட்டினான். அதைப் பார்த்த மேரி வியப்புற்று, தன் நட்பை புரியாத ஆர்யாவை கொடிய வார்த்தைகளால் பேசியும் என்னைக் காதலிக்க உனக்கு என்ன தகுதி என்றும் கூறி தனக்கு லண்டனில் மாப்பிள்ளை பார்த்திருப்பதாகவும் அவர் எஞ்ஜினியராக இருப்பதாகவும் கூறி ஆர்யாவை அவமானப்படுத்தி தனது பணத்திமிரையும் அந்தஸ்தையும் காட்டி என்னைக் காதலிப்பதற்கு உனக்கு எந்த தகுதியும் இல்லை எனக் கூறி அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

இதை மௌனமாக நின்று கேட்ட ஆர்யாவின் மனதில் 5 வருடங்களின் முன் நடந்த நிகழ்வுகள் அவனைத் தீண்டியது.



-வி.முகிலன், நெடுந்தீவு.

அப்போது அவனின் மனதில் ஜனா என்ற பெண் சிறகடித்தாள். ஜனா ஆர்யாவைக் காதலித்ததும் ஆர்யா ஜனாவை காதலித்ததும் உண்மை. ஆனால் ஆர்யாவோ அவளோடு நெருங்கிப் பழகிய பின்பே அவளின் குடும்பம் வறுமை கோட்டின் வாழ்வதையும் அவளின் தந்தையின் முரட்டுத்தனத்தையும் அறிந்து கொண்டதனால், ஜனாவின் நல்ல குணங்களை தூக்கி எறிந்து விட்டு அவளையும் ஏமாற்றி இந்த ஊருக்கு வேலை தேடி வந்ததையும் எண்ணி மனம் வருந்தி தனியாய் நின்று கண்ணீர் வடித்தான்.

இவ்வாறு ஆர்யா இரண்டு பக்கமும் இன்னல்களைச் சந்தித்து, போதைக்கு அடிமையாகி தன்னைத் தானே வருத்திக் கொண்டு வீதியில் அலையும் நாய் போல நிர்க்கதியாய்த் திரிந்தான். இதனால் இவன் வேலைக்குப் போகாது தானாக கம்பனிக்குச் செல்வதை நிறுத்திவிட்டு வீதியிலே குடியேறினான்.

இந்நிலையில் மேரியின் திருமணப் பத்திரிகையுடன் நண்பர்கள் ஆர்யாவைச் சந்தித்து ஆர்யாவை அழைத்துச் சென்று அறிவுரைகள் கூறியதும் அவற்றை உணர்ந்து கொண்ட ஆர்யா, தன் தவறை தானே சுட்டிக்காட்டி நண்பர்களிடம் மன்னிப்புக் கேட்டு தன் பழைய கதைகளையும் கூறியதும், நண்பர்கள் அதனைப் புரிந்து கொண்டனர்.

மறுநாள் காலையில் ஆர்யாவின் நண்பர்கள் ஆர்யாவைக் கூட்டிக் கொண்டு ஜனாவின் ஊருக்குச் சென்று அவளை விசாரித்து அவளின் வீட்டைச் சென்றடைந்தனர். ஜனாவோ ஆர்யாவின் நினைவுகளுடன் இவனுக்காகவே எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஜனாவைக் கண்ட ஆர்யா சந்தோசம் பொங்கி, முதல் காதலின் புனிதத்தையும் ஏழையின் மனவலிமையையும் உணர்ந்து ஜனாவிடம் மன்னிப்பு கேட்டு, அவளைக் கட்டித்தழுவி முத்தம் கொடுத்தான். இதைப்பார்த்த நண்பர்களின் கண்களில் இருந்து ஆனந்தக்கண்ணீர் வடிந்தன. தூது போக மறுத்த நண்பர்களே திருமண புறோக்கர்களானதைப் புரிந்து கொண்டு, நாம் நேசிப்பவர்களைவிட நம்மை நேசிப்பவர்களையே நாம் அதிகம் நேசிக்க வேண்டும் என்று உணர்ந்தவனாக தனது வாழ்க்கையை ஜனாவுடன் ஆரம்பித்தான்.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**பெண்** விடுதலையைப் பற்றி மேடைகளில் முழங்குகின்றவர்களும், பெண் விடுதலைபற்றிப் பேசும்போதெல்லாம் கரகோசம் செய்பவர்களும் அதை வலியுறுத்திக் காட்ட எழுத்தில் பிரசுரிக்கும் அச்சக ஊடகங்களும் இன்று பெரும் செல்வாக்கைப் பெற்றபோதிலும் உண்மையிலேயே அவர்களுடைய சொந்த வாழ்க்கையில் பெண்ணினத்தின் சிறப்பை அறிந்தவர்களா? என்ற கேள்வி எழுமானால் 'இல்லை', என்ற பதிலை அவர்கள் கூறமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் அதை வைத்துக் கொண்டுதான் பிழைப்பை நடத்த வேண்டி இருக்கிறது. சமூகத்தில் செல்வாக்கைப் பெற வேண்டுமானால், இது போன்றதொரு யதார்த்தமற்ற பிரசாரத்தில் அவர்கள் ஈடுபட்டே ஆக வேண்டியுள்ளது. உண்மையை கூறுவதானால்...,

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்**
**திண்மையுண் டாகப் பெறின்"** *- குறள் : 54*

கற்பெனும் திண்மை (மனத்திண்மை) இருக்குமானால் பெண்ணை விட உயர்வானது இவ்வுலகில் எதுவுமே இல்லை.

# மறப்பேனோ அவரை?

தருவது
**கற்பகன்**

**ம**ரகதவல்லியின் தந்தை அவளது சயன அறைக்கு வந்து போனது பற்றி அவள் வெகுவாக ஏதும் சிந்திக்கவில்லை. ஆயினும், முதல் நாள் அவரைத் தேடி வந்தவன் யார் என்பதை அறியமுடியாதபடி எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சந்திப்பில் அவன் அழகும், அவன் குரலில் இருந்த கம்பீரமும் அவளை மெய்மறக்கச் செய்து விட்டதை எண்ணி தனக்குள்ளேயே வெட்கித்த போதிலும், மீண்டும் அவனைக் காண வேண்டும் என்ற அவா அவளை ஓரிடத்தில் நிலைகொள்ள முடியாதவாறு தத்தளிக்க வைத்தது.

கண்களை நித்திரை மயக்கம் கவ்விக் கொண்டிருந்தது. முதல் நாள் இரவு நடுநிசிவரை உறங்காமல் விழித்திருந்ததும், விக்கிரமனின் அழகு, வேறு எவருக்குமே வராத அபாரத் துணிச்சல், அவன் நடந்து கொண்ட விதம் இவையெல்லாம் அவள் மனத்திரையில் திரும்பத்திரும்ப வந்து நித்திரையைக் கெடுத்து விட்டதும் அவளால் மறக்க முடியாத நிகழ்வுகளாகத் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. அன்றைய நாள் முடிவடையும் நேரம் நெருங்க நெருங்க மரகதவல்லியின் மனதில் என்றுமே இல்லாததொரு ஏக்கம் குடிகொள்ளத் தொடங்கியது. 'என்ன இது, இப்படியொரு தடுமாற்றம் எதனால்?' என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தபோது அவளை அறியாமலேயே அவள் மனதிற்குள் நாணம் படரத் தொடங்கியதும், கால்கள் நடை தளர்ந்தன. கண்கள் அவன் வந்த பாதையை அடிக்கடி நோக்க ஆரம்பித்துவிட்டன.

அடிக்கடி மாடிப் படியேறி இறங்கினாள். 'நீண்ட தூரத்தில் ஏதோ ஒரு புகை மண்டலம் போல் தெரிகிறதே! இல்லை,இல்லை. புகை மண்டலமாகத் தோன்றினாலும், அதற்கு வாய்ப்பில்லை, கண்ணுக்குத் தென்படாத தூரத்துக்கு நீண்டு கிடக்கும் மண்பாதையில் இப்படியொரு காட்சி இதுவரை தென்பட்டதில்லை. என்னவாத இருக்கும்? என்ற சிந்தனை செய்வதற்கு நேரமிருக்கவில்லை. ப க ீ ர் என்றொரு பய உணர்வு. அதோடு மனதுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக் குதூகலம். இவைகள் ஒரே நேரத்தில் தோன்றி மறைய கண்கள் மட்டும் அவள் எதிர்பார்த்திருந்த பாதையை விட்டு விலக மறுத்தது.



'ஆமாம், அதே இரட்டைக் குதிரைகள் பூட்டப்பட்ட வண்டி; அந்த வண்டியை இத்தனை வேகமாக ஓட்டி வருபவரும் அவரேதான்' அவளால் அவள் கண்களையே நம்ப முடியவில்லை. அவள் எதிர்பார்த்திருந்த இன்பமயமான நேரம் வந்தாகிவிட்டது.

வாயிற் காவலன் ஏன் இன்னும் அவரை உள்ளே வர அனுமதிக்க மறுக்கிறான். சீ இவனை நாளையிலிருந்து வேலை நீக்கம் செய்துவிடவேண்டும் என்றெல்லாம் எண்ணியது அவள் அவசரம். மாடியிலிருந்து இறங்கிப் போய் அவனுக்கு உத்தர விடலாமா? என்று எண்ணியது அவள் மனம். ஆனால், அதற்குள் அவர் தன் கண்களிலிருந்து மறைந்து விட்டால் என்ன செய்வது? அனல் மேல் புழுவாய்த் துடித்தது மனம்.

மரகதவல்லியின் மனத்துடிப்பு அவன் தன் கண்களைவிட்டு மறைந்து விடுவான் என்பது மட்டுமல்ல, அவனை நேராகச் சந்திப்பதற்கு அப்பா இருந்தால் வாய்ப்புக் கிடைக்காதே! 'வண்டியில் இருந்து அவன் இறங்கிவரும் பொழுது என்னைக் கண்டுவிட்டால், அவனிடம் என் காதலை வெளிப்படுத்த ஏதாவது அடையாளமாவது கொடுத்துவிடலாமே' என்ற ஆவலால், அவள் அந்த வண்டியையே கண்கொள்ளாது பார்த்துக் கொண்டிருக்கையில், என்ன ஆச்சரியம். வண்டியை விட்டிறங்கிய விக்கிரமன் மாளிகையை நோக்கி நடப்பான் என்று நினைத்த மரகதவல்லிக்கு ஏதோ தன்னை அறியாத ஒரு கலக்கம்.

வண்டியை விட்டிறங்கிய விக்கிரமன் யாருக்காகவோ காத்து நிற்கிறான் போலிருக்கிறதே! யாராக இருக்கும் என்ற எண்ணம் அவள் மனதில் தோன்றியதும் கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டாள் மரகதவல்லி. விக்கிரமனின் தரிசனத்துக்காகக் காத்திருந்தவளுக்கு ஏன் இப்படி ஒரு குழப்பம். குழப்பம் தோன்றி மறைவதற்குள் வண்டியை விட்டிறங்கிய அந்த அழகு தேவதை கண்ணில் பட்டதுதான் தாமதம், அவள் இதயம் சுக்கு நூறாக வெடித்துப் பறந்தது போலிருந்தது. அவள் கண்கள் இருண்டது போல் ஒரு பிரமை அவளை மூடிக் கொண்டிருப்பதை உணர்ந்த மரகதவல்லி மெதுவாக ஒரு கையால் தன் இடப்பக்கத்து மார்பைப் பொத்தியவாறு அவளது சயன அறையை நோக்கி நகரத் தொடங்கினாள்.

***"உறாஅ தவர்போற் சொலினும் செறாஅர் சொல் ஒல்லை உணரப் படும்."***

*அதி – 110.*
*குறள் – 1096.*

# சிந்தியா பதில்கள்

✍ **மாவிலாறு விவகாரத்தில் தமிழ் எம்.பி.க்கள் வாய் திறக்காமல் இருப்பது சரிதானா?**
***-எஸ்.கோணாமலை, அன்புவழிபுரம்.***

ஆயுதம் ஏந்தியிருக்கும் தரப்புகள் களத்தில் இறங்கி இருக்கையில், ஜனநாயகம் திரும்பும் வரை அமைதி காக்கிறார்களோ என்னவோ?

✍ **சர்வகட்சி மாநாட்டிலிருந்து மேலக மக்கள் முன்னணி விலகிக் கொள்வதாக அக்கட்சியின் தலைவர் அறிவித்துவிட்டது எதைக் காட்டுகிறது?**
***-க.மதன்ராஜ், அவிசாவெல.***

அரசியல் வரைபைத் தயாரிக்கும் புத்தி ஜீவிகள் குழுவில் போதுமான தமிழர் பிரதிநிதித்துவம் இல்லை என்பது நியாயம் தான். ஆனால் அதை சர்வகட்சி மாநாட்டிலேயே சுட்டிக்காட்டிப் போராடியிருந்தால் ஒரு சபாஷ் போட்டிருக்கலாம். இப்போது வெளியில் நின்று கத்துவது யாருடைய காதுகளுக்கும் கேட்காது. மக்களுக்குக் கேட்கும் என்று நினைத்துக் கொண்டு கத்துவது அரசியல் லாபம் தேடும் முயற்சியாகத்தான் பார்க்கப்படுகிறது.

✍ **இலங்கையில் தமிழர்களுக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை என்று ஜே.வி.பி, ஜா.ஹெ.உ. ஆகிய கட்சிகள் கூறுவது சின்னப் பிள்ளைத்தனமா இல்லையா?...**
***-ம.விநாயகமூர்த்தி, செட்டிகுளம்.***

அவர்கள் சீக்கிரம் குணமடைய கூட்டுப் பிரார்த்தனை செய்வோம்.

✍ **கருணாவும் தற்கொலை நடத்துவதற்குத் தயாராகி விட்டாரே! இதை கீரைக் கடைக்கு எதிர்க்கடை என்று சொல்லலாமா?**
***-செ.பாவரசன், மட்டக்களப்பு.***

வவுணதீவில் நடந்ததைக் கொண்டு ஒரு முடிவுக்கு வரமுடியாது. எதிர்காலத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பது நல்லது. கொலை செய்ய வருபவனிடம் மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியாது என்பதை கருணா புரிந்து கொண்டு விட்டார். பல பேருக்கு புரியமாட்டேன் என்கிறது.

✍ **ரோம் நகரம் தீப்பிடித்து எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்ததுபோல் நமது ஜனாதிபதி அதீத மௌனம் காக்கிறாரே...?**
***-சிவகடாட்சம், யாழ்ப்பாணம்.***

சர்வ அதிகாரமுடைய ஜனாதிபதியை சிறிய கட்சிகள் கூட எச்சரிக்கின்ற அளவில் அரசின் பலம் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

✍ **கண்காணிப்புக் குழுவினர் எதிர் காலத்தில் என்ன செய்யப்போகிறார்கள்?**
***-கா.மகாலக்ஷ்மி, வவுனியா.***

இறந்த காலத்தில் என்ன செய்தார்களோ அதைத்தான் எதிர்காலத்திலும் செய்யப் போகிறார்கள். ப்ளீஸ்...அவர்களிடமிருந்து புதிதாக எதையும் எதிர்பார்க்காதீர்கள்.


✍ **எரிபொருள் விலையேற்றங்கள் இப்படி தாறுமாறாக அதிகரித்துக் கொண்டிருக்கிறதே?**
***-பி.பரனீதரன், தெமட்டகொட.***

மத்திய கிழக்கு நாடுகளில் நிலைமை மோசமடைய மோசமடைய எரிபொருட்களின் சந்தையிலும் கேள்வி அதிகரிக்கத்தான் செய்யும்.

✍ **தென் ஆபிரிக்காவுக்கு எதிராக இலங்கை அணியினர் நிகழ்த்திய உலக சாதனைகள் பற்றி என்ன நினைக்கிறீர்?**
***-ஏ.எம்.அக்ரம், முறக்கொட்டான்சேனை.***

பெருமைப்படக்கூடிய சாதனை. பயங்கரவாதம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இலங்கைத்தீவு சாதனையாளர்களால்தான் உலகத்தின் கவனத்தைத் திருப்பியிருக்கும். மஹேல - சங்கக்கார இருவரின் இணைப் பாட்டத்துக்காகவும், அவர்கள் ஏற்படுத்திய சாதனைகளுக்காகவும் முரசு வாசகர்கள் சார்பில் பாராட்டுக்கள்.

✍ **சிந்தியா... உனக்கும் எனக்கும் சம்திங் சம்திங்...?**



ரவி - த்ரிஷா
சம்திங் சம்திங்

***-கே.பாலமுருகன், கண்டி.***

ஜெயம்ரவி + த்ரிஷா + கலர் + கலக்கல் = பார்க்கலாம்.

✍ **மனித இனத்தைத் தவிர தனது சகாவிற்கு உதவி செய்யும் வேறு உயிரினங்கள் உள்ளனவா?**
***-மஞ்சுளா, வல்வெட்டித்துறை.***

இந்த விடயத்தில் யானையும், எறும்பும் விசேஷமானவை. மனித இனத்தைப் போலவே பிரசவ வேளைகளில் பெண் யானைகள் அம்மா யானைக்கு உதவி புரிகின்றன. எறும்பு ஒன்று இறந்துவிட்டால் எறும்புகள் கனகச்சிதமாக செத்தவீட்டினை நடாத்துகின்றன. அதாவது இறந்த எறும்பை காவிச்சென்று குழிதோண்டிப் புதைக்கின்றன. இவை இயற்கையின் அதிசயங்கள்.

✍ **மதுபானம் - போதைவஸ்து என்ன வித்தியாசம்?**
***-தவசீலன், களுவாஞ்சிக்குடி.***

இரண்டுமே மனித குலத்திற்குச் சாபக் கேடுகள் என்ற பிரதான ஒற்றுமை உண்டு. வித்தியாசம் என்ன என்றால் மதுபானம் மூளையில் உள்ள மூளையத்தின் சமநிலையை குழப்பு வதன் மூலமும் போதைவஸ்து மாயத் தோற்றத்தினை ஏற்படுத்துவதன் மூலமும் சமச்சீரினை குழப்புகின்றன. உளவியலாளர்கள் பின்வருமாறு கூறுகின்றனர். அழகிய இளம் பெண் எதிரே வந்தால் குடிபோதையில் உள்ளவனோ பாலியல் வல்லுறவு மேற்கொள்ள முயற்சிப்பான். போதை வஸ்திற்கு அடிமையானவனோ அப்பெண்ணின் நகைகளை திருடவே முயற்சிப்பான். இதுதான் வித்தியாசம்.

✍ **வாகனங்களைத் சொந்தமாக வைத்திருப்பதுபோல தனி ஒரு நபர் விமானம் ஒன்றினைக் கொள்வனவு செய்து பயன்படுத்தலாமா?**
***-ஜிப்ரி நாசர், பேருவளை.***

உங்களிடம் போதிய பணம் இருந்தால் தாராளமாக ஒன்றல்ல எத்தனை விமானங்களையும் வாங்கிக்கொள்ளலாம். ஆனால் சர்வதேச விமானக் கட்டுப்பாட்டுச் சபை சட்டவிதிகளுக்கு கட்டுப்பட்டே விமானங்களை உபயோகப் படுத்தலாம். பில்கேட்ஸ், சவூதி மன்னர், உட்பட உலகின் செல்வந்தர்கள் பலர் தமது பிரத்தியேக பாவனைக்கு என சொந்தமாக விமானங்களை கொண்டுள்ளனர். நடிகர் கமலஹாசன் கூட விமானம் ஒன்றினை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளாராம்.

✍ **தற்போது திருவிழா நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குரிய கொடிச் சீலையினை செங்குந்த பரம்பரையினர் வருடா வருடம் வழங்குவதாகப் பத்திரிகைகளில் படித்தேன். இதற்கு ஏதாவது காரணங்கள் உண்டா?**
***-அருள்வதனி, நாவலப்பிட்டி.***

அதற்கு வரலாறே உண்டு. 1666 முதல் 1796ஆம் ஆண்டுவரை ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி செய்தபோது, பல இந்து ஆலயங்கள் தகர்த்தழிக்கப்பட்டன. அந்த வகையில் நல்லூர் ஆலயமும் இடிக்கப்படப் போகின்றது என்பதை அறிந்து செங்குந்த சமுதாயத்தினர் அலங்காரக் கந்தனை தூக்கிச்சென்று துணியினால் சுற்றி ஒளித்து வைத்திருந்தனர். இந்தச் சம்பவத்தினை நினைவு கூரும் முகமாகவே அந்த பரம்பரையில் வந்தவர்களால் இன்றும் கொடிச்சீலை வழங்கப்பட்டு வருகின்றது.

✍ **தற்போதைய காலகட்டத்தில் நல்ல வருமானம் தரும் முதலீடு எது எனக் கருதுகின்றீர்கள்?**
***-சிவசங்கர், புங்குடுதீவு.***

சொல்வதற்குக் கஷ்டமாக இருந்தாலும் சொல்கின்றேன். சவப்பெட்டி கடையினை ஆரம்பிப்பதுதான்.

✍ **'ஆல்கெமி' என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?**
***-ஷபீனா சம்சத்.***

இரும்பை தங்கமாக மாற்றும் ரச வாதமே அல்கெமி என்ற சொல்லினால் அழைக்கப்படுகின்றது. ஆனால் இவ்விடயம் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

# இலங்கை கிரிக்கெட் அணியின் உலக சாதனை மஹேல, சங்கக்கார ஜோடி 624 ஓட்டங்கள்

தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணித் தலைவர் மஹேல ஜயவர்தன, உப தலைவர் குமார் சங்கக்கார இருவரும் 03ஆவது விக்கெட்டுக்காக 624 ஓட்டங்களைக் குவித்தனர்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் மற்றும் முதல் தரப் போட்டிகளின் இணைப்பாட்ட சாதனைகள் தகர்க்கப்பட்டன.



புதிய உலக சாதனை படைத்த போது மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார

1997ஆம் ஆண்டு கொழும்பு ஆர். பிரேமதாச அரங்கில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இலங்கை வீரர்களான சனத் ஜயசூரிய, ரொஷான் மஹாநாம ஜோடி 2வது விக்கெட்டுக்காக 576 ஓட்டங்களைப் பெற்றமையே இதுவரை டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய இணைப்பாட்ட சாதனையாக விளங்கியது. அதை மஹேல - சங்கக்கார ஜோடி முறியடித்துள்ளது.

முதல் தரப் போட்டிகளில் 1946,47 ஆம் கிரிக்கெட் பருவத்தில் இந்தியாவின் விஜய் ஹஸாரே - குல் மொஹமட் ஜோடி 577 ஓட்டங்களைப் பெற்றமையே உலக சாதனையாக இருந்தது. ஹால்கர் அணிக்கெதிரான ரஞ்சிக்கிண்ண போட்டியொன்றில் பரோடா அணி சார்பில் அவர்கள் இச்சாதனையை படைத்திருந்தனர். அச்சாதனையையும் மஹேல - சங்கக்கார ஜோடி முறியடித்தது.

கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியின் முதலாவது நாளன்று 2 விக்கெட் இழப்பிற்கு 14 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மஹேல - சங்கக்கார இணைப்பாட்டம் ஆரம்பமாகியது. இவ்விருவரும் இரண்டாவது நாள் ஆட்டநேரம் முழுவதும் துடுப்பெடுத்தாடி இணைப்பாட்டமாக 471 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். 1991 ஆம் ஆண்டில் இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்தின் மார்ட்டின் குரோ - டீன் ஜோன்ஸ் ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக பெற்றிருந்த 467 ஓட்ட இணைப்பாட்ட சாதனையை இரண்டாவது நாள் ஆட்டத்தில் முறியடித்தனர்.

டெஸ்ட் போட்டியின் ஆட்ட நாளொன்றில் விக்கெட் எதுவும் வீழ்த்தப்படாமல் பெறப்பட்ட அதி கூடிய ஓட்ட சாதனையையும் (357) இரண்டாவது நாளில் இவர்கள் முறியடித்தனர். இதற்கு முன் 1957 ஆம் அண்டில் மேற்கிந்தியத் தீவுகளின் கிங்ஸ்டன் மைதானத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் கெரி சோபர்ஸ் - கொன்ராட் ஹன்ட் ஜோடி இதேபோன்று 357 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது நாள் மதிய உணவு இடைவேளையின் பின் வீசப்பட்ட இரண்டாவது ஓவரின் போது எந்தவொரு விக்கெட்டுக்குமான உலக சாதனையையும் இவர்கள் முறியடித்தனர்.

## ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

நிக்கி போயே வீசிய பந்தை விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் தடுக்கத் தவறியதனால் கிடைத்த நான்கு ஓட்டங்கள் மூலம் புதிய உலக சாதனைக்கான ஓட்ட எண்ணிக்கை கடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நடுவர் மார்க் பென்ஸன் 4 ஓட்டங்களுக்கான சமிக்ஞையை காட்டியவுடன் மஹேல - சங்கக்கார ஜோடி கட்டித் தழுவிக்கொள்ள அரங்கிலிருந்த சுமார் 4000 ரசிகர்களிடமிருந்து பலத்த கரகோசம் எழுந்தது.

29 வயதான மஹேல தனது 82 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடினார். 15 டெஸ்ட் சதங்களை பெற்றுள்ள அவர், தனது முதல் முச்சதத்தை இப்போட்டியில் பூர்த்தி செய்தார். 374 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவர் ஆட்டமிழந்தார். 572 பந்துகளில் ஒரு சிக்ஸர் 42 பௌண்டரிகளை அவர் விளாசினார். டெஸ்ட் கிரிக்கெட்டில் 4ஆவது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற இலங்கையர் என்ற பெருமையை மஹேல பெற்றுக் கொண்டார். 1997இல் இந்திய அணிக்கெதிராக சனத் ஜயசூரிய 340 ஓட்டங்களைப் பெற்றமையே இதுவரை இலங்கை வீரர் ஒருவரின் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது.

மஹேல ஜயவர்தன இதற்கு முன் ஆகக்கூடுலாக 242 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

28 வயதான குமார் சங்கக்காரவும் முச்சதம் குவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 287 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் அன்ட்ரூ ஹாலின் பந்துவீச்சில் மார்க் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 61 டெஸ்ட் போட்டிகளில் 4 இரட்டைச் சதங்கள் உட்பட 10 சதங்களைப் பெற்றுள்ளார். சங்கக்கார பெற்ற 187 ஓட்டங்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும். இதற்குமுன் ஆகக்கூடுதலாக 270 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

மஹேல ஜயவர்தன ஆட்டமிழந்ததையடுத்து இலங்கை அணி துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது. அப்போது இலங்கை அணி 5 விக்கெட் இழப்பிற்கு 756 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தென்னாபிரிக்க அணித் தலைவர் அஸ்வேல் பிரின்ஸ் 8 பந்துவீச்சாளர்களைப் பயன்படுத்தினார். ஆனாலும் மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார ஜோடியின் இணைப்பாட்டத்தைத் தகர்க்க தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் மிகவும் சிரமமடைந்தனர்.

அவ்வணி சார்பில் ஸ்டெய்ன் 129 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நெல், ஹால் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 588 ஓட்டங்கள் தேவையான நிலையில் 30ஆம் திகதி மாலை தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

அன்றைய ஆட்ட முடிவின் போது விக்கெட் இழப்பின்றி 43 ஓட்டங்களை அவ்வணி பெற்றிருந்தது. ருடோலப் 24 ஓட்டங்களையும், ஹால் 13 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். நான்காவது நாளாக துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி அன்றைய ஆட்ட முடிவின் போது 4 விக்கட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்று அன்றைய ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. தொடர்ந்து ஐந்தாவது நாளாகத் துடுப்பெடுத்தாட முனைந்த தென்னாபிரிக்க அணி மேலதிக ஒரு ஓட்டத்தைப் பெற்ற போது தனது ஐந்தாவது விக்கெட்டையும் இழந்தது. தொடரை சமன் செய்யும் நோக்கோடு இறுதிவரை போராடிய தென்னாபிரிக்க அணி 157.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 434 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதன் மூலம் ஒரு இன்னிங்ஸாலும் 153 ஓட்டங்களாலும் இலங்கை அணி வெற்றி பெற்றது. 129 ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வுலக சாதனையை இலங்கையணி படைத்துள்ளது. இரண்டு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் இலங்கை அணி 1 - 0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது. இரு நாடுகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

புதிய உலக சாதனை படைத்த மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார ஆகியோருக்கு ஜனசக்தி நிறுவனம் தலா 25 லட்சம் ரூபா பெறுமதியான புத்தம் புதிய கார்களை 30ஆம் திகதி அன்பளிப்பாக வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

## கண்காணிப்புக் குழு...
3ஆம் பக்கத் தொடர்ச்சி....

முயற்சிகளையும் எடுத்தோம். ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் இயக்கத்தின் மீது விதித்த தடையை, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளோடு தொடர்புபடுத்தியிருக்கக் கூடாது. இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி, அதனைக் கண்காணிப்பது மிக முக்கிய நடவடிக்கையாகும். யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளை மாற்றுவது தொடர்பாக புலிகள் இயக்கம் ஒரு தலைபட்ச முடிவுகளை எடுக்க முடியாது. அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் இணக்கத்துடனேயே அதனைச் செய்ய முடியும். இன்று ஏற்பட்டுள்ள தடங்கல் நிலையைத் தவிர்ப்பதற்கு சமாதான ஏற்பாட்டாளர்களென்ற வகையில் நோர்வே நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிலைமை குறித்து நோர்டிக் நாடுகளின் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் அப் பெண் பேச்சாளர் கூறினார்.

## பயங்கரவாதத்திட்டம்...
5ஆம் பக்கத் தொடர்ச்சி....

அதற்குச் சமாந்தரமாக கண்காணிப்பாளர்களின் விடயமும் பேசப்பட்டதாகவும், இவ்விடயத்தில் புலிகள் ஒற்றைப்பிடியில் இருந்ததாகவும் செய்திகள் வெளியாகின. இதைத் தொடர்ந்து 28.07.06 அன்று இலங்கைக்கான பிரித்தானியாவின் பிரதித் தூதுவர் லெஸ்லி கிரேக் வன்னிக்குச் சென்று புலிகளுடன் கலந்துரையாடினார். அவருக்கும் ஏமாற்றமே மிஞ்சியது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் படுதோல்வியில் முடிவடைந்த நிலையில் கண்காணிப்புக் குழுவிலிருந்து பின்லாந்தும், டென்மார்க்கும் தமது பிரதிநிதிகளை திருப்பி அழைத்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ளன. இன்னொரு நாடான சுவீடன் அரசினதும், புலிகளினதும் பதிலுக்காகக் காத்திருப்பதாக அறிவித்தது.

தற்போதிருக்கும் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்ரிக்ஷன் சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் சுவீடன் நாடு, முடிவுகளுக்குச் செல்வதில் தாமதத்தைக் கொண்டபோதும் பின்னர் 31.07.06 அன்று தமது பிரதிநிதிகளை திருப்பி அழைக்கப் போவதாக அறிவித்துவிட்டது.

கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரை டென்மார்க்கைச் சேர்ந்த 11 பேரும், பின்லாந்தைச் சேர்ந்த 11 பேரும், ஐஸ்லாந்தைச் சேர்ந்த 04 பேரும், நோர்வேயைச் சேர்ந்த 16 பேரும், சுவீடனைச் சேர்ந்த 15 பேருமாக மொத்தம் 57 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர். இதில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த 37 பேரை, தத்தமது நாடுகள் திருப்பியழைக்க நேர்ந்ததால் 20 பேர் மட்டுமே எஞ்சுவர். இந்த எண்ணிக்கை வடக்கு - கிழக்கில் கண்காணிப்புப் பணி செய்யப் போதாது. வேண்டுமானால் கொழும்பில் தலைமையகத்தை மட்டும் நடத்தலாம். தற்போது இருக்கும் 57 பேரில் கொழும்பு தலைமையகத்தில் 16 பேரும், கிளிநொச்சிக் காரியாலயத்தில் 02 பேரும், யாழ்ப்பாணத்தில் 05 பேரும், மன்னாரில் 04 பேரும், வவுனியாவில் 05 பேரும், திருமலையில் 06 பேரும், மட்டக்களப்பில் 06 பேரும், அம்பாறையில் 05 பேரும் பணியாற்றுகின்றனர். இதற்கிடையே கடற் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்காக வடக்குக்கு 03 பேரும், கிழக்குக்கு 05 பேருமாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கையே போதாத நிலையில், ஆட் குறைப்புச் செய்யப்படுவதும், புதிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகளை உள்வாங்குவதும், பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கப்போகிறது என்று கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. ஏனெனின் அதற்கு அரசினதும் புலிகளினதும் இணக்கம் தேவை.

இவை இவ்வாறு இருக்க, தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தமும், கண்காணிப்புப் பணியும் செயலிழந்துவிட்ட நிலையில் உள்ளன. இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் என்ன செய்யப்போகிறது என்பதை எதிர்காலம்தான் தெளிவாக்க வேண்டும்.

## உலகத் தமிழர்...
3ஆம் பக்கத் தொடர்ச்சி....

முகவரமைப்பான உலகத் தமிழா இயக்கத்தின் கல்வி, கலாசாரக் கிளை இந்த விளையாட்டுப் போட்டியை ஒழுங்கு செய்திருந்தது. அமெரிக்காவில் வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகள் இயக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் புலிகள் இயக்கமோ அதன் முகவரமைப்புகளோ நிதிசேகரித்தல், பிரசாரம் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாதென்று தடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் கொடியை அவ்விளையாட்டு விழாவில் ஏற்றியமை அமெரிக்காவின் சட்டதிட்டங்களை மீறும் செயலென அமெரிக்க பொலிஸாரிடமும் உள்துறை அமைச்சரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக விளையாட்டுப் போட்டியை ஒழுங்கு செய்தவர்கள் அமெரிக்கப் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். புலிகளின் முகவரமைப்பான உலகத் தமிழர் இயக்கம் அங்கு தடைசெய்யப்படவில்லை. ஆனால் தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் கொடியை ஏற்றியமை அமெரிக்காவின் சட்டத்திட்டங்களைக் கொஞ்சமேனும் மதிக்காத செயலெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் உலகத் தமிழர் இயக்கத்தின் செயற்பாடுகள் பற்றியும் விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
| --- | --- | --- |
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 6, கூட்டெண் - 4

6,15,24 போன்ற திகதியில் பிறந்து திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண் 4 வருமேயானால் சுக்கிரன், இராகு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் பிறரைக் கவரும் பேச்சாளராகவும், தைரியசாலியாகவும், சுதந்திரப் பிரியராகவும் இருப்பர். இவருடைய மனம் பொதுச் சேவை செய்வதிலும், தன் வாழ்க்கையை உயர்த்திக் கொள்வதிலும் அழகான பொருள்களைச் சேர்ப்பதிலும் நாடிச் செல்லும். பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகக் காட்சியளிக்கும் இவர்கள், அலை போன்ற முடி உடையவராகவும் இரட்டை நாடி கொண்டவராகவும் பிறரை மகிழ்வித்து பொருளீட்டக்கூடிய தொழில்களைச் செய்பவராகவும் இருப்பர்.

இவர்களுடைய பெயர் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமையாவிட்டால் வெட்டி வம்பும் வீண்பேச்சும், தனது திறமையெல்லாம் பிறருக்குப் பயன்படும்படியும் வாழ்வர். ஆனால் இவர்கள் பெயர், பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் வீடு, நிலம், வாகனம் போன்றவைகள் அமைந்து, உலகிலுள்ள அனைத்து சுகங்களையும் அனுபவிப்பர். இவர்களுடைய மனம் இன்பகரமான வாழ்வை நோக்கியே செல்லும். பலருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்கள் பலரால் போற்றப்படும் மனிதனாக வாழ்வர்.

மற்றவர்கள் நலமாக வாழ ஓடோடி உழைக்கும் எண்ணம் கொண்டவராகையால் ஆண்டவன் இவர்களைக் கைவிடுவதில்லை. சில நேரங்களில் ஒரு வேலையைப் பாதியில் விட்டுவிட்டு அடுத்த வேலைக்குச் சென்று விடுவர். பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் பெரும் வசதி படைத்தவராக இருந்தாலும் தேவையில்லாத காரியங்களில் இறங்கி மாட்டிக் கொண்டு மனவேதனைப்படுவர். ஜாமின் கையெழுத்துப்போட்டு மாட்டிக்கொள்ளும் வழக்கமும் உண்டு. எந்தப் பொருளையும் ஆராய்ந்து பார்க்கும் தன்மை உடையவர்கள். இவர்கள் மனம் எப்பொழுதும் அழகான பொருள்களை நோக்கியே செல்லும். அழகான வீடு கட்டுதல், அலங்கரித்த கார் வைத்துக்கொள்ளல், வீட்டில் அழகுப் பொருள்களை வைத்தல், அழகான ஆசனங்களைப் பாவித்தல் போன்றவற்றில் நாட்டமுடையவராக இருப்பர்.

இசை, நாட்டியம், விளையாட்டு, சட்டம், சமயம் போன்றவற்றில் விருப்பமுடையவராக விளங்குவர். ஆடம்பரப் பிரியரான இவர்கள் சில நேரங்களில் மிக எளிமையாகத் தோற்றமளிப்பர். வாகனங்களை அடிக்கடி மாற்றுவதன் மூலம் லாபம் பெறும் பாக்கியம் உடையவர்கள். திடமான மனநிலை கொண்ட இவர்கள், ஒருவருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற கடினமாக உழைத்து, வெற்றியைத் தேடிக் கொள்ளுவர். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாததால் இவர்களை மற்றவர்கள் திறந்த மனம் கொண்டவர் என்று அழைப்பர்.

இந்த உலகத்தில் எவ்வளவோ அனுபவிக்க வேண்டியது இருக்கிறது. எவ்வளவோ சுகங்கள் இருக்கிறது என்று கூறுபவர்களும் இவர்களே. கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள், அடிக்கடி கோவிலுக்குப் போகாவிட்டாலும், கடவுளை வெறுப்பவரல்லர். தர்மம் செய்வதிலும், கூன், குருடு, ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு உதவுவதிலும் மிகுந்த ஆர்வமுயடைவர்கள். சோம்பேறியாக இருக்கும் மனிதர்களைக் கண்டாலே இவர்களுக்குப் பிடிக்காது.

சாப்பாட்டுப் பிரியரான இவர்கள், சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டே உண்பர். போக விஷயங்களில் அதிக நாட்டம் கொண்ட இவர்கள், தன் மனக்கட்டுப்பாட்டால் நிதானமாக நடக்க முற்படுவர். பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிடுமேயானால் வாழ்க்கை சிறப்பாக அமையும். பெற்றோர்களால் தேடப்பட்ட சொத்தும் கிடைக்கும்.

### தொழில்

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்குப் பேரம் பேசுவதாலும், ஓரிடத்திலிருந்து பொருளை மற்றோரிடத்திற்கு அனுப்புவதாலும் ஆடம்பரப் பொருட்களாலும் லாபம் கிடைக்கும். வாகனம், காண்ட்ராக்ட், எஜென்சீஸ், அழகு சாதனங்கள், தொழிற்கூடங்கள் இவர்களுக்கு அமைய வாய்ப்புண்டு.

### நோய்

இவர்களுக்கு உடலுறவு சம்பந்தமான, உஷ்ண சம்பந்தமான நோய்களும், வயிற்றுக்கோளாறு, வாயுக்கோளாறு, முட்டு வலி போன்றவைகள் வந்து நீங்கும். சிலருக்கு இளமையிலேயே முடி உதிர்வதும் உண்டு.

### பெயர் அமைக்கும் முறை

சுக்கிரன், ராகு போன்ற ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சுக்கிரன், சூரியன் ஆதிக்கமான 15, 24, 33, 42, 60, 69, 19, 37; 46, 64 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண் - 6, 1
யோகமான திகதிகள் - 6, 15, 24, 1, 10, 19, 28
யோகமான நிறம் - பச்சை, வெளிர் நீலம், மஞ்சள்.
யோகமான மோதிரக்கல் - மரகதம், கோமேதம்
ஆகாத திகதிகள் - 3, 12, 21, 30
ஆகாத நிறம் - ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம், கறுப்பு, சிவப்பு.

அடுத்த வாரம் பிறப்பெண் 6, கூட்டெண் 5 பற்றிப் பார்ப்போம்.

# மகா அலெக்சாந்தர்
## (கி.மு. 356 - 323 நூற்றாண்டு)

# உலகை வியக்க வைத்தவர்கள்



*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

**அவ்வாறு** வாரிசை நியமிக்க அவர் தவறியதுதான் அவரது மரணத்திற்குப் பிறகு, அவருடைய பேரரசு விரைவாக உடைந்து சிதறுண்டு போனதற்குப் பெரிதும் காரணமாகும்.

அலெக்சாந்தர் கவர்ச்சியான தோற்றமுடையவராக இருந்தார். அவர் மிகுந்த சமரச மனப்பான்மையுடன் நடந்து கொண்டார். தாம் தோற்கடித்த பகைவர்களிடம் கருணை காட்டினார். அதேசமயம், அவர் ஆணவம் கொண்டவராகவும், எளிதில் ஆத்திரங்கொள்ளும் முரட்டுக் குணமுடையவராகவும் இருந்தார். ஒரு சமயம் குடிபோதையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில், தம் உயிரை ஒருமுறை காப்பாற்றிய கிளைட்டஸ் என்ற ஆருயிர் நண்பனையே இவர் கொன்று விட்டார்.



நெப்போலியன், ஹிட்லர் ஆகியோரைப் போன்று, அலெக்சாந்தர் தமது தலைமுறையினர் மீதே மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தினார். ஆனால், அவரது குறுகிய காலச் செல்வாக்கு அவர்களுடையதைவிடக் குறைவாகவே இருந்தது. அவர் காலத்தில் பயணம் மற்றும் செய்திப் போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாக இருந்தமையால், உலகின் மிக்க் குறுகிய பகுதிக்கே அவருடைய செல்வாக்குச் சென்றது.

அலெக்சாந்தரின் படையெடுப்புகளினால் ஏற்பட்ட நீண்ட கால விளைவுகளில் மிக முக்கியமானது, கிரேக்க நாகரிக்த்தையும், மத்திய கிழக்கு நாகரிகத்தையும் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமாகவே தொடர் கொள்ளச் செய்து, அதன் வாயிலாக இரு பண்பாடுகளுக்கும் வளமூட்டியதாகும். அலெக்சாந்தரின் அயுட்காலத்திலும், அவரது மறைவுக்குப் பின்பு உனடியாகவும், ஈரான், மெசொப்பொட்டோமியா, சிரியா, ஜூடியா, எகிப்து ஆகிய நாடுகளில் கிரேக்கப் பண்பாடு விரைவாகப் பரவியது. அலெக்சாந்தருக்கு முன்பு, இந்த மண்டலங்களில் கிரேக்கப் பண்பாடு மிகவும் மெதுவாகவே நுழைந்து வந்தது. மேலும், கிரேக்கப் பண்பாட்டை அது எப்போதும் எட்டாதிருந்த இந்தியாவில், மத்திய ஆசியாவிலுங்கூட அலெக்சாந்தர் பரப்பினார். பண்பாட்டுச் செல்வாகசு என்பது எந்தவகையிலும் ஒரு வழிப்பாதை அன்று. அலெக்சாந்தர் வாழ்ந்த காலத்துக்கு அடுத்துப் பிந்திய நூற்றாண்டுகளில், கீழை நாடுகளின் கொள்கைகள் முக்கியமாகச் சமயக் கொள்கைகள் கிரேக்க உலகில் பரவின. பெரும்பாரும் கிரேக்க அம்சங்களும், வலுவான கீழை நாட்டுச் செல்வாக்குகளும் இணைந்த இந்தக் கலப்புப் பண்பாடுதான் இறுதியில் ரோமாபுரியைப் பாதித்தது.

அலெக்சாந்தர் தமது ஆட்சிக் காலத்தின்போது, இருபதுக்கும் அதிகமான புதிய நகரங்களை நிறுவினார். இவற்றுள் மிகவும் புகழ்பெற்றது எகிப்திலுள்ள அலெக்சாண்டிரியாவாகும். இந்த நகரம் விரைவிலேயே உலகின் முன்னணி நகரங்களுள் ஒன்றாகவும், தலைசிறந்த பண்பாட்டுக் கல்வி மையமாவும் முன்னேற்றமடைந்தது. ஆ.்.ப் கானிஸ்தானிலுள்ள ஹீராத், கந்தஹார் போன்ற வேறு சில நகரங்களும் முக்கியமான நகரங்களாக உருவாகின.

ஒட்டுமொத்தமான செல்வாக்கில் அலெக்சாந்தர், நெப்போலியன், ஹிட்லர் ஆகியோர் நெருங்கிய தொடர்புடையவர்களாகத் தோன்றுகிறது. அலெக்சாந்தரின் குறுகியச் செல்வாக்கு, மற்ற இருவருடைய செல்வாக்கை விடக்குறைவு ஆனால் அந்த இருவருடைய செல்வாக்கும், அலெக்சாந்தரின் செல்வாக்கைவிட மிகக் குறைந்த காலமே நீடித்தது. அந்த காரணத்துக்காகவே, அலெக்சாந்தர், மற்ற இருவருக்கும் சற்று முன்னதாக இடம் பெற்றிருக்கிறார்.

**அடுத்த வாரம்**
**சாய் லுன்னின் வியப்புக்கள்**
**தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் பொய்.**
**பொய்யைத் தவிர**
**வேறொன்றுமில்லை.**

**வணக்கமுங்கோ!**

**திருகோணமலையில** தண்ணியைத் தடுத்து வச்சுக்கொண்டு அதை மக்கள் தான் தடுக்கச் சொல்லிச்சினம் எண்டு சொல்லிறதில ஒரு சதத்துக்குக் கூட உண்மை இல்லையெண்டு உலகத்துக்கே தெரிஞ்சு போச்சுது. எங்கட மக்கள் உப்பிடி ஒரு காலமும் செய்யமாட்டினம்; உதுதான் வழியெண்டால் எப்பவோ செய்திருப்பினம். ஆனால் உந்த மாதிரி மனித குலத்துக்கு எதிரான வேலையைச் செய்யமாட்டினம். எதிரி எண்டவனைத் தாக்க ஆயுதம் ஏந்தின தமிழினம், தண்ணியைத் தடுக்கிற கேவலமான வேலையைச் செய்ய மாட்டினம். சரி, ஒரு கதைக்கு கோபத்தில தாபத்தில சனந்தான் அப்புடிச் செய்யுங்கோ எண்டாலும், புலிகள், இஞ்ச பாருங்கோ, நாங்கள் தண்ணியைத் தடுக்கலாம், அதாலை பாதிக்கப்படுறது சாதாரண சனங்கள் தான். அது தவிரவும், அது ஒரு நாகரீகமான காரியமில்லை. இலங்கை அரசு மற்ற எல்லா வளத்தாலையும் தடை செய்திச்சுதெண்டால் தண்ணியைக் குடிச்சு மட்டும் வாழ முடியாது எண்டெல்லாம் எடுத்துச் சொல்லித் தடுத்து அதுக்கு மாற்று வழி ஏதும் இருக்குதோ எண்டு யோசிக்காமல் தண்ணியை தடுத்து வச்சு அதை நம்பி வாழ்ந்த அப்பாவிச் சனங்களை வருத்துவது எண்டது அநியாயத்திலையும் அறியாயமுங்கோ. உது எப்புடி இருக்கு தெரியுமோ? உந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை குழப்பியடிப்பதற்காக, முதலில ஒருவரைச் சுட்டுப் பாத்திச்சினம், பிறகு கைக்குண்டு வெடிக்க வச்சிச்சினம், பிறகு ஒப்பன் பயரிங் குடுத்திச்சினம், பிறகு கிளைமோர் வெடிக்க வச்சிச்சினம், பிறகு கடலில தாக்கிச்சினம், பிறகு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திச்சினம். இவ்வளவு நடத்தியும் அரசாங்கம் பாரிய ஒரு யுத்தத்தை நடத்தமாட்டன் எண்டு இருந்திட்டுது.

இப்ப கடைசியா தண்ணியைத் தடுத்து ஒரு புது வடிவிலான பிரச்சினையைத் தொடங்கியிருக்கினம். இது எதில போய் முடியப்போகுதோ எண்டு பொறுத்திருந்து தான் பார்க்க வேணும். அரசாங்கமும் சொல்லிப் போட்டுது, உந்த மாதிரியான புலிகளின் செயற்பாடுகள், அரசை ரொம்பவும் எரிச்சலூட்டும் விதமாக இருக்காதெண்டும், இதை அரசு பார்த்துக் கொண்டு சும்மா இருக்குதெண்டும், சொல்லியிருக்கு. ஆக, உந்தத் தண்ணி விவகாரத்தில புலிகள் நியாயமாக நடந்து கொள்ளாமல் பிடிவாதம் காட்டுவினமாக இருந்தால் பிரச்சினை வெடிக்குமெண்டது உறுதி எண்டதைத் தவிர வேறொண்டையும் சொல்ல ஏலாது.

இந்தப் புள்ளியில இருந்துதான் பிரச்சினை ஆரம்பமாகுதெண்டால், தண்ணியை திறக்காட்டில் பரவாயில்லை. அனால் புலிகளின்ர பகுதிகளுக்குள்ள இருக்கிற மக்கள் தங்கட உயிரைப் பாதுகாக்க வேணுமெண்டால் அரச கட்டுப்பாட்டுக்குள்ள வாங்கோ. ஏன் எண்டால் இனியொரு யுத்தம் எண்டால் அது அகோரமாக இருக்கும். அதில அரச கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சுத்தம் செய்ய வேண்டியிருப்பதால், அங்கு இருப்போரின் உயிருக்கான உத்தரவாதத்தை அரசால் தரமுடியாது இருக்கும் எண்ட ஒரு அறிவித்தலைப் போடுவினம். அப்புடிப் போட்டால், சனம் புலிகளை விட்டுப் போட்டு ஓடிவருவினம், அந்த நேரத்தில சனத்தை புலிகளும் கை விட்டுப் போடுவினம் எண்டு சில சனம் கதைக்கினம். ஒரு வகையில யோசிச்சால், உந்தத் தண்ணிப் பிரச்சினை எண்டது இன்னொரு பிரச்சினைக்கும் வ்ழிவகுக்கும் போலதான் இருக்கு. இன்னொரு சண்டையை ஆரம்பிக்கப் கங்கணம் கட்டிக் கொண்டு நடக்குமாப் போலை இருக்கு. ஓக்கேயுங்கோ. தண்ணி விவகாரம் என்ன செய்யப் போகுதெண்டதை பொறுமையாகப் பார்க்க வேணுமுங்கோ.

*********

இந்த வாரம் எங்கட கூட்டமைப்பு எம்.பி.மாரின்ர அது தானுங்கோ, இம்சை அரசர்களின்ர தொடர்ச்சியைத் தான் தரவேணும் எண்டு விரும்பினன். இடையில உந்த தண்ணிப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக மாறிட்டுது எண்டதாலை, இருபத்திரெண்டுபேரையும் எடுக்காமல் அதில முக்கியமான பத்துப் பேரை மட்டும் சேர்த்துக் கொள்ளலாம் எண்டு, போன வாரம் ஏழு பேர் கருத்துச் சொல்லிட்டினம். இன்னும் மூன்று பேர் என்ன சொல்லிச்சினம் எண்டு இந்த வாரம் பாப்பம்.

சேவகன் :- இம்சை அரசன் எட்டாம் புலிகேசி அடைக்கலம் தேடிய செல்வ மன்னர் பராக்... பராக்...பராக்...

கா.பூ. :- தூள் பறக்கும் புகழ் கொண்ட அரசே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் இந்தியன் மொடலைப் பற்றி...?

செல்வ :- எந்த மொடலாக இருந்தாலும் பரிசோதனையில்லாமல் மன்னாருக்கு வந்து போக வசதியாக இருந்தால் எல்லா மொடல்களும் நல்லது தான். வாசனைத் தூள்களையும், வசியத் தூள்களையும் யாருடைய கெடுபிடியும் இல்லாமல் கொண்டு வரக்கூடிய மொடல்களை நான் வரவேற்கிறேன், அது எந்த நாட்டு மொடல்களாக இருந்தாலும்...

கா.பூ. :- ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில கண்ணா இருக்கிற அரசே...தூள் பறக்கட்டும் உங்கள் புகழ். வாழ்த்துக்கள்.

சேவகன் :- இம்சை அரசன் ஒன்பதாம் புலிகேசி ஜெயமான ஆனந்த மூர்த்தி மன்னர் பராக்...பராக்...பராக்...

கா.பூ. :- அரசே! இந்திய மொடலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜெய :- மொடல்கள் யாரையும் தனிப்பட்ட ரீதியில் எனக்குத் தெரியாது. தூரத்தில் இருந்து பார்த்தோடு விட்டு விடுவேன். என்ன இந்திய மொடல்கள் என்றால் தமிழ் பேச வசதியாக இருக்கும். ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தாய்மொழியிலேயே விளக்கப்படுத்தலாம். இதற்கு மேலதிகமாக சொல்வதென்றால் திஸ்ஸமகாராமையில் பிடிபட்டது சித்த சுவாதீனமற்ற உள்ளூர் மொடல் என்பதுதான்.

கா.பூ. :- எதிர்காலத்திலாவது மொடல்களின் பார்வை உங்கள் மீது பட்டு நீங்கள் மோட்சம் பெறுவீர்கள். வாழ்த்துக்கள்.

சேவகன் :- இம்சை அரசன் பத்தாம் புலிகேசி அரிதான நேந்திரன் மன்னர் பராக்...பராக்...பராக்...

கா.பூ. :- மன்னர் மன்னா! நீங்கள் இந்தியன் மொடலைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

அரிய :- இந்தியன் மொடலைப் பற்றிச் சொல்ல ஏராளம் இருக்குது. ஆனால் என் அந்தப்புரத்தில் நிலைமை அவ்வளவு சுமுகமாக இல்லை. ஆகையால் எந்த மொடலைப் பற்றியும் சொல்ல முடியவில்லை.

கா.பூ. :- அந்தப்புரத்துத் தொந்தரவுகள் தீர்ந்து அரியமான மன்னர் அரசவைக்கு வரவேண்டும். ஆசி கிட்டட்டும். வாழ்க...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

**03.08.2006 தொடக்கம் 09.08.2006 வரை.**

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கர்க்கடகம் - சூரியன், புதன், சனி. சிங்கம் - செவ்வாய். கன்னி - கேது. துலாம் - வியாழன். மீனம் - இராகு. மிதுனம் - வெள்ளி. சந்திரன் விருச்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் மாற்றம், செலவு மிகுதி, உயர்ந்தோர் நட்பு, மனக்குறை நீங்கும், புதிய முயற்சி, குடும்பப் பாரம், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் கலக்கம், பணச் செலவு, பெரியோர் உதவி, பிரயாணக் கஷ்டம், தேகசுகக் குறைவு, உத்தியோக முயற்சி, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், புதிய முயற்சி, செலவதிகம், குடும்ப நன்மை, சுபகாரிய சிறப்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் பலிதம், பண வரவு, பெரியோர் நன்மை, மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, குடும்பப் பயம், உத்தியோக அச்சம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் பொறுப்பு, செலவு மிகுதி, கடன்படல், மனக்கலக்கம், வெளியார் உதவி, தேகசுகக் குறைவு, குடும்ப மேன்மை, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் பகை, பண விரயம், தூர இடப் பயணம், உறவினர் உபத்திரவம், மனக்கலக்கம், குடும்பப் பகை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் குழப்பம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியசித்தி, பண வரவு, மனமகிழ்ச்சி, வெளியிட வாழ்க்கை, அந்நியர் பகை, குடும்ப மேன்மை, உத்தியோக முயற்சி, புதிய பதவி நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் நன்மை, பணச்சிக்கல், கடன்படல், பெரியோர் உதவி, திடீர் பிரயாணம், குடும்பசுகம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், பரீட்சைகளில் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 01.

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் சிறப்பு, பொருள் வரவு, மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி, கௌரவம், குடும்ப நன்மை, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் உயர்ச்சி, பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், வெளியிடத் தொல்லை, குடும்பக் கஷ்டம், உத்தியோக முயற்சி, மனமகிழ்ச்சி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், பயனுள்ள செயல், குடும்பப் பாரம், உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் கலக்கம், மனப் பயம், பொருள் இழப்பு, வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி, குடும்பக் கஷ்டம், எதிர்பாரா பிரயாணம், உத்தியோகக் கலக்கம், வீண் மனஸ்தாபம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை
கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6
நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்...
செய்திகளாய்...
நமது காதுகளில்

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது


| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |




லெபனான் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் படைவீரர்களில் ஒருவர், பீரங்கிப்படை தொகுதியில் நிம்மதியாக உறங்குகிறார்.

## இஸ்ரேல் வீசும் அமெரிக்க குண்டு!



## அழகி





## ஓட்டம்



நிலக்கரிப் பொதியைச் சுமந்துகொண்டு விரைவாக ஓடிச் சென்று சாதனை படைத்தவர்களின் பெயர்களும் கின்னஸ் புத்தகத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. 1991ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி நடைபெற்ற போட்டியிலே ஐம்பது கிலோ கிராம் எடையுள்ள நிலக்கரிப் பொதியைச் சுமந்துகொண்டு 1,012.5 மீற்றர் (3,322 அடிகள்) தூரத்தை நான்கு நிமிடங்கள் ஆறு செக்கன்களுக்குள் ஓடி பிரிட்டனைச் சேர்ந்த டேவிட் ஜோன்ஸ் என்பவரே இச் சாதனையைப் புரிந்துள்ளார்.

இவ்வருட உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட பொட்டே ரிக்கா லெண்டோலா என்ற 18வயது அழகி சூட்டப்பட்ட 40 நிமிடங்களின் பின்னர் மயங்கி விழுந்தார். 5 அடி 9 அங்குல உயரம் கொண்ட இந்த அழகி லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள சிறைன் அரங்கில் செய்தியாளர் மாநாடொன்றில் கலந்து கொண்டிருக்கையிலேயே மயங்கி விழுந்தார். உடலைச் சிக்கெனப்பிடிக்கும் ஆடையணிந்திருந்த அவர், கூடிய வெப்பம் காரணமாகவே மயங்கி விழுந்தாரென்று போட்டி உதவி

யாளர் ஒருவர் கூறினார். உலக அழகி மயங்கி விழுந்ததும் பாதுகாப்பு ஊழியரொருவர் அவரைத் தூக்கிச் சென்றார். 55 ஆவது உலக அழகு ராணிப் போட்டியில் தெரிவான இவர், இறுதிப் போட்டிக்கு தெரிவான 5 உலக அழகிகளில் மிகவும் வயது குறைந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. எச்.ஐ.வி.எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக சேவையாற்றுவதே தனது நோக்கமெனவும் இவர் குறிப்பிட்டார்.



## ஐஸ்



உலக அழகுராணி, பிரபஞ்ச அழகுராணி, இந்திய அழகுராணி, மும்பை, சென்னை, அழகுராணி என்பது போல, அண்மையில் கேன்ஸ் எனும் அமைப்பு நடாத்திய ஓர் பிரமாண்டமான விழாவில் வாசனை அழகு ராணி தெரிவு செய்யப்பட்டார். இதில் நீட்ட தூல்லா என்ற தெரிவு செய்யப்பட்ட வாசனை அழகு ராணிக்கு முடி சூட்டிய முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய், விழா முடிவடைந்து வெளியேறிய போது காற்றில் ஒரு முத்தம் கொடுத்தார். அப்போது முன்னால் நின்றிருந்தவர்கள் விலேக் ஒப்ராய், அஜெய் தேகன், கரன் ஜோகர் ஆகியோர், இதில் யாரை இலக்கு வைத்து முத்தம் பறக்கவிட்டார் என்பதுதான் இப்போது பொலிவூட்டில் ஆயிரம் மில்லியன் டொலர் கேள்வி.

## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி சயானா – 10.08.2006

சுவிஸில் வசிக்கும் சுரேஸ்வரன் (சுரேஸ்) - சிவதர்ஷினி (தர்ஷி)
தம்பதிகளின் செல்வப் புதல்வி சயானா தனது முதலாவது பிறந்த நாளை
10.08.06 அன்று சுவிஸில் உள்ள தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை அன்பு அப்பா, அம்மா, அக்கா சந்தியா, கனடாவில் வசிக்கும்
தாத்தா, அம்மம்மா, மாமா, மாமி, மச்சான் சாகித்யன், பெரியப்பா,
பெரியம்மா, யது அக்கா, உஷாத் அண்ணா, சித்தப்பா, சித்தி, பிரான்சில்
வசிக்கும் சித்தப்பா, சித்தி, சாரு அக்கா, இலங்கையில் இருக்கும்
அப்பம்மா, அத்தைமார், பெரியப்பாமார், பூட்டி அனைவரும் நீர்வேலி
அரசகேசரி பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பா,அம்மா (சுவிஸ்)

## மகரந்தம்



பூவின் மகரந்தத்தை தேடி தேனீக்கள் செல்வது வழமைதான். ஆனால், இங்கே பூவிலிருந்தும் மகரந்தத் தூளை தேனீ ஒன்று சேகரிப்பதை படப்பிடிப்பாளர் ஒருவர் தமது கெமராவில் தத்ரூபமாகக் கிளிக் செய்துள்ளார்.

## பல் சுத்தம்



லண்டனில் உள்ள மிருகக் காட்சிச் சாலை ஒன்றில் நீர்யானை ஒன்றிற்கு பராமரிப்பாளர் ஒருவர் பல் துலக்கி விடும் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள். சாதாரணமாக ஒருவர் ஒரு நாளுக்கு இரு தடவை பல் துலக்குவது சுகாதாரம். அதேவேளையில் மூன்று வாரத்துக்கு ஒரு தடவை பற்தூரிகைகளை மாற்றுவதும் ஆரோக்கியம் என்று கூறுகிறார்கள்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ் 16 A ஆம் இலக்கத்தில் டிடி எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமணல கிராபிக்ஸ் அச்சகத்தில் ஆக. 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.